# திராவிடப் பொழில்

திராவிட ஆய்விதழ்

# DRAVIDA POZHIL

The Journal of Dravidian Studies

October - December 2024 Quarterly Vol. 4, Issue 4



Patron
**Dr. K.Veeramani**
Chancellor

Editorial Board
Prof. **Dr. M. Naganathan**
Prof. **Dr. P. Jagadeesan**
Prof. **Dr. P. Kalimuthu**
Prof. **Dr. Sp. Thinnappan**
Prof. **Dr. Nam. Srinivasan**
Prof. **Dr. Kannabiran Ravishankar**
**Dr. V. Neru**
**Dr. Soma Ilangovan**



Published by
**Centre of Excellence for Periyar Thought**
**Periyar Maniammai Institute of Science and Technology**
(Deemed to be University)
Vallam, Thanjavur - 613403
Tamil Nadu, India.

Language
**Bi-lingual**

| | |
|---|---|
| Single Issue (India) | Rs.200/- |
| Annual Subscription (India) | Rs.800/- |
| Single Issue (International) | $15 |
| Annual Subscription (International) | $50 |

Designed & Printed at:
**PMIST Press**
Vallam, Thanjavur - 613403
Tamil Nadu, India.

Tel: (91) 98401 32684
Email: *dravidapozhil@pmu.edu*

Visit our Website at
**dravidapozhil.pmu.edu**



1. **THE LEGACY OF THE TAMILS VIS-À-VIS IRON & EARLY CIVILIZATIONS**
*(An elementary introduction)*
**V.Chockalingam** .................... 7

2. **போராட்டங்களும் சமூகநீதிப் பாடங்களும்**
முனைவர் **நா.சுலோசனா**
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை).......... 13

3. **சமய அமைப்பு விதிகள்: ஒரு சடலக்கூராய்வு**
பேராசிரியர் **மணி கோ.பன்னீர்செல்வம்**
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை)........ 25

4. **மதுவின் வரலாறு - விலக்கு சாத்தியக்கூறுகள்**
எழுத்தாளர் **ஞான. வள்ளுவன்** ................ 43

5. **தொன்மங்களைக் கட்டுடைத்துத் திராவிடச் சித்தாந்தம் காத்த கலைஞர்**
பேராசிரியர் முனைவர். **இ.கி.இராமசாமி**
(மேனாள் தலைவர், தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை).................... 69

- சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும், சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடி,
- ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும், வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து,
- எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய, நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில்,
- சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும்,
- சக மனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும்,
- சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்!

# சமத்துவ நாள் உறுதிமொழி!

**(தமிழ்நாடு அரசு – 14.04.2022)**

# ஆசிரியர் குழுவின் முகவுரை

**திராவிடப் பொழில் வாசகர்களுக்கு, நனி மிகு வணக்கம்!**

இவ்விதழ் காலந்தாழ்த்தி வந்தமைக்கு, வாசகர்களாகிய உங்களிடம் பொறுத்தருளல் கோருகிறோம். பல்வேறு அலுவல் பணிகளாலும், கட்டுரையாசிரியர்களின் நேரம் கருதியும், இக்காலத் தாழ்வு ஏற்பட்டு விட்டது. ஆனாலும், தேனீக்களாகிய வாசகர்கள், 'இதழ் எங்கே?' என்று எம்மைத் துளைத்தெடுத்து, ஊக்கமளித்து, எம்மை வெகுவாக முடுக்கி விட்டனர்.

ஓர் ஆய்விதழ் என்பது வெறும் கட்டுரைத் தொகுப்பாக அமைந்து விடாது, ஆய்வுத் தரமுள்ள கட்டுரைத் தொகுப்பாக அமைவதே சாலச் சிறந்தது. அதன் அடிப்படையில் தான், காலத் தாழ்வு ஏற்பட்டாலும், நல்ல ஆய்வுத் தொகுப்புகளுக்காகக் காத்திருந்து பதிப்பிக்கின்றோம். தங்களின் நற் புரிதலை வேண்டுகிறோம்.

**தோன்றின் புகழொடு தோன்றுக - அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று!**

என்று இதைத் தான் திருவள்ளுவரும் புகழ் அதிகாரத்தில், தரத்தின் உளவியலாகக் காட்டிச் சென்றார்.

நம் ஆய்வுத்தாள்கள், அறிவுப்புலத்தில் பலவாறாகப் பேசப்பட்டும், மீளாய்வு செய்யப்பட்டும் உள்ளன. இக்கல்விப் பயணத்தில், பல கட்டுரையாளர்களும் பல்வேறு

பல்கலைக்கழகங்களிலிருந்து இணைந்துள்ளனர். எம்முடன் பயணித்து, பங்களிப்பு நல்கும் வாசகர்களாகிய உங்களுக்குத் தான் எம் அத்துணை நன்றியறிதலும்!

இவ்விதழ், 5 ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

1. **இரும்புக் காலமும் ஆதி நாகரிகங்களும், அதனூடான தமிழர்களின் தொன்மமும்**
2. **போராட்டங்களும் சமூகநீதிப் பாடங்களும்**
3. **சமய அமைப்பு விதிகள்: ஒரு சடலக்கூராய்வு**
4 **மதுவின் வரலாறு – விலக்கு – சாத்தியக்கூறுகள்**
5. **தொன்மங்களைக் கட்டுடைத்துத் திராவிடச் சித்தாந்தம் காத்த கலைஞர்**

திராவிடப் புலமை சார்ந்த இந்தக் கல்விப் பயணத்தில் தொடர்ந்து பயணிக்க உங்கள் ஆதரவைக் கோருகின்றோம். ஆய்வுக் கட்டுரைகளை வாசித்து, உங்கள் கல்விப் புலத்தில் பகிர்ந்து, அறிதல் பயணத்தில் மகிழ்வீராக!

- ஆசிரியர் குழு

*o* பேரா. முனைவர். மு.நாகநாதன்
*o* பேரா. முனைவர். பெ.ஜெகதீசன்
*o* பேரா. முனைவர். சுப.திண்ணப்பன்
*o* பேரா. முனைவர், ப.காளிமுத்து
*o* பேரா. முனைவர். நம்.சீனிவாசன்
*o* பேரா. முனைவர். கண்ணபிரான் இரவிசங்கர்
*o* முனைவர். வா.நேரு
*o* மரு. சோம.இளங்கோவன்

# Preface from the Editors

**Vanakkam to our beloved readers of the Dravida Pozhil journal!**

First and foremost, we wish to express our deep regret to our dear readers, for the extreme delay in the release of this issue. Owing to official projects and time constraints of the scholars, this delay had seeped in. In spite of this impediment, the busy bees of our Readership have flooded us with incessant queries about the release of the journal. It's this kind of motivation that keeps us going.

A Research Journal is not merely a collection of simpleton essays, but an unique collection of papers soaked in the quality of deep academic research. Only based on this mission, even if delays seep in, we were waiting for professional papers from scholars in multifarious fields and then proceed with the publishing of the journal. Appreciate your patience and understanding.

Appear, if you must, for fame - Or else

Better not to appear at all.

Thus spake Thiruvalluvar on this psychology of excellence and quality in scholastics.

Our Papers have been circulated and discussed and re-researched at various levels of the Academia. In this Journey of Education, contributors from different Universities have joined us. To our Readers - who have been travelling with us, we owe our foremost appreciation.

This issue of Dravida Pozhil features 5 Papers.

1. **The Legacy of the Tamils vis-à-vis Iron & Early Civilizations**
2. **Social Struggles & Lessons on Social Justice**
3. **Rules of the Organized Religion – A dissection**
4. **Prohibition of Alcohol – History & Probability**
5. **Kalaignar's myth-breaking and uphold of Dravidian philosophy**

In this journey of enhancing Dravidian Education & Scholastics, we seek your active support. Please read these research papers and share them with your academic peers widely. After all, sharing is caring and the joy of knowledge.

- **The Board of Editors.**

- Prof. Dr. M. Naganathan
- Prof. Dr. P. Jagadeesan
- Prof. Dr. Sp. Thinnappan
- Prof. Dr. P. Kalimuthu
- Prof. Dr. Nam. Srinivasan
- Prof. Dr. Kannabiran Ravishankar
- Dr. V. Neru
- Dr. Soma Ilangovan

# THE LEGACY OF THE TAMILS VIS-À-VIS IRON & EARLY CIVILIZATIONS

## (AN ELEMENTARY INTRODUCTION)

**V. Chockalingam**




**Abstract :**

*Recent archaeological excavations in Tamil Nadu have uncovered Iron artifacts in places like Kodumanal, Mayiladumparai, Adichanallur, and Sivagalai. These discoveries challenge the previous claim that the Iron Age began around 1200 BCE in West Africa. The Tamil Nadu government released a research report stating that Iron usage in Tamil Nadu dates back to 3345 BCE (5,370 years ago), proving that Iron was used in the Tamil land long before many other regions of the world.*

*In such a background, this essay affirms that the history of the Indian subcontinent may need to be rewritten. Archaeological findings and genetic studies suggest that the Tamil land played a central role in the development of culture, society, and technology, long before the rise of the Aryan civilization and other ancient cultures in India. This essay also outlines that understanding our past is essential, not as a means of glorification but as a path toward shaping the future.*

## Introduction:

Recent archaeological excavations in Tamil Nadu have uncovered Iron artifacts in places like Kodumanal, Kilnamandi, Mayiladumparai, Adichanallur, and Sivagalai. These discoveries challenge the previous claim that the Iron Age began around 1200 BCE in West Africa. On January 23, 2025, the Tamil Nadu government released an unprecedented research report stating that Iron usage in Tamil Nadu dates back to 3345 BCE (5,370 years ago), proving that Iron was used in the Tamil land long before other regions of the world.




[Fig. 1 – The research publication released by Govt. of Tamil Nadu on the Antiquity of Iron]

**Tamils and Iron: A Technological Leap Ahead:**

It was once believed that the Iron Age in the Indian subcontinent began around 1400 BCE, with the Aryans credited for discovering Iron. However, recent studies confirm that the Tamil people were already using advanced Iron extraction techniques long before the Aryans. This establishes that Tamil civilization was technologically advanced in Iron usage.

The idea that the Aryans introduced Iron to India has now been debunked. Tamil people were already using Iron before the Vedic period, suggesting that Tamil civilization predates Aryan influence and had a technological advantage over other cultures, and resonating beyond the Indus Valley Civilization.

**Technological Development: A Comparison with the Indus Valley**

Beta Carbon Dating suggests that Iron usage in Tamil land predates the Indus Valley Civilization. While the Indus Valley people mainly used copper, the ancient Tamils had already started working with Iron. This shows that technological development in the geographic region of the South Indian Tamil land was ahead of the Indus Valley, which was more dependent on Bronze & copper-based technologies.

In the broader context of technological ages - namely Stone Age, Bronze Age, and Iron Age, the Tamil land advanced much faster than the Indus Valley. This suggests that the ancient Tamils were not only innovative but ahead of their time, surpassing the capabilities of many other cultures.

**Dravidian Tradition: A Shared Heritage**

While the technological differences were notable, the people of the Indus Valley and the Tamil land shared a common Dravidian heritage. Both civilizations spoke Proto-Dravidian, the precursor to the modern Dravidian languages. Over time, these languages evolved into distinct forms, such as Tamil, Telugu, Kannada, Malayalam, and Tulu, forming the linguistic backbone of the South Indian subcontinent.

Though they had different technologies and cultures, the people of the Indus Valley and Tamil Nadu were part of the same Dravidian tradition. The later Aryan migration influenced the region, but Dravidian culture rooted in South India, is considered the foundation of ancient Indian civilization.

**A Glimpse into the Past: Kodumanal Sword**

Kodumanal, a city in Erode, is famous for its advanced steel production, especially the Wootz steel, which played a crucial role in creating weapons like the Damascus sword. This technological innovation had a lasting impact on metallurgy, influencing sword production globally.

As early as 5300 years ago, the Tamil people were producing high-quality steel. The Wootz steel from Kodumanal was known for its sharpness and quality, a reputation that lasted throughout history, especially during the Chera, Chola and Pandya empires. This technology spread worldwide, influencing regions like Syria and ancient Rome.

**The Silence of BJP Leaders:**


Despite the significant discoveries related to Tamil Nadu's ancient Iron tradition, many BJP leaders have remained silent on the subject. The only prominent national leader who has shown interest in Tamil Nadu's Iron Age is the Leader of the Opposition in Lok Sabha, Mr. Rahul Gandhi from the Indian National Congress. Political discourse often overlooks these important archaeological findings. As the Chief Minister of Tamil Nadu, Mr. M.K. Stalin rightly stated, “The history of the Indian subcontinent must now start from Tamil Nadu” recognizing the region’s role in early technological advancements.

**Out of Africa Theory: Virumandi**

Recent archaeological discoveries support the theory that human history in Indian subcontinent might have started in Tamil Nadu. According to the "Out of Africa" theory, humans migrated from Africa to India around 60,000 years ago. A 2008 study by scientist Rm. Pitchappan found that a Tamil man named Virumandi carried the ‘M130’ genetic marker, supporting this theory. This, along with early Iron usage, positions the ancient Tamil land as a possible cradle for the rise of human civilization in the subcontinent.

**Insights from the Indus Valley Civilization**

The Iron Age in the Tamil land not only features advanced technological developments, but also offers intriguing insights into Dravidian tradition, shedding light on the connection between Tamil Nadu and the Indus Valley Civilization (IVC). The IVC script, analysed by the renowned epigraphist Iravatham Mahadevan, features square-shaped symbols that may represent settlements or forts, suggesting early Tamil dynasties might have been part of the broader Indus Valley civilization. Artifacts from the Indus Valley show craft-based professions, and symbols like the fish sign, from the emblem of ancient Tamil kings - the Pandyas and their city layout of Madurai, indicating deep ties between these civilizations. These findings support the idea that ancient Tamil dynasties were integral to the Indus Valley’s cultural fabric.




[Fig. 2 – The IVC Fish sign and Emblem of an ancient Tamil kingdom]


The Indus Valley was an urban civilization reflecting Dravidian cultural traditions, while the Vedic culture was centered around village-based pastoralism. Additionally, some Indus Valley seals show animals like the oxen, but no horses - a key difference, as horses arrived later with the Aryans.

The discovery of the Indus Valley Civilization, considered pre-Aryan and Dravidian, along with the discovery of the Iron Age in Tamil Nadu, allows for a newer understanding of the relationship between Tamil Nadu and IVC. Further research into migrations within India could provide valuable insights into these connections.

In summary, ongoing archaeological research and studies of Sangam literature have the potential to offer valuable insights into both cultures, enhancing our understanding of their interactions and contributions to history.

**Madurai: The Evolution of a City**

Madurai, an ancient city in Tamil Nadu, holds significant historical and cultural importance. The city's layout, with its concentric square streets, reflects the architectural sophistication found in the square-shaped symbols and settlements of the IVC, further reinforcing the significance of both the Indus Valley and Tamil Nadu in historical narratives. Additionally, according to interpretations of the early Tamil text Paripadal by the scholar Thamizhannal, the Meenakshi Amman temple was likely originally a royal palace for the Pandyas, which later evolved into a temple. This transformation may have occurred after the defeat of Kalabhras by the Pandyas. Subsequently, the Pandyas ruled from Manalur, located near Keezhadi (close to Madurai).




[Fig. 3 – Town Planning architecture of ancient Madurai city]

**Keezhadi: A Window into Early Tamil Civilization**

Keezhadi, a key archaeological site in Tamil Nadu, provides more evidence of the complexity of ancient Tamil civilization. Excavations have unearthed items such as Tamil-Brahmi inscriptions, pottery, jewelry, and evidence of trade with the ancient Roman Empire. Keezhadi, along with other sites like Adichanallur and Poompuhar, offers a glimpse into the cultural, technological, and industrial practices of the early Dravidian civilization.



[Fig. 4 – Some excavations from the Keezhadi archaeological site]

**Conclusion:**

Ongoing research sheds more light on Tamil Nadu's role in shaping human civilization. It is becoming increasingly clear that the history of the Indian subcontinent may need to be rewritten. Archaeological findings and genetic studies suggest that Tamil Nadu played a central role in the development of culture, society, and technology, long before the rise of the Aryans and other ancient cultures in India.

Understanding our past is essential, not as a means of glorification but as a path toward shaping the future. As we continue to uncover the historical truths hidden in Tamil Nadu's soil, we must appreciate the depth and richness of our heritage and recognize its significant contributions to human progress.

**References:**


1. A Harappa Site in South India - https://swarajyamag.com/culture/there-is-no-real-connection-with-harappa-a-ground-report-from-keeladi-madurai
2. A Tale of Wootz Steel - https://www.ias.ac.in/article/fulltext/reso/011/06/0067-0077
3. Agastya Legend and the Indus Civilization - https://web.archive.org/web/20110728142006/http://www.ulakaththamizh.org/JOTSpdf/030024037.pdf
4. Alexander wanted Steel from Tamil Nadu - https://www.youtube.com/watch?v=fAJWp34Xs5c
5. Ancient High-carbon Steel from Tamil Nadu - https://asc.iitgn.ac.in/assets/publications/research_papers/High_Carbon_Steel_S_TN_Current_Science_2021.pdf
6. Antiquity of Iron - https://drive.google.com/file/d/1wlgQHHdq0VEFctrM6gAzpPNfeyrY0Yqi/view?pli=1
7. Development of Iron and Steel Technology in India - https://cahc.jainuniversity.ac.in/assets/ijhs/Vol17_2_3_HCBhardwaj.pdf
8. Harappa like Site Surfaces in Tamil Nadu - https://timesofindia.indiatimes.com/city/madurai/Harappa-like-site-surfaces-in-Tamil-Nadu/articleshow/52495353.cms?from=mdr
9. Keezhadi - 2,600 Year Legacy of Civilisation - https://www.newindianexpress.com/states/tamil-nadu/2024/Mar/29/keezhadis-2600-year-legacy-of-civilisation
10. Keezhadi Museum - https://keeladimuseum.tn.gov.in
11. Kodumanal - Archaeology Department - http://www.tamilvu.org/tdb/titles_cont/inscription/html/kotumanal_akalayvu.htm
12. Kodumanal - The City that Clothed Rome - https://www.thehindu.com/society/history-and-culture/kodumanal-the-city-that-clothed-rome/article28097245.ece
13. Meluhha and Agastya: Alpha and Omega of the Indus Script -https://www.harappa.com/sites/default/files/pdf/meluhha_and_agastya_2009.pdf
14. New Study Connects Tamil Nadu with Indus Valley Civilisation - https://www.hindustantimes.com/india-news/

new-study-connects-tamil-nadu-with-indus-valley-civilisation/story-ESlR55vEIZQPvq2Q0jXeVP.html

15. Tamils Knew Use of Iron 4000 Years Ago - https://www.deccanherald.com/india/tamils-knew-use-of-iron-4000-years-ago-archaeological-findings-show-1107771.html

16. Technology of Iron and Steel in Tamil Nadu -https://insa.nic.in/writereaddata/UpLoadedFiles/IJHS/Vol34_4_1_BSasisekaran.pdf

17. The Revealing Tales of the Ancient Tamil Nadu Vessels - https://researchmatters.in/news/revealing-tales-ancient-tamil-nadu-vessels

18. Wootz Steel before European Industrial Revolution - https://www.youtube.com/watch?v=9z7xlroMCZw

19. Wootz Steel Story Presentation - https://www.toppr.com/ask/content/story/amp/story-of-wootz-steel-87488/

20. "Out of Africa" Theory in Tamil Nadu - https://www.telegraphindia.com/entertainment/the-first-indians/cid/591562

**About the Author:**

*V. Chockalingam is a writer and thinker from Madurai known for his intellectual curiosity. He holds degrees in Electronics Engineering and Business Management. He has a deep passion for reading and discussing topics such as politics, science, religion, history, and cinema. His motto in life is "Thinking, Exploring, sharing" and that reflects his commitment to continuous learning and sharing knowledge. In July 2020, during the pandemic, he started his blog (chocksvlog.blogspot.com) which led to 191 blog posts and the publication of several books, including 'Dravida Mannil Aariyargalin Panpaattu Padaiyeduppu', 'Thanthai Periyar Or Arimugam', 'Aanaiyangalum Varalarum', 'Ayodhya Vazhakku', and 'Panguchanthai Mosadikal'. These works focus on providing valuable insights into various important topics.*

* * *

# போராட்டங்களும் சமூகநீதிப் பாடங்களும்

முனைவர் நா. சுலோசனா
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை)



**கட்டுரைச் சுருக்கம்:**

*திராவிட இயக்கத்தின் கொள்கைகளுக்கு அடிவேரும் ஆணிவேர்களுமாக இருப்பவை தமிழின மேம்பாடு, தமிழ்மொழி மேம்பாடு, சமூகநீதி, பகுத்தறிவு ஆகியனவே ஆகும். அத்தனைக்கும் பொதுவாக அமைந்துள்ள ஒரே கோட்பாடு சமூகநீதி தான்.*

*சமூகநீதியை நிலைநாட்ட வேண்டும் என்ற வேட்கையில் வடஇந்தியாவில், சமூகச் சீர்திருத்தப் புரட்சிக்கு வித்திட்ட சமூகநீதி ஆளுமைகளான சாஹூ மஹாராஜ், ஜோதிராவ் புலே, சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் இவர்களின் மாபெரும் பங்களிப்பினால் தான், சமூகநீதியை இன்று வரை, நாம் முன்னெடுக்க முடிகிறது. அவ்வண்ணமே தமிழ்நாட்டில், திராவிடக் கொள்கைகளை முன்னெடுத்த புரட்சியாளர் தந்தை பெரியாரின் அயராத உழைப்புக்குக் கிடைத்த பயனால், 1967இல், சுயமரியாதைத் திருமணச் சட்டம் இயற்றப்பட்டது. ஆண்கள் மட்டுமல்லாமல் பெண் புரட்சியாளர்களும் தந்தை பெரியாரின் கருத்தியலை இந்தச் சமூகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் முக்கியப் பங்காற்றியிருக்கின்றனர்.*

*தந்தை பெரியார் எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்திருக்கிறார். அது ஒரு பக்கம் என்றால் பெண்களின் போராட்டங்கள் இன்னொரு பக்கம். வீட்டைவிட்டு வெளிவர இயலாமல் சமூக அடக்குமுறைக்கு ஆட்பட்ட காலங்களில், பெண்களின் போராட்ட வலிமை பல பாடங்களைக் கற்றுக் கொடுத்திருக்கின்றன. இன்றைய போராட்டங்களுக்கெல்லாம் முன்னோடியாக நூறு ஆண்டுகளுக்கு முன்பே, பெண்கள் பல போராட்டங்களைக் கையில் எடுத்திருக்கிறார்கள். அது குறித்து அறிந்துகொள்ளும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.*

**முதன்மைச் சொற்கள்:**

நாகம்மையார், கண்ணம்மையார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், மீனாம்பாள் சிவராஜ், மருத்துவர் தருமாம்பாள், குஞ்சிதம் குருசாமி, வீரம்மாள், பெண் விடுதலை, சுயமரியாதைத் திருமணம், தேவதாசிமுறை ஒழிப்பு, குடும்பநலத் திட்டம், கைம்பெண் மறுமண ஆதரிப்பு.

**1. போராட்டக் களங்களில் நாகம்மையார்:**

காந்தியாரிடம் மதுவிலக்குப் போராட்டத்தைத் திரும்பப் பெறுமாறு கேட்டபோது மும்பையிலிருந்து அவர் சொன்னார், 'அது என் கையில் இல்லை; ஈரோட்டிலிருக்கும் இரண்டு பெண்கள் கையில் தான் இருக்கிறது' என்று! 1924ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் தேதி வைக்கம் சத்தியாகிரகத்தில் பங்குபெற நாகம்மையார், எஸ்.ஆர். கண்ணம்மாள், திருமதி. எம்பெருமாள் நாயுடு, திருமதி. கோவிந்தன் சாணார், திருமதி. தாணுமாலயப் பிள்ளை ஆகியோர் தடையை மீறி சத்தியாகிரகத்தில் கலந்து கொள்ளச் சென்றனர். வைக்கம் போராட்டத்தில் பெரியார் சிறைபிடிக்கப்பட்ட பின், அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வைக்கம் சென்ற தன்னிடம், 'ஜாதி

என்ன?' என்று கேட்ட காவலர்களிடம் உணர்ச்சிப் பெருக்கோடு வாதிட்டார் அன்னை நாகம்மையார். ஆண்களின் போராட்டத்தை எளிதாகக் கையாண்ட அரச அதிகார வர்க்கம், பெண்களின் இந்தப் போராட்டத்தைக் கண்டு திகைத்துப் போனது. பல்வேறு ஜாதி மறுப்புத் திருமணங்களையும், தாலி மறுப்புத் திருமணங்களையும் தானே முன்னின்று நடத்தி வைத்தார் அம்மையார். பெரியாரின் அனைத்துப் பணிகளுக்கும் உறுதுணையாக இருந்ததுடன் இயக்கத் தோழர்களை அன்புடன் அரவணைத்து அன்னையாகத் திகழ்ந்திருக்கிறார். குடிஅரசு பத்திரிகையின் பதிப்பாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

1933இல் நாகம்மையார் மறைந்தபோது எழுதிய இரங்கலில், தான் காங்கிரசிலிருக்கும் போது மறியல் விஷயங்களிலும், வைக்கம் சத்தியாகிரக விஷயத்திலும் நாகம்மாள் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்தது எனக் குறிப்பிடுகிறார் பெரியார். 'வீட்டின் ஒரு மூலையில், பேடெனப் பதுங்கிக் கிடந்த நாகம்மையார், தீண்டாமை எனும் பேயை வெட்டி வீழ்த்துவான் வேண்டி, வைக்கம் சத்தியாகிரகப் போரில் புகுந்து சிறை சென்று, அரசாங்கத்தை நடுங்கச் செய்ததுடன் அமையாது வாகை மாலையும் சூட்டினார்' (விடுதலை, 11.12.2024, ப.5) என்று வைக்கம் போராட்டத்தில் நாகம்மையாரின் பங்களிப்புக் குறித்துத் திரு.வி.க அவர்களும் (திரு.வி.கல்யாணசுந்தரனார்) புகழாரம் சூட்டியிருக்கிறார்.

### 2. பொறுப்பாசிரியராக எஸ்.ஆர். கண்ணம்மாள்:

அன்னை நாகம்மையாருடன் இணையாக அனைத்துப் போராட்டங்களிலும் பங்குபெற்ற இவர், அம்மையாருக்குப் பிறகு குடிஅரசு இதழ் பொறுப்பாசிரியராகப் பணியாற்றினார். அதன் பிறகு நடத்தப்பட்ட 'புரட்சி' இதழிலும், பொறுப்பாசிரியராக இருந்தார். 'அனாவசியமானதும் அர்த்தமற்றதுமான சடங்குகளை ஒழித்து, அதற்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு ஏழை மக்களுக்குப் படிப்பூட்டினால் மிகவும் நன்மை ஆனதும் பிரயோஜனமானதாகவும் இருக்கும்' என்றார்.

### 3. பொட்டறுப்பு மாநாடு நடத்திய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்:

தந்தை பெரியாரோடு இயக்கப் பணிகளில் இணைந்து இயங்கியவர். பல போராட்டக் களங்களைக் கண்டவர். பெண்கள் சமூகத்திற்கு அடையாளமாய்த் திகழ்ந்தவர். அர்ப்பணிப்போடு திராவிட இயக்கக் கொள்கைகளைக் கொண்டுபோய்ச் சேர்த்தவர். சமூகப் புரட்சியாளர். அவருடைய வாழ்க்கை, பெண் சமூகத்திற்கு ஓர் உந்துசக்தி. தேவதாசிப் பெண்களுக்காகத் தொடர்ந்து போராடி அவர்களின் சுயமரியாதையை மீட்ட மீட்பர். இத்தனைக்கும் முகவரியாக இருந்தவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். 27.06.1962இல் அம்மையார் மறைந்தபோது,

**வீரத்தாயை இழந்தோம்!**
**பால் நுரை போல் தலை.**
**தும்பை மலர் போல் உடை!**
**கம்பீர நடை!**
**கனல் தெறிக்கும் பேச்சு !**
**அனல் பறக்கும் வாதத்திறன்!**
**அநீதியை சுட்டெரிக்கச் சுழலுகின்ற கண்கள்!**
**அடிமை விலங்கு தகர்த்தெறிய ஆர்ப்பரிக்கும் உள்ளம்!**
**ஓயாத பணி!**
**ஒழியாத அலைச்சல்!**

என்று இரங்கல் பாவாக எழுதிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 'வீரத் தாயை இழந்தோம்' என்று அம்மையாரின் புரட்சி மனத்தை நம் கண்முன் காட்சிப்படுத்தி இருக்கிறார்.

திருமண உதவித் திட்டம் என்றாலே அம்மையார் பெயர் தான் நினைவுக்கு வரும். அம்மையாரின் நினைவாக 1989ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு கொண்டுவந்த 'மூவலூர் இராமாமிர்தம் நினைவு திருமண உதவித் திட்டம்' முதல், இன்றைய அரசின் உயர்கல்வி உறுதித் திட்டம், புதுமைப்பெண் திட்டம் எனப் பரிணமித்திருப்பவை எல்லாம் பெண்கல்வியை, பெண் சமூகத்தை உயர்த்தும் திட்டங்களே!

தேவதாசிச் சமூகத்தில் பிறந்து அந்தச் சமுக இழிவு ஒழியப் பொது வாழ்வுக் களம் கண்டவர். பெரியாருடன் இணைந்து தனது போராட்டக் களத்தை முன்னெடுத்தவர். வீடு, வீடாகச் சென்று தனது இலட்சியத்துக்காகப் பரப்புரை செய்தவர். தந்தை பெரியார், வரதராஜலு (நாயுடு), தண்டபாணிப் (பிள்ளை) ஆகியோர் துணையுடன் நாகபாசத்தார் சங்கம் என்ற அமைப்பைத் தோற்றுவித்து, தேவதாசி முறை ஒழியப் பாடுபட்டவர். தாழ்த்தப்பட்ட மக்கள் வேட்டி உடுத்தியதைச் சிலர் கேள்வி கேட்டார்கள் என்பதற்காக அவர்கள் 'வேட்டி உடுத்தும் போராட்டம்' நடத்தினார். இந்தி எதிர்ப்புப் பேரணியில் முன்னின்று கலந்து கொண்டவர். மருத்துவர் முத்துலட்சுமி (ரெட்டி) அவர்களுக்கு முன்பே தேவதாசி ஒழிப்பு முறைக்காகப் பேசியும் எழுதியும் போராடியவர் அம்மையார். 1925இல் மயிலாடுதுறை, மாயவரத்தில் 'பொட்டறுப்பு மாநாடு' நடத்தி, அதே மேடையில் தேவதாசிக் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட தம் இனப் பெண்களுக்குத் திருமணத்தைச் செய்து வைத்த புரட்சியாளர். அவர்களின் வரலாற்றைத் 'தாசிகளின் மோசவலை' அல்லது 'மதி பெற்ற மைனர்' (1933) எனும் புதினமாக எழுதி, தாசிகளின் அவல நிலையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தவர். அதை ஒரு பிரச்சாரக் கருவியாக மாற்றிக் கொண்டார். 'தேவதாசிகள் என்ற கூட்டமே ஆரியப் பார்ப்பனர்களிடமிருந்து தான் உற்பத்தியாகியிருக்க வேண்டும்' என்று தமது புதினத்தின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## முதலெழுத்தில் புரட்சி:

1937இல் வெளிவந்த இந்த நூலில் ஆ. இராமாமிர்தம் என்றே எழுதியுள்ளார். 'ஆ' என்பது தன்னுடைய தாய் பெயரும் அல்லாமல், தந்தை பெயரும் அல்லாமல் தன்னை வளர்த்த வளர்ப்புத் தாயின் பெயரான ஆச்சிக்கண்ணு என்பதில் 'ஆ' என்பதை முதல் எழுத்தாகச் சேர்த்து, அன்றே அறிவார்ந்த புரட்சியைச் செய்தவர். சுயமரியாதை, பகுத்தறிவு, பெண்கல்வி, பெண் உரிமையை மீட்பது, மொழிச் சிந்தனை, சமூகப் புரட்சி இவற்றின் ஒட்டுமொத்த அடையாளமாகத் திகழ்ந்தவர் தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.

## 4. சமூகத்தில் சமநிலை காண விழைந்த அன்னை மீனாம்பாள் சிவராஜ்:

1904இல் பர்மாவிலுள்ள ரங்கூனில் பிறந்தவர். பர்மாவிலிருந்து தனது உயர்கல்விக்காக இங்கு வந்தவர். தாழ்த்தப்பட்டோர் இயக்கத் தலைவர் சிவராஜ் அவர்களின் துணைவியார். முதன் முதலாகக் கப்பலோட்டிய மதுரைப் பிள்ளை அவர்களின் பேத்தி. பெரியார் மீது பேரன்பு கொண்டவர். தனது பொது வாழ்வைச் சுயமரியாதை இயக்கத்திலேயே தொடங்கினார். இந்தி எதிர்ப்புப் பேரணியில் சிறப்புரையாளர். பெரியாருக்குப் 'பெரியார்' என்ற சிறப்புப்பெயரை அழைக்க ஏற்பாடு செய்த பெண்களில் முன்னணிப் பங்கு வகித்தவர். 25.12.1927இல் மநுஸ்மிருதியை எதிர்த்து உரையாற்றிய அண்ணல் அம்பேத்கர் 'தீண்டாமையை ஒழிப்பது என்பது ஆண்களை விடப் பெண்களின் கையிலேயே உள்ளது' என்றார். அந்த வாக்கியத்திற்கு உயிரோட்டமாக இருந்தவர் அன்னை மீனாம்பாள். கல்வி ஒன்றால் மட்டுமே சமூகத்தில் உயர்ந்து சமநிலை அடையமுடியும் என்று முழங்கியவர்.

## 5. முன்னேற்றக் கழகம் என்ற சொல்லை அறிமுகப்படுத்திய மருத்துவர் தருமாம்பாள்:

தஞ்சை மாவட்டம் கருந்தட்டாங்குடியில் வாழ்ந்த சாமிநாதன் (செட்டியார்), பாப்பம்மாள் என்ற நாச்சியார் அம்மையார் இணையருக்கு 1890ஆம் ஆண்டு திருவையாற்றில் பிறந்தவர் தருமாம்பாள். இவருக்கு அவரது பெற்றோரிட்ட பெயர் சரசுவதி. பின்னாளில் அவரது பெயர் தருமாம்பாள் என்றழைக்கப்பட்டது. தருமாம்பாள் அம்மையார் சித்த மருத்துவம் பயின்று மருத்துவராகப் பணியாற்றியவர். பெரியாரின் மீதும், பெரியாரின் கருத்துக்கள் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

நாடகங்களில் நாயகன் பாத்திரங்களில் நடித்துப் புகழ் பெற்ற நடிகராக விளங்கியவர் குடியேற்றம் முனிசாமி (நாயுடு) & தருமாம்பாள் அம்மையார் இருவரின் மனமும் ஒன்றியதின் விளைவாக, ஜாதி மறுப்புத் திருமணம் புரிந்து கொண்டனர். மக்கள் தொண்டு புரிவதற்கு மருத்துவத் தொழிலே சிறந்தது என்று தேர்ந்தெடுத்துச் சித்த மருத்துவராக விளங்கி நன்முறையில் தொண்டு செய்3தவர்.

பெண் விடுதலைக்குக் கல்வி முக்கியம் என்பதை உணர்ந்த மருத்துவர் தருமாம்பாள் அவர்கள், பல பெண்கள் கல்வி கற்பதற்கும், கல்லூரிகளில் சேருவதற்கும், வேலை வாய்ப்பினைப் பெறுதற்கும், அப்பெண்களின் வாழ்வு சிறக்கவும் உறுதுணையாக இருந்துள்ளார். தமிழ் மாதர் கழகத்தைத் தோற்றுவித்துப் பெண்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்திருக்கிறார். தமிழ் மாதர் கழகத்தின் தலைவராகப் பண்டிதர் நாராயணி அம்மையாரும், செயலாளராக மருத்துவர் தருமாம்பாள் அம்மையாரும் பொறுப்பேற்றுக் கொண்டு பெண்கல்விக்கு உரமூட்டினர். கல்வி அறிவின்றி அறியாமையில் மூழ்கிக் கிடந்த பெண்களிடையே மண்டிக்கிடந்த மூடப்பழக்கங்களை எடுத்துக்கூறி அவர்களிடையே பகுத்தறிவுப் பிரச்சாரமும் செய்துள்ளார். பல இளம் கைம்பெண்களுக்கு மறுமணம் செய்வித்து அவர்களின் வாழ்வில் வழிகாட்டியாகத் திகழ்ந்திருக்கிறார். ஜாதி ஒழிப்பைக் கருத்தில் கொண்டு சீர்திருத்தத் திருமணங்களை முன்னெடுத்து நடத்தியிருக்கிறார். சட்டமன்றத்தில் மருத்துவர் முத்துலட்சுமி அம்மையார் தேவதாசி முறையை எதிர்த்துப் போராடிய போது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், திரு.வி.க, பெரியார் ஆகியோருடன் மருத்துவர் தருமாம்பாள் அம்மையாரும் தேவதாசி முறையை எதிர்த்துப் போராடியிருக்கிறார். 1962இல் மூன்றாவது அய்ந்தாண்டுத் திட்டக் காலத்தில், சென்னை மாநிலத்தில் பெண்களுக்காகத் தொடங்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி, டாக்டர் எஸ். தர்மாம்பாள் அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக 1990ஆம் ஆண்டு 'டாக்டர் தர்மாம்பாள் அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இது தரமணியிலுள்ள மத்திய தொழில் நுட்பக் கழக வளாகத்தில் இயங்கி வருகிறது.

## பெண்கள் மாநாடு:

'தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாடு 13-11-1938 அன்று சென்னை ஒற்றைவாடை நாடக அரங்கில் நடைபெற்றது. இம்மாநாடு திராவிட இயக்க வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற மாநாடாகும். மீனாம்பாள் சிவராஜ், பண்டித நாராயணி, வா.பா. தாமரைக்கண்ணி, பா. நீலாம்பிகை, திருவரங்க நீலாம்பிகை, மூவலூர் இராமாமிர்தம், மருத்துவர் தருமாம்பாள் உட்பட்ட பெண்கள் குழு மாநாட்டின் தூண்களாகச் செயல்பட்டனர்'. (புலவர் மயிலை. சிவமுத்து, டாக்டர் எஸ்.தர்மாம்பாள், ப.8)

அன்னை தருமாம்பாள், மலர்முகத்தம்மையார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஆகியோர் மாநாட்டு அமைப்பாளர்கள். மாநாட்டு அலுவலகம் அன்னை தருமாம்பாள் இல்லத்தில் செயல்பட்டது. தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்திமொழி, கட்டாயமாகத் திணிக்கப்பட்ட சூழ்நிலையில் இம்மாநாடு நடைபெற்றது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் மாநாட்டு ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். '1938இல் தமிழ்நாட்டில் முதல் முறையாகத் தியாகராய நகர் மாதர் முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பைத் தொடங்கி 'முன்னேற்றக் கழகம்' என்ற சொல்லைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியவர் டாக்டர் தருமாம்பாள் அம்மையார் ஆவார்'. (விடுதலை, 14.11.2024, ப.2)

மாநாட்டில் தமிழ்க் கொடியை அன்னை மீனாம்பாள் சிவராஜ் ஏற்றினார். மறைமலை அடிகளாரின் மகள் திருவரங்க நீலாம்பிகை அம்மையார் மாநாட்டுத் தலைவர். மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், அப்போதைய நீதிக் கட்சித் தலைவர் ஈ.வெ. ராமசாமி அவர்கள் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும் போது,

இனிமேல் 'பெரியார்' என்றே வழங்க வேண்டும் என்ற தீர்மானம் இயற்றப்பட்டது. அது இந்த மாநாட்டில் மிக முக்கியமானதாகும்.

## இழவு வாரம்:

தனது வீட்டையே கரந்தை தமிழ்ச் சங்கத்துக்கு நன்கொடையாக வழங்கினார் தருமாம்பாள். கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனை 'இந்து நேசன்' பத்திரிகை ஆசிரியர் லட்சுமிகாந்தன் கொலை வழக்கிலிருந்து காப்பாற்ற இலண்டன் பிரிவி கவுன்சில் (Privy Council) வரை சென்று வழக்கு நடத்தி மீட்டு வந்தவர். 'தமிழாசிரியர்களின் ஊதிய உயர்வுக்காகப் போராடி வெற்றி கண்டவர். ஊதியம் உயர்த்திக் கொடுக்காவிட்டால் பெண்களைத் திரட்டி 'இழவு வாரம்' கொண்டாடுவேன் என்று அறிவித்தவர்'. (புலவர் மயிலை. சிவமுத்து, டாக்டர் எஸ்.தர்மாம்பாள், ப.13) இவரின் இத் துணிச்சலுக்குக் காரணம் பெரியாரின் கருத்தியலே!3

## 6. புரட்சியை ஏற்படுத்திய நீலாவதி இராமசுப்பிரமணியம்:

1913இல் திருச்சியில் பிறந்தவர். நீதிக்கட்சியிலும், சுயமரியாதை, பகுத்தறிவு இயக்கங்களிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். திராவிடன், குடிஅரசு, ஊழியன், குமரன் ஆகிய இதழ்களில் எழுதி வந்த எழுத்தாளர். 'இவர் எழுதிய பெண்ணுரிமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட 'குமரன்' இதழ் ஆசிரியரும் பெரியாரின் உற்ற நண்பருமான சொ.முருகப்பா அவர்கள் அம்மையாரைத் தேடி வந்து சந்தித்திருக்கிறார்.' (நீலாவதி இராமசுப்பிரமணியம் வாழ்க்கை வரலாறு, ப.10).

இவரின் திருமணம் 1930இல் நடைபெற்ற ஜாதி மறுப்புத் திருமணம் ஆகும். அன்றைய காலத்தில் பெரும் எதிர்ப்புக்கிடையில், இந்தத் திருமணத்தை நடத்துவதற்காகப் 'பாதுகாப்புக் குழு' ஒன்றே தனியாக அமைக்கப்பட்டதாம். தந்தை பெரியார் ஈரோட்டில் தம் மாளிகையின் மேல்மாடியில் ஒரு மாத காலம் தங்க வைத்துப் பாதுகாத்திருக்கிறார். நம் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மறுமணமும் கலப்பு மணமும் அவசியமானது என்பதைப் பெரியார் வரவேற்றார். திருமணப் பத்திரிகையில் அழைப்பாளர்களாகத் தந்தை பெரியார், நாகம்மையார் மற்றும் பெண்ணின் தகப்பனாரின் பெயர் இடம் பெற்றிருக்கிறது. 'இவரது திருமணத்தையொட்டி எழுந்த எதிர்ப்புகளின் விளைவாகப் பெரியாரால் 'பெண் ஏன் அடிமையானாள்?' என்ற நூலும், திரு வி.கல்யாணசுந்தரம் அவர்களால் 'பெண்ணின் பெருமை' என்ற நூலும் எழுதப்பட்டதாம்'. (நீலாவதி இராமசுப்பிரமணியம் வாழ்க்கை வரலாறு, ப.64) ஜாதிமறுப்பு மணம் புரிந்தோரை மக்கள் அதிசயமாகப் பார்த்த காலம்.

## 7. ஆண்களின் அடக்குமுறைக்குப் பெண்களுக்குக் கல்வியின்மையே காரணம் என்று முழங்கிய குஞ்சிதம் குருசாமி:

பெரியாரின் பெண் விடுதலைக் கொள்கைகளை ஏற்று, தாலி அணிய மறுத்ததோடு பொட்டு வைப்பதையும் நிறுத்தியிருக்கிறார். இதனால் இவர் தேசிய மகளிர் பள்ளியின் ஆசிரியர் பணியை இழந்திருக்கிறார். இந்தியாவின் முதல் பெண் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய பெருமைக்குரியவர். திராவிட இயக்கச் செயல்பாட்டாளரும், `ரிவோல்ட்' பத்திரிகையின் உதவி ஆசிரியருமான குருசாமியை 1929இல் சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டவர் குஞ்சிதம். 'அறிவிலும் பலத்திலும் ஆண்களோடு பெண்கள் போட்டிபோட முடியாது என நம்பிய காலம் மலையேறிப் போய்விட்டது' எனப் பெண்களுக்குத் துணிச்சலும் தெளிவும் கிடைக்கும் வகையில் பேசியிருக்கிறார். ஆண்களின் அடக்குமுறைக்குப் பெண்களுக்குக் கல்வியின்மையே காரணம் என்று முழங்கியிருக்கிறார்.

'பெண்களே... உங்கள் அருமைக் கண்கள் நல்ல காட்சிகளைப் பார்க்கவேண்டிய காலத்தில், உங்கள் வீட்டு அடுப்பங்கரைச் சாமான்களையே சதா காலம் பார்த்து ஒளி மங்குகின்றனவே. உங்கள் ஆண் கொடுமையினின்றும் என்று மீட்பேனோ! என்னோடு

வந்து நீங்களும் உல்லாசமாய், ஓடியாடித் திரிவீர்களோ! பயப்படாதீர்கள்! காற்று என்றுமே ஒரே முகமாய் அடிப்பதில்லை!' என்று பெண்களுக்கு நம்பிக்கை தரும் வகையில் பேசியிருக்கிறார். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வராத காலம். பெண்கள் பேசாத காலம். 1931இல் இப்படிப் பேசியிருக்கிறார் என்றால் அதற்குப் பின்னால் இருப்பது பெரியாரின் கருத்தியலே!

### 8. பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்க அயராது பாடுபட்ட வீரம்மாள்:

1943இல் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளியையும், 1954இல் தமிழ்நாடு ஷெட்யூல்ட் வகுப்புப் பெண்கள் நலச் சங்கத்தையும் தொடங்கி, ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைத்துப் பெண்களையும், ஆதரவற்ற குழந்தைகளையும் அரவணைக்கும் எண்ணத்தில் 1970ஆம் ஆண்டு 'தமிழ்நாடு பெண்கள் நலச் சங்கம்' எனப் பெயர் மாற்றினார். முதியோர் பள்ளி, இரவுப் பள்ளி ஆகியவற்றையும் நடத்தினார். மக்களில் ஒரு பிரிவினரை மட்டும் கடவுள் ஏன் தீண்டத்தகாதவர்களாக வைத்திருக்கிறான் என்ற கேள்வியை எழுப்பி, கோயில் வழிபாடு முறைகளை ஒதுக்கித் தள்ளினார். 1948 மார்ச் 01 முதல் சுயமரியாதை இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, திராவிடர் கழகம் நடத்திய பொதுக் கூட்டங்களில் பங்கேற்றுக் கழகம் வெளியிட்ட புத்தகங்களைப் படிக்கவும் தொடங்கியிருக்கிறார். தனக்கு நேர்ந்த கொடுமை இனி வேறெந்த பெண்ணுக்கும் நடந்துவிடக் கூடாது என்றெண்ணிய வீரம்மாள், பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்க அயராது பாடுபட்டுக் கொண்டிருந்த தந்தை பெரியாருக்கு 5.3.1948 இல் கடிதம் ஒன்றை விரிவாக எழுதி அனுப்பியிருக்கிறார்.

'ஆகவே அறிவிற் சிறந்த எம் அண்ணலே! தாங்கள் இல்வாழ்க்கையைக் குறித்துத் தீவிரமாகச் சிந்தனை செய்து, இல்வாழ்க்கையில் ஆண் பெண் இருபாலரும் எந்தெந்த முறையில் வாழ்க்கை நடத்த வேண்டும், எந்தெந்த முறையில் குழந்தைகளை வளர்க்க வேண்டும், எம்முறையில் உற்றார் உறவினர்களுடன் பழக வேண்டும்; உபசரிக்க வேண்டும், எந்த வகையில் குடும்பக் கஷ்டங்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும், எந்தெந்த முறையில் கணவன் மனைவி நடந்து, தங்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தால் இன்பமாய் வாழலாம் ஆகியவைகளைப் பற்றியெல்லாம் தெளிவான கருத்துகளடங்கிய ஓர் அரிய பெரிய விரிவான நூலைத் தங்கள் வாழ்நாளிலேயே சிறப்பாக வெளியிட்டு, அந்தப் புத்தகம் எல்லோருக்கும் பயன்பட வேண்டுமெனச் சிறுமியாகிய அடியாள் தாழ்மையுடன் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்" (அன்னை வீரம்மாள், இது என் வாழ்க்கைக் கதை, ப.95).

வீரம்மாள் தொடங்கிய அமைப்பு 'அன்னை ஆசிரமம்' என்னும் பெயரில் திருச்சிராப்பள்ளியில் பெரிய கல்வி நிறுவனமாக மலர்ந்துள்ளது. இதில் குழந்தைகள் இலவசக் காப்பகம், குடும்பநலப் பள்ளி மையம், உடல் ஊனமுற்ற குழந்தைகள் இல்லம், பணிபுரியும் பெண்கள் நலவிடுதி போன்ற கல்வி நிறுவனங்கள் உள்ளன. "ரேடியோ தாயார்' என எல்லோரும் பாராட்டும் வகையில் புகழ் பெற்றவர்.

### தந்தை பெரியாரும் பெண் விடுதலையும்:

தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கி வீறுகொண்டு பரப்பத் தொடங்கிய காலகட்டத்தில், 1927இல் பெண்ணுரிமை, பெண் விடுதலை குறித்து கவனத்தை ஈர்க்கும் வகையில் புத்தகம் ஒன்று வெளியானது. அந்தப் புத்தகம் அமெரிக்கப் பத்திரிகையாளரான கேத்தரீன் மேயோ எழுதிய 'மதர் இந்தியா' எனும் நூல். இந்து சடங்கு சம்பிரதாயங்கள் எப்படியெல்லாம் பெண்களைச் சுரண்டுகின்றன என்பதை இந்தப் புத்தகத்தில் வெளிப்படுத்தியிருந்தார் கேத்தரீன் மேயோ. குழந்தைத் திருமணம், பாலியல் நோய்கள், விதவைகள் நடத்தப்படும் விதம் குறித்த புள்ளிவிவரங்களுடன் இந்தக் கருத்தை அவர் முன்வைத்தார். பதினான்கு வயதுக்கு முன்பாகப் பெண்கள் திருமணம் செய்து கொடுக்கப்படும் பாரம்பரியத்தை அரசு ஏற்பது குறித்தும் அவர் தனது புத்தகத்தில் சுட்டிக்காட்டினார்.

1928-29இல் கிராமப்புற ஆண்களும் பெண்களும் சுயமரியாதைத் திருமணங்களைச் செய்து கொள்ள ஆரம்பித்தனர். பெரும்பாலும் காதல் திருமணங்களான இவை, பார்ப்பனப் பூசாரிகளும் மந்திரங்களும் இன்றி நடத்தப்பட்டன. பல நாட்கள் நடக்கும் விமரிசையான திருமணங்களுக்குப் பதிலாக பெரியார் முன்வைத்த திருமணம் எளிதாகவும் பொருள் விரயத்தையும் கால விரயத்தையும் தவிர்ப்பதாக இருந்தது.

சடங்குகளுக்காக வாரி இறைக்கப்படும் பணத்தை அந்தத் தம்பதிக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் கல்விக்குச் செலவழிக்கலாம் என்றார் பெரியார்.

பெண்கள் வளர்ந்து திருமணம் செய்யும்போது அவர்களே தேர்வு செய்த ஆணைத் திருமணம் செய்வது சிறந்தது. குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்த அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமெனப் பெரியார் விரும்பினார். இது மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதற்காகச் சொல்லப்பட்ட கருத்து அல்ல. இது ஆண் பெண்ணின் உடலமைப்பு, பாலியல் நடவடிக்கைகள் ஆகியவை வாழ்வின் பிற அம்சங்களிலும் எப்படி எதிரொலிக்கும் என்பதை வைத்துச் சொல்லப்பட்ட கருத்து. 'மனைவி, கணவனை மதிக்க வேண்டும் என்றால் ஏன் கணவன், மனைவியை மதிக்கக் கூடாது? மனைவி தான் புகுந்த வீட்டின் உறவுகளை மதிக்க வேண்டுமென்றால் ஏன் மனைவி வீட்டு உறவுகளைக் கணவன் மதிக்கக் கூடாது? மனைவி, கணவனுக்குச் செய்வதைக் கணவன், மனைவிக்குத் திருப்பிச் செய்ய முடியாது என்றால் பெண் என்பவள் வீட்டு வேலைக்கும், உடல் சுகத்துக்கும் மட்டுமே ஆனவள் என்று ஆகவில்லையா? இப்படிப்பட்ட திருமணங்கள் நாட்டில் அரை நொடி கூட நீடித்திருக்க அனுமதிக்கக் கூடாது" என்றார் பெரியார். ஒவ்வொரு பெண்ணுக்கும் பெற்ற தாய் தந்தையை விட அந்தப் பெண்ணின்மீது பல மடங்கு அக்கறையுடையவராகச் சமூகத்தின் நலன் காப்பவராகத் தந்தை பெரியார் திகழ்ந்திருக்கிறார்.

1920இல் கம்யூனிச ரஷ்யாவில் நடந்துகொண்டிருந்த சமூக மாற்றங்களின் மீது ஆர்வம் கொண்டார் பெரியார். 1931ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அவர் ரஷ்யாவுக்கும் அய்ரோப்பாவின் பிற பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டார். அதன் பிறகு அதன் தாக்கம் தமிழ்ச் சமூகத்தில் நிலவப் பெரும்பாடு பட்டார்.

சீர்திருத்தங்களைத் தன் வீட்டில் இருந்தே ஆரம்பித்தார் பெரியார். திருமணமாகி ஒரே மாதத்தில் விதவையான தன்னுடைய தங்கையின் 10 வயது மகளுக்கு மறுமணம் செய்து வைத்தார். அந்நாட்களில் கைம்பெண்கள் படும்பாடு சொல்லி மாளாது. கைம்பெண்கள் படும் துன்பத்தைக் கண்கூடாகப் பார்த்ததால் கைம்பெண் மறுமணத்திற்காக வலிமையாகக் குரல் கொடுத்தார். பெண்கள் சம உரிமை பெற வேண்டுமென்றால் கல்வியறிவு அடிப்படை என்பதை உணர்ந்திருந்த பெரியார், ஆண்களைப் போல் பொருளாதாரச் சுதந்திரத்திற்கு வழிவகை செய்வதும் மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினார்.

'உலகத்தில் ‘ஆண்மை’ நிற்கும் வரையில் பெண்கள் அடிமையும் வளர்ந்தே வரும். பெண்களால் ‘ஆண்மை’ என்ற தத்துவம் அழிக்கபட்டாலல்லாது பெண்களுக்கு விடுதலை இல்லை என்பது உறுதி' என்று பெரியார் அறுதியிட்டுக் கூறியுள்ளார். (தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? ப.98)

'பெண்கள் பல சமயங்களில் தாழ்வு மனப்பான்மையாலும் மூடநம்பிக்கையாலும் தங்களைத் தாங்களே ஆண் வர்க்கத்தின் அடிமைகளாக ஆக்கிவிடுகின்றனர். பெண்களின் மனநிலை மாறாதவரை எந்த வெற்றியும் பெற முடியாது. பெண்ணடிமையும் ஒழியாது' (கு.ம. இராமாத்தாள், பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள், ப.27) திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது என்பது போல் பெண்கள் மாறாதவரை சமூகத்தின் நிலை மாறாது என்பதே உண்மை.

சமுதாயத்தில் பெண்ணடிமை தீர வேண்டும் என்றால் 'பெண் சமத்துவம், பெண் கல்வி, பெண் விடுதலை' என்ற முப்பரிமாணங்களே பெண்களின்

இழந்த பெருமையை அடையும் ஆயுதம் என்பதைப் பெரியார் பகுத்தாய்ந்தார்.

"கும்மி, கோலாட்டங்களை மறந்துவிட்டு, ஆண்களைப் போல எல்லா விளையாட்டுகளிலும் பெண்கள் ஈடுபட வேண்டும்; அப்போது தான் அவர்களுக்கும் பலமும், தைரியமும், தன்னம்பிக்கையும் ஏற்படும்" என்றார். மேலும், ஆடம்பரத் திருமணங்களை எதிர்த்த பெரியார் அதற்குப் பதிலாகப் பணத்தைப் பெண்கள் பெயரில் வங்கியில் முதலீடு செய்யச் சொன்னார். இன இழிவை ஒழிக்கப் பெண்களும் போராட வேண்டும் என்றார்.

## சுயமரியாதைத் திருமணம்:

சமுதாயத்தில் திருமணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். ஓர் ஆணும், பெண்ணும் தங்கள் வாழ்க்கைத் துணையாக ஒருவருக்கு ஒருவர் ஏற்றுக்கொள்வது தான் திருமணமாகும். ஆனால், இங்கு ஆணாதிக்கமே மேலோங்கி இருக்கிறது. ஆண்கள் பெண்களை அடிமையாகக் கருதியதால் பெண்ணுக்கு ஆண் தாலி கட்டுவது என்ற பழக்கத்தை ஏற்படுத்தி வைத்தனர். ஆண்களும், பெண்களும் சமம் என்று கருதுகிற இச்சமூகத்தில் பெண்களுக்கு மட்டும் ஏன் ஆண்கள் தாலி அணிவிக்க வேண்டும்? பெண்களும் ஆண்களுக்குத் தாலி அணிவிப்பதில் குற்றமில்லை என்று முழங்கினார் பெரியார். பெண்களுக்குத் திருமணமாகிவிட்டது என்று அடையாளம் காட்டத் தாலி கட்டப்படுவதை அறவே வெறுத்தார் பெரியார்.

தாலியை அடிமைச் சின்னமாகக் கருதிய பெரியார், திருமணம் ஆனவர், ஆகாதவர் என்ற வேறுபாட்டைத் தாலி எடுத்துக்காட்டுவதாக இருந்தால் ஆண்களுக்கு உள்ள அடையாளம் என்ன? என்று கேட்டார். எனவே, பெண்களும் ஆண்களுக்குத் தாலி கட்டுவதே நியாயம் என்று வாதிட்டார். 'கற்புக்கரசி' போலக் 'கற்புக்கரசன்' என்ற வார்த்தை ஏன் இல்லை? என்றார்.

1931இல் விருதுநகரில் மூன்றாவது சுயமரியாதை மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் ஈ.வெ.ரா பேசியபொழுது பெண்கள் சுயமரியாதை பெற, சுதந்திர உணர்வு பெறத் தாலி கட்டும் முறை ஒழிந்தாக வேண்டும் என்றார். பெண்களுக்குத் தாலியே பலவீனமாக இருக்கிறது. 'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்', 'என்னயிருந்தாலும் உன் கணவன் தானே! பொம்பள நீ தான் பொறுத்துப் போக வேண்டும்' என்ற புத்திமதியெல்லாம் தாலியினால் வந்தது. ஆகையால் தந்தை பெரியார் தாலியை அழுத்தமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

பெண்ணடிமைத்தனம் ஒழிய வேண்டுமானால் பெண்களுக்குப் பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் சொத்துரிமை வழங்க வேண்டுமெனப் பெரியார் வலியுறுத்தினார். சுயமரியாதைக் கட்சி செங்கற்பட்டு மாநாட்டில் இந்தியாவிலேயே முதன்முறையாக, 1929இல் பெண்களுக்குச் சொத்துரிமை வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு என்று மனித வாழ்க்கைக்குரிய இலக்கணத்தைக் கற்பித்தவர் தந்தை பெரியார். 'ஓநாயிடம் ஆடுகள் எப்படிச் சுதந்திரத்தை எதிர்பார்க்க முடியும்?'. அதேபோல ஆண்கள் பெண்களுக்குச் சுதந்திரம் தருவார்கள் என்பதை எதிர்பார்க்க முடியாது என்றார் பெரியார்.

## கைம்பெண் மறுமணம்:

தந்தை பெரியாரின் சமூகநீதியில் முக்கிய இடம் பெறுவது ஜாதி ஒழிப்பு. ஜாதி ஒழியவேண்டுமானால் காதல் மணம், சீர்திருத்த மணம், கைம்பெண் மறுமணம் என மும்மண ஆதரிப்பு இருக்க வேண்டும் என்பதைத் தன் வாழ்நாள் முழுவதும் வலியுறுத்திக் கொண்டேயிருந்தார்.

**'வாடாத பூப் போன்ற மங்கை நல்லாள்**
**மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?'**

என்ற புரட்சிக்கவிஞரின் வரிகளுக்கு அடித்தளம் இட்டவை பெரியாரின் சிந்தனைகளே! 1929-ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் 'கைம்பெண் மறுமணத்தை' ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றினார். பெண்களின் திருமண

வயது 16க்கும் மேற்பட்டிருக்க வேண்டும், ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும், ஆரம்பக் கல்வி ஆசிரியர் பணியிடங்களைப் பெண்களுக்கே ஒதுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்களும் அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

பல நூற்றாண்டுகளாக ஆணாதிக்கத்தினால் அடிமைகளாக இருந்த, இருக்கின்ற பெண்ணினத்தின் விடுதலைக்காகப் போராடி, பெண்ணினத்தின் விடுதலைப் பாதைக்கு வித்திட்டவர் தந்தை பெரியார். பெண் மக்களை இன்று ஆண்கள் நடத்தும் மாதிரியானது, மேல் ஜாதிக்காரன் கீழ் ஜாதிக்காரனை நடத்துவதை விட, பணக்காரன் ஏழையை நடத்துவதை விட, எசமான் அடிமையை நடத்துவதை விட மோசமானதாகும் என்று 1936ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி ஈரோட்டில் தந்தை பெரியார் உரையாற்றியிருக்கிறார்.

பெண் கல்விக்குக் குரல் கொடுத்தல், இளம் வயது திருமணங்களுக்கு எதிர்ப்பு, கட்டாயத் திருமணங்களை ஒழித்தல், மறுமணங்களை ஊக்குவித்தல், பெண்களுக்குச் சொத்துரிமை என வாழும் காலமெல்லாம் பெண்களின் அடிப்படை உரிமைகளுக்கான குரல் கொடுத்தவர் தந்தை பெரியார். தமிழனின் இழிவைத் துடைக்கத் தன்மானம் பார்க்காமல் போராடியவர்.

### ஜனநாயகப் புரட்சி:

பெரியார் என்றொருவர் இல்லை என்றால், இன்று தமிழ்நாட்டில் பெண்களுக்கான 33% இட ஒதுக்கீட்டை நாம் பெற்றிருக்க முடியாது. கலைஞர் 1989இல் அரசுப் பணிகளில் மகளிர்க்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கியதால் பெண்களின் வாழ்க்கை பன்மடங்கு உயர்ந்துள்ளது. நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றால் இன்னும் நாட்டின் வளர்ச்சி அதிகமாகும் என்பதே உண்மை. அதுவே தமிழ்நாட்டின் மாபெரும் புரட்சியாக அமையும்.

கெட்ட வார்த்தைகள் கூட ஒரு பெண்ணின் ஒழுக்கத்தை மட்டுமே விமர்சிப்பனவாய் இருக்கின்றன. ஏன் ‘விபச்சாரகன்’ என்ற சொல் வழக்கில் இல்லை? விபச்சாரம் செய்யும் நிலைக்கு ஒரு பெண்ணைத் தள்ளுவது ஆண் வர்க்கம் தானே? 'கற்பு, விபச்சாரம் என்னும் வார்த்தைகள் வெறும் புரட்டு என்பதும், மற்றவர்களை அடிமையாக்கவும், கட்டுப்படுத்தவும் உண்டாக்கப்பட்ட சுயநலச் சூழ்ச்சி நிறைந்த தன்மை கொண்டது' என்றார் பெரியார். ‘விபசாரம்’ என்னும் சொல்லையே பெண்களை அடிமைப்படுத்தும் சொல்லாகக் கருதியுள்ளார். (தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்? ப.61.)

பெண்களுக்கு ஆண்களைப் போலவே எல்லாவற்றிலும் சம உரிமை வழங்குவதே பெரியாரின் பெண்ணியம் ஆகும். பெரியார் கூறுகிறார், ‘ஆண்கள், பெண்கள் விடுதலைக்குப் பாடுபடுவதால் பெண்களின் அடிமைத்தனம் வளருவதுடன் பெண்கள் என்றும் விடுதலை பெறமுடியாத கட்டுப்பாடுகள் பலப்பட்டுக் கொண்டு வருகின்றன. பெண்களுக்கு மதிப்புக் கொடுப்பதாகவும், பெண்கள் விடுதலைக்காகப் பாடுபடுவதாகவும் ஆண்கள் காட்டிக் கொள்வதெல்லாம் பெண்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சியே ஒழிய வேறல்ல. எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது ஓநாய்களால் ஆடு, கோழிகளுக்கு விடுதலை உண்டாகுமா? எங்காவது வெள்ளைக்காரர்களால் இந்தியர்களுக்குச் செல்வம் பெருகுமா? எங்காவது பார்ப்பனர்களால் பார்ப்பனரல்லாதவர்களுக்கும் சமத்துவம் கிடைக்குமா? என்பதை யோசித்தால் இதன் உண்மை விளங்கும்'.

### பெரியாரின் கருத்தியல் போராளிகளான

1. **நீலாவதி அம்மையார்,**
2. **மலர் முகத்தம்மையார்,**
3. **பொற்செல்வி,**
4. **சத்தியவாணிமுத்து அம்மையார்,**
5. **மஞ்சுளாபாய்,**

**6. மிராண்டா கஜேந்திரன்,**

**7. பரிபூரணத் தம்மையார்,**

**8. சிவகாமி அம்மையார்,**

**9. கே.ஏ. ஜானகி அம்மையார்,**

**10. அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள்,**

**11. நூர்ஜகான் பேகம்,**

**12. அலமேலு அப்பாதுரையார்,**

**13. ராணி அண்ணாதுரை,**

**14. அன்னை மணியம்மையார்,**

**15. ஏ.பி.ஜே. மனோரஞ்சிதம் அம்மையார்,**

**16. திருமகள் இறையன்,**

**17. வெள்ளக்கோயில் இரங்கநாயகி அம்மாள்,**

**18. தங்கமணி குணசீலன்,**

**19. பார்வதி கணேசன்,**

**20. மீரா ஜெகதீசன்,**

**21. வழக்குரைஞர் அருள்மொழி,**

**22. ஓவியா**

போன்றோர் சுயமரியாதை, சமூகநீதி, பெண் கல்வி, பெண் விடுதலை, மறுமண ஆதரிப்பு போன்றவற்றிக்குக் கடுமையாகப் போராடி வெற்றியைப் பெற்றிருக்கிறார்கள் என்றால் திராவிட இயக்கத்தில் பெண்களின் பங்கு முக்கியமானதாக இருந்திருக்கிறது, இருந்துவருகிறது என்பதை அறிய முடிகிறது. பெண்கள் பொதுவெளிக்கு வரவேண்டும் என்பது தந்தை பெரியாரின் பெரு விருப்பம். அந்த விருப்பம் சாத்தியமாகி இருக்கிறதென்றால் அது பெரியாரின் கருத்தியலுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

பெரியார் இட்ட பணியைத் தமது எழுத்துக்கள் மூலம் சமுதாயத்திற்குக் கொண்டு சேர்த்த பெருமைக்குரியவர்கள் திராவிட இயக்க எழுத்தாளர்கள். அவர்களுள் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா போன்றோர் முன்னோடியாகத் திகழ்ந்துள்ளனர். அந்த வழியில் முத்தமிழறிஞர் கலைஞரும் தம் வாழ்நாள் முழுவதும் பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதில் சீரிய கவனம் கொண்ட கொள்கையாளராய்த் திகழ்ந்திருக்கிறார். ஏ.வி.பி. ஆசைத்தம்பி, எஸ். எஸ். தென்னரசு, சி.பி. சிற்றரசு, புகழேந்தி, இளஞ்சேரன், ஆசிரியர் கி. வீரமணி போன்ற பல எழுத்தாளர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பறைசாற்றியிருக்கிறார்கள் என்பதை அவர்களின் எழுத்துகள் வெளிப்படுத்துகின்றன. அவர்கள் மட்டுமன்றி, தந்தை பெரியாரின் கருத்தியல்களை உள்வாங்கிய பெண்கள் பலரும் சமுதாய நலனுக்காகக் களத்தில் நின்று களமாடியிருக்கிறார்கள். அதற்கு அவர்களின் உறுதியான மனநிலையும் கொள்கைப் பிடிப்புமே காரணமாக இருந்திருக்கின்றன.

## குறிப்புதவி நூல்கள்:


1. கி.வீரமணி, பெரியார் களஞ்சியம், பெண்ணுரிமை பாகம் 2, தொகுதி 6, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், சென்னை, 2001.
2. கி.வீரமணி (தொ.,) விடுதலை களஞ்சியம் தொகுதி 1, 2023.
3. தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள்?, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், சென்னை
4. பேராசிரியர் புலவர் மயிலை. சிவமுத்து, டாக்டர் எஸ்.தர்மாம்பாள் அம்மையார், மாணவர் மன்ற வெளியீடு, சென்னை.
5. முனைவர் வளர்மதி, சுயமரியாதை இயக்க வீராங்கனைகள், கருப்புப் பிரதிகள், சென்னை, 2017.
6. கி.வீரமணி, பெரியாரின் சுயமரியாதைச் சிந்தனைகள், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு.
7. அன்னை வீரம்மாள், என் வாழ்க்கைக் கதை, அன்னை ஆசிரமம் வெளியீடு, திருச்சி,1996
8. இ.சுந்தரமூர்த்தி, மா.ரா.அரசு (பதி.,) மகளிர் இதழ்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003.

9. வழக்கறிஞர் அருள்மொழி, திராவிடப் போராளிகள், முத்தமிழறிஞர் பதிப்பகம், சென்னை, 2024.

10. பழ.அதியமான், வைக்கம் போராட்டம், காலச்சுவடு பதிப்பகம், 2020.

11. த.மோகன், இ.ஆ.ப., வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர், தமிழரசு அலுவலகம், சென்னை, 2023

12. விடுதலை, 14.11.2024.

13. S.A.K.K.ராஜூ, நீலாவதி இராமசுப்பிரமணியம் வாழ்க்கை வரலாறு, வானதி பதிப்பகம், 1983.

## ஆசிரியர் குறிப்பு:

*முனைவர் நா.சுலோசனா (எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., நெட்.) சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், தமிழ்மொழி (மற்றும்) மொழியியல் புலத்தில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் 18 ஆண்டுகள் பட்டறிவு உள்ளவர். 9 முனைவர் பட்ட ஆய்வாளர்களையும், 25 ஆய்வியல் நிறைஞர் பட்ட மாணவர்களையும், 613 முதுகலை பட்ட மாணவர்களையும் உருவாக்கியவர்.*

*மொழி, இனம், சமூகம் சார்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை ஆய்விதழ்களிலும் இலக்கிய இதழ்களிலும் எழுதியிருக்கிறார். இவர் 10 ஆய்வு நூல்களையும், பதிப்பாசிரியராக 13 நூல்களையும், பொதுப் பதிப்பாசிரியராக 22 நூல்களையும் படைத்திருக்கிறார். இன்றைய தலைமுறையினர் சங்க இலக்கியச் சொற்கள் குறித்தும், வட்டார வழக்குச் சொற்கள் குறித்தும் அறிந்துகொள்ளும் விதமாக 'மொழி அறிவோம்' என்னும் வலையொளி வழியாக 500க்கும் மேற்பட்ட பதிவுகளைப் பகிர்ந்திருக்கிறார்.*

*வட்டார வழக்குச் சொல்லாய்வு, ஊர்ப்பெயராய்வு, கரிசல் வட்டார சொலவடைகளைத் திரட்டுவது என மொழி குறித்த ஆய்வுத் தளங்களில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறவர். தமிழ்ப் பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசின் 'இளம் தமிழ் ஆய்வாளர்' விருது பெற்றிருக்கிறார்.*

* * *

An ideal society should be mobile, should be full of channels for conveying a change taking place in one part to other parts.

In an ideal society there should be many interests consciously communicated and shared. There should be varied and free points of contact with other modes of association. In other words, there should be social endosmosis.

This is fraternity, which is only another name for democracy. Democracy is not merely a form of Government. It is primarily a mode of associated living, of conjoint communicated experience.

It is essentially an attitude of respect and reverence towards fellowmen.

*(Annihilation of Caste*
*Babasaheb Ambedkar Writings and Speeches: Vol.1 – 2, XIV)*


Prof. Dr. **B.R. AMBEDKAR,** M.A., M.Sc., Ph.D., D.Sc.

Hon'ble Minister (1st Minister) of Law and Justice,
Union Of India (1947-51).
Minister of Labour in Viceroy's Executive Council (1942-46).
Chairman of the Constitution Drafting Committee - Constituent Assembly of India (1946-50).
Member of Parliament - Rajya Sabha for Bombay State (1952-56).

# சமய அமைப்பு விதிகள்: ஒரு சடலக்கூராய்வு


பேராசிரியர் **மணி கோ.பன்னீர்செல்வம்**

**(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை)**


**கட்டுரைச் சுருக்கம்:**

*எல்லாவற்றையும் வேதத்தில் புதைத்துக் கொள்ளுகிற ஒரு செயல்பாட்டை இந்துத்துவர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். வேதம் தான் தொன்மையானது, தொடர்ச்சி உள்ள தனிப் பிரதிநிதி என்று வல்லடியாக உரிமை பாராட்டப் படுகிறது. மற்ற எல்லா தத்துவங்களையும் கோட்பாடுகளையும் வீழ்த்திவிட்டு, நிலைத்து நிற்பதற்கான தொடர்முயற்சியில் இது எப்போதும் முன்னெடுக்கப்படுகிறது. பல்வேறு சிந்தனைகளை உடைய இந்தியத் துணைக்கண்டத்தில் ஒரே நாடு, ஒரே பண்பாடு என்கிற நடவடிக்கை மூலமாக, ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறது.*

*இந்த வேதப் பண்பாட்டைத் தான் புரட்சிக்கவிஞர் தன் படைப்புகளில் அம்பலப்படுத்துகிறார். பாரதிதாசனின் இலக்கிய அறிவுத்துறைச் செயல்பாடுகள் அனைத்தும் அவர் காலத்திய தமிழர்களின் மீது திணிக்கப்பட்டிருந்த பார்ப்பனீயத் தேசியத்தின் மீதான எதிர்ப்பே ஆகும். வழிபாட்டுக்குரிய இந்து சமயமென்பது பாசிச அரசியலை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிற இக்காலத்தில், இக்கட்டுரை பாரதிதாசனின் படைப்புகளின் வழியாக அதனைக் கூராய்வு செய்து பார்க்கின்றது.*


## இந்தியா என்கிற தேசத்திற்கான சிந்தனை விதைகள் வேதங்களே?

தேச நிர்மாணத்துக்கான சிந்தனை தாதுப் பொருட்களை வேதம் × அயலவர் (பிரிட்டிஷ்) என்கிற சிந்தனை முரணிலிருந்து உருவாக்குவதே இந்துத்துவ வரலாறு எழுதியலாளர்களின் தேசக் கருத்துருவாக்கம் ஆகும்.

ஒரு தேசத்திற்கான முன்நிபந்தனையாக ஐரோப்பிய அறிஞர்கள் முன்வைத்து, நெடுங்காலமாகத் தொடர்ந்து வருகிற சிந்தனைப் பள்ளி என்றொரு தகுதிப்பாட்டை, வேதம் தான் அத்தொன்மைத்தொடர்ச்சி உள்ள தனிப் பிரதிநிதி என்பதாக ஆரிய வர்ணாசிரமவாதிகள் பெற்றுக் கொண்டதும், அச்சிந்தனையின் கால ஓட்டத்தில் மற்றெல்லாச் சிந்தனைப் பள்ளிகளையும் வீழ்த்திவிட்டு நிலைத்து நிற்பதாக நவீன வரலாறு எழுதிக் கொண்டதும், அதனையே கல்வித்துறைக்கான பாடத்திட்டமாக நிலைநிறுத்தியமையும் தான், பல்வேறு விதமான சிந்தனைப் பள்ளிகளை உடைய புவிப்பரப்பை ஒற்றைத்தேசமாக இறுக்கிக் கட்டும் நடவடிக்கையை வெற்றி பெறச் செய்தது. அதனை எதிர்த்து வினையாற்றும் நெருக்கடிக்குப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தை நெட்டித் தள்ளியது. **அவ்வியக்கத்தின் இலக்கிய அறிவுத்துறையின் முகப்புச்சேனையே புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆவார்.**

பாரதிதாசனின் இலக்கிய அறிவுத்துறைச் செயல்பாடுகள் அனைத்துமே, நிகழ்காலத்தில்

தமிழர்களின் மீது திணிக்கப்பட்டிருக்கிற ஒரு 'பேரரசுத் தேசியத்தின்' மூலத் தத்துவமாக விளங்குவது 'வேதங்களே' என்கிற பெருங்கதையாடலை எதிர்கொள்ளலே ஆகும்.

பல்வேறு இனங்கள் புழங்குகிற ஒரு நிலப்பரப்பில் ஓர் இனம் தன்னைத் தானே பூர்வீகமானவன், பெரும்பான்மையைச் சார்ந்தவன் என அறிவித்துக் கொள்ளும் அடாவடித்தனத்தை, அதற்குரிய நியாயங்களை வழங்கும் வேதங்களை எதிர்கொள்ளாமல், எதிர்கொள்ள முடியாது என்பதையும், அந்த இனப் பூர்வீகம் பெரும்பான்மை வாதத்தின் அடிப்படையில் உருவான பேரரசுத் தேசியத்தையும், அதன் விளைவாகத் தொகுக்கப்பட்டுள்ள அடிமை மக்கள் தொகுதியையும், அதன் பயனாக உருவான நைந்துபோன குடிமை வாழ்வையும் சீர் செய்ய முடியாது என்பதாக அவர் விளங்கிக் கொண்டிருந்தார்.

பாரதிதாசன், வேதங்களில் எதிர்கொள்கிற கருத்துத் தொகுதி என்பது நிகழ்காலப் பேரரசுத் தேசியத்தை எதிர்த்தே என்பதைச் சமகாலச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தலாம்.

அரசமைப்பு அவை விவாதத்தில், பேரரசுத் தேசியத்திற்கும் மொழி இன மேட்டிமைக்கும் (ஆரிய சமஸ்கிருத) எந்த அளவு தீவிரச் சார்பாக நின்று, பல்வேறு உயர்சாதி பிரதிநிதிகள் கருத்துக்களை முன்வைத்தார்கள் என்பதற்கு, தேசியச் சார்பு இலக்கியவாதிகளின் ஆக்கங்கள் சான்றாக இருப்பதைக் காணலாம்.

ஆரியர் குடியேற்ற வருகைக்கு முன் சிந்து, பஞ்சாப் பெருநிலப்பரப்பில் தாசர்களின் ஆட்சியே நிலவியது என்றும், 'தாசன்' என்ற சொல்லுக்கு முதலில் ஏற்கப்பட்ட பொருள்கொடை வள்ளல் என்பதாகவும், அத் தாசர்கள் நாவலந்தீவின் உயர்குடித் தோன்றலாகும் என்னும் குறிப்பைப் பாளிமொழி ஆராய்ச்சியில் உலகப்புகழ் பெற்ற தருமானந்த கோசாம்பியின் 'பகவான் புத்தர்' எனும் நூல்வழிச் சுட்டுகிறார் பாரதிதாசன். (வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா? 1980:66) இனப் பூசலுக்கு உரிய காரண-காரியத் தீர்வை, மானிடவியல் மற்றும் சமூக வரலாற்று நோக்கு நிலையில் அணுகினார் புரட்சிக்கவிஞர்.

**'ஆரிய வருகை'** என்று இந்துத்துவ வரலாறு எழுதியலாளர்கள் குறிக்கும் குடியேற்றம் என்னும் வரலாற்று நேர்வினை, 'நாவலந்தீவின் நடுவில் இரண்டு உலகம் உண்டு. ஒன்று மூவேந்தர் கொடி பறந்த முத்தமிழின் நலம் சிறக்கத் தேவையெலாம் கொண்ட திராவிட உலகம். ஆ-ஓட்டி ஆத்-தின்னும் ஆ+இரியர் (மாடு ஓட்டி வருதலும், அதை உணவாகத் தின்னுதலும்) ஆரிய நாடு மற்றொன்று.' என்று குறிக்கிறார் (இசையமுது, 1952, பா.க, 1013). சிந்து நதிக்கரை தொடங்கி, கங்கை நதிக்கரை வரை இந்தக் குடியமர்வு அமைவுற்றது. ஆரியரின் அகற்சி அதன் பிறகே நாவலந்தேயம் முழுவதும் நிகழ்ந்தேறியது.

ஆரிய வருகைக்கு முன் தமிழர்களே இந்நாட்டை ஆண்டனர். இன்றைய தென்னாட்டுத் தமிழர்கள் தாம் விந்தியம் வரை பரவி, குடி அமர்ந்து அழகு செய்தவர்கள். அதற்குப் பின்னர் தான் ஆரியர் என்போர் இங்கு வந்து குடியேறினர். வெள்ளை உடம்பு காட்டுதல், வெறும் வாக்குநயம் காட்டுதல் என்பதாக, பிள்ளைக்குக் கனி தந்து காதுகுத்துதல் போலத் தம் கொள்கையைப் பரவச் செய்தனர். இந்த ஆரியர் கால்நடையாக வந்து விந்தியத்தின் கீழ்ப் பகுதியில் தங்கினர். அவ்வாறு தங்கித் தங்கள் வாழ்வையும் மொழியையும் தமிழை உரைகல்லாகக் கொண்டு ஒழுங்கு செய்தனர். அங்கிருந்த ஆரியர் சிற்சிலர், வடபால் இருந்து படிப்படியாகத் தென்பால் வந்து குடமலைச் சாரல் அடைந்தனர்.

வரலாற்றுக் காலக்கட்டத்திற்குள் குடகு எனும் தென் நிலப்பகுதியைச் சார்ந்து ஆரியரின் அகற்சியைக் குறிப்பாக நிலைநிறுத்திக் காட்டுவதற்குச் சிறப்பான காரணங்கள் உண்டு. அவை முறையே: சமண மதத்தவரின் சங்கம் எனும் அமைப்பு வச்சிர நந்தியை தலைமையாகக் கொண்டு இயங்கிய போது,

மொழியைச் செம்மை செய்தல் மற்றும் மெய்யியலை ஒழுங்கு செய்யும் இருபெரும் பணிகளில் ஈடுபட்டு வந்தனர் என்பதை அறிகிறோம்.

இதை ஒட்டியே, வடபுலத்தில் இருந்த ஆரியரின் அகற்சியைத் தென்புலத்தில் குடகுப் பகுதியோடு தொடர்புபடுத்தும் போக்கு, வைதீகச் சமய இலக்கியங்களில் மிகுவதாயிற்று. இத்தொன்மங்களின் மனித வடிவ வெளிப்பாடே அகத்தியன் எனும் கதை மாந்தன் ஆவான். சமய சங்கத்தினர்க்கு இணையாகத் தமிழ் எனும் மொழியைச் செப்பப்படுத்தவும் காவிரி எனும் உணவு விளைவுக்கு ஆதாரமான ஆற்றை விடுவிக்க ஈசனால் அனுப்பப்பட்டவன் என்பது சைவ பன்னிரு திருமுறைகளில் காணக் கிடைக்கக்கூடிய இலக்கியக் கருத்துப் பதிவாகும்.

குடமலை தன்னைக் (புராணிகமாக) குடமுனி என்றனர். ஆரியர், சீரிய தமிழில் அறிவும் பெற்றனர். அதிகாரத்தால் நாடொறும் சூழ்ச்சிகள் விளைத்தனர். இடை/கடை/முதற் பெருங் கழகம் ஆகிய யாவற்றிலும் தம் பெயர் ஏற்றித் திராவிட இனத்திற் சேர்ந்தோர் போலக் காட்ட முயன்றனர். (பா.க.ப. 786)

இவ்விடத்தில் இக்குறிப்பானது, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தந்த கால்டுவெல், அகத்தியர் குறித்த குரேவ் தொகுத்த சில செய்திகளோடு ஒப்பிட்டால் சில மெய்மைகள் புலப்படுகின்றன. ஆரியக் குழுக்களில், முக்கியமாக வட இந்தியாவில் இருந்து வந்த குழுக்களின் தாக்கம், தாமிரபரணி ஆற்றங்கரையில் கொற்கையைத் தலைநகரமாகக் கொண்ட பாண்டிய நாட்டில் செழித்திருந்த பழமையான திராவிட நாகரிகத்தில் கலப்புற்று, அந்த ஆரிய நாகரிகம் வேகமாக வளர்ந்தது. இவ்வாறு வந்த குழுக்களின் முதல் அல்லது முக்கியக் குழுக்களின் தலைவன் அகஸ்தியன் என்ற ஒருவனை அறியமுடிகிறது. இந்த ஆரிய மரபினரான அகஸ்தியன் இந்தியாவின் தென் பகுதியில் ஆரியப் பண்பாட்டையும் அறிவையும் பரப்பும் நோக்கில் வந்தவன் என்னும் உண்மையைப் பாரதிதாசன் உய்த்தறிந்து குறிப்பிடுகிறார்.

இந்த ஆரியர்கள் வால்கா (Volga) ஆற்றங்கரையைச் சுற்றிய பகுதியில் இருந்து, இந்திய நாட்டின் வடமேற்கு எல்லையில் சிந்துநதியையும் பின்னர்க் கங்கையையும் சுற்றிக் குடியேறினர். நாகரிகம் இல்லாதவராய் வேட்டைநிலையில் உயிர்க்கொலைப் புரிந்து வரைமுறையின்றி ஊன் உண்டனர்; கள் குடித்தனர்; சூதாட்டத்தில் மூழ்கினர்; மகளிரைப் புணர்ந்தும் (வரைமுறையற்ற புணர்ச்சி) தமிழர் அருவருக்குமாறு ஆரியர்கள் ஒழுகினமையால், அவர்களை இந்நாட்டில் நுழையாதபடி, (திராவிடப் பழங்குடிகள்) எதிர்த்து நிறுத்தியதாக ரிக் மூன்றாம் மண்டிலத்து 33-ஆம் பதிகம் கூறுகிறது.

## ஆரியர் உயிர் வளர்க்கும் செயல்பாடு:

ஆரியர்கள் நமது நாட்டிற்குள் குடிபுகுந்த போது, இங்கிருக்கும் கொல்லா விரதம் கொண்டோரையெல்லாம் கொலை செய்யும் காழ்ப்புடையவராக நடந்து கொண்டனர். இங்கிருக்கும் மன்னர்களுக்கிடையே சண்டையை வளர்த்தனர். வான்மறை எனத் தங்கள் மறைநூல்களை நம்பச் செய்தனர். அதை எதிர்த்துக் கேள்வி கேட்டாலோ, அப்போது தான் வான்புக முடியும் என்று சொல்லினர் ஆரியர்.

## உலகு பற்றிய ஆரியர் / பழங்குடி நோக்கு:

மேல் ஏழு உலகு, கீழ் ஏழு உலகு என்று தங்கள் மறை நூல்களிலெல்லாம் இருப்பதாகப் பொய் சொல்லினர். சொர்க்கம் என ஒன்று இருப்பதாகவும், அங்கே தேவர்கள் இருப்பார்கள் என்றும், சொர்க்கம் தேவர்களுக்குத் தான் என்றும் சொல்லி வந்தனர் ஆரியர்கள். உலகியல், இம்மை வாழ்வு என்ற சொற்களால் குறிப்பிடப்படும் ‘மக்கள் முதன்மை’ நோக்கைச் சமூக அறிவியல் அடிப்படையில் பொருள்முதல் நோக்கு என்றும் வரையறுக்கலாம். பாரதிதாசன் கைலாயம், வைகுந்தம் போன்ற கருத்துமுதல் நோக்குக்கு மறுப்பாக, மக்கள் உறையும் நானிலம், ஐந்திணை உலகு என்பதை

முதன்மைப்படுத்தியும் உயர்த்தியும் பேசி வந்தார். இந்த ஐந்திணை உலகையும், 'இம்மை' வாழ்வையும் முதன்மைப்படுத்தி உரைக்கும் தொல்நிலைப் பேராசானாக வள்ளுவனை முன்னிலைப்படுத்தி வந்தார்.

வேதம் ஒப்பாத தமிழர்களை நஞ்சென்று கொன்றனர். அவர்களை வஞ்சித்துக் கொலையும் செய்தனர்; அரக்கர்கள் என்றனர்; கழுவேற்றிக் கொன்றனர். ஆரியரை ஒப்பாத ஆதிதிராவிடர்களைச் சேரியில் வைத்தனர். மாதர் சகிதம் தங்கள் மதத்தைத் தந்தும், சூதற்ற சில மன்னர்களைச் சொர்க்கக் கதையை நம்பவைத்தும் கலகம் செய்தனர்.

## வேள்வி, யாகம் பற்றிய ஆரியரின் பொருள் விளக்கம்:

ஆரியர்கள் யாகத்தை முதன்மையாகக் கொண்டிருந்தனர். தமிழ் மன்னர்களிடமும் வணிகர்களிடமும் பொன்னும் பொருளும் வாங்கி யாகத்தை நடத்தி வந்தனர். ஒரு மன்னனுடைய செங்கோல் வாழவும் மனுமுறை வாழவும் தருமம் என்பதை நான்மறையாக வாழவும் யாகங்களைச் செய்வதாகச் சொல்லினர். இன்னல்கள் தீர, வானம் மழை பொழிய, எல்லா நன்மைகளும் பெருக என்றெல்லாம் சொல்லி வேள்வி/யாகம் வளர்க்கப்பட்டது.

## 1. வேள்வியும் பாரதிதாசனின் பொருள்கோடலும்:

புலமைமிக்க தென்நாட்டைச் சார்ந்த தமிழ்ச் சைவர்கள், சீவனை (உயிர்களை) வதைப்பதான துன்பம் சேர்க்கக் கூடிய எந்த யாகத்தையும் வளர்ப்பதில்லை. ஒப்பவும் மாட்டார்கள். அன்பே சிவம் என்று அறிந்தவர்கள் தின்புலால் யாகச் சிறுமையை அறிவர். பொதுவாக அறத்தால் வருவதே இன்பம்; இதைத் திறத்தால் மட்டுமே அறியமுடியும். இதைச் செப்பும் நூல் உண்டு. இந்நாளில் நல்லறம் என்று சொன்னால் அது சினம், அவா, சாதி, மதம், புலை நாறும் யாகம் தீர்ப்பதே என்று மரபான தமிழ்நிலைப் பட்டவர்கள் கருதி வந்தனர்.

**பசி என்று வந்தால் ஒருபிடி சோறு**
**புசி என்று தந்துபார் அப்பா !**
**பசையற்ற உன் நெஞ்சில் இன்பம் உண்டாகும்...**
**பாருக்கு உழைப்பதே மேலான போகம்...**

(1939இல் இசையமுதில், சிறுவர் பகுதியில் 'இன்பம்' எனும் பாடல்)

உயிர் கொன்று வேள்வி செயல் உங்கள் நாகரிகம். (1959இல் வெளிவந்த குறிஞ்சித்திட்டு) என்றெல்லாம் பாரதிதாசன் தன் காலத்துத் தமிழ்நிலைப்பட்ட அரசியலைக் கூர்மைப்படுத்தினார்.

### 1:1 மறை:

பார்ப்பன வகுப்பும் பார்ப்பன நூல்களும் பொய்யானவை. ஒரு நாட்டில் பார்ப்பனரின் மறைநூலுக்கு மதிப்பீய வேண்டும். அதை மக்கள் கேள்வி கேட்டால் மன்னன் எதிர்க்க வேண்டும். (1948 - இல் வெளிவந்த கடற்மேற் குமிழிகள்) என்பதிலும்,

பகுத்தறிவு அழித்து, மானம் போக்கி, மறை நூல்களைக் காட்டித் தமிழ் நூல்களின் கருத்தை மாற்றித் தீமையெல்லாம் செய்தனர் தமிழருக்கே. (குறிஞ்சித்திட்டு, பக்.12-13) என்றும், முதன்முதல் செந்தமிழ் நான்மறை செப்பிய முத்தாகவும் புகழ்மிகுந்த புதுவாழ்வு காட்டுவதாகவும் திருக்குறள் விளங்குகிறது. மறையெனப்படுவது தமிழ் நான்மறை நூல், மற்ற மறைநூல்கள் பின்வந்த குறைநூல்கள். (தேனருவி, 1956:1042)

அகத்தியன் விட்ட புதுக்கரடியில் (1948), அகத்தியன் பேசுவதாக, மன்னவர் மண்ணில் வாழ்வார்; விண்ணவர் மேவுவார்; அன்னவர் நம்மை அணுகித் துன்பத்தைப் போக்குவர். அப்படி துன்பத்தைப் போக்கவேண்டும் என்றால் விண்ணவர் விரும்புகிற அளவில் மண்ணிடையே நான்மறை வளர்க்க வேண்டும். மறைமொழி தானே மந்திரம்; அந்த மந்திரத்தாலே தான் வானவர் மகிழ்வார்கள் என்பது

அகத்தியன் கூற்று. மேலும் மந்திர வேள்வியால் தான் இந்திரன் மகிழ்கிறான் (696) என்று சுட்டிக் காட்டுகிறார்.

### 1:2 மறையெதிர்ப்பு:

உழவனும் வேந்தனும் வித்திப் பிழைக்க வழிகாட்டியது வள்ளுவன் ஓதிய நூல். எத்துப் பழுத்தவர் ஏமாற்றும் ஆரியர் நான்மறை போல் அத்திப்பழம் அன்று. (727)

### 1:3 மறை எனல் சூழ்ச்சி:

மறை: மறைந்த பொருளாக அறியக்கூடாமல் மறுக்கப்பட்டதாகக் கூறப்படும் நூல் சூழ்ச்சி: ஒரு கூட்டத்தின் தன்நல ஏற்பாட்டுத் திட்டமே. (ஆத்திசூடி, 1949, ப.827)

நால்வகைப் பிறவிப் பொய்: மக்களிடையே உண்டெனக் கூறும் நால்வகையான நிலை (நான்கு சாதி) பொய்யாகும். (823)

### 1:4 வேதக் கடவுள்:

புதுவை முரசு இதழில், 13.5.1931ஆம் ஆண்டு இரவு 11:00 மணி அளவில் புதுவையில் வீசிய பெரும் காற்றைப் பற்றிப் பேசும் போது, வேதக் கடவுள்களான வாயு, வருண பகவான், இந்திரன் ஆகிய வேதக் கடவுளர்களை விமர்சிக்கிறார் பாரதிதாசன்.

### 1:5 சாக்குருவி வேதாந்தம்:

1930 இல் வெளிவந்த சஞ்சீவி பர்வதத்தின் சாரல் படைப்பில், நாவலந்தீவில் வாழும் 30 கோடி மக்களும் தனித்தனியே வாழ்கின்றனர். அதனால் ஏகமனதாகி அவர்கள் எதிர்த்துப் போராடத் தயாரில்லை. சுதந்திரப் போரும் வரப்போவதில்லை. சாதியச் சண்டையை வளர்க்கும் இதிகாசங்கள், பேதம் வளர்க்கும் புராணங்கள், சமூகத்தின் கண்ணைக் குருடாக்கி விட்டுத் தாம் உண்ணக் கொட்டி அளக்கும் குருக்கள் கடவுளர்கள். இச்சூழலில் நல்லதொரு கொள்கை முளைப்பதில்லை.

**தேகம் அழிந்துவிடும் சுற்றத்தார் செத்திடுவார்**
**போகங்கள் வேண்டாம் பொருள் வேண்டாம் மற்றுமிந்தப்**
**பாழுலகம் பொய்யே பரமபதம்போ என்னும்**
**தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்.**

பிரெஞ்சுப் புரட்சிக்கும், அமெரிக்க விடுதலை முயற்சிகளுக்கும் பிறகு, சமூக வாழ்வில் தனியொருவரின் (Individual) இறைமை (Sovereign) இன்றியமையாததாக ஏற்கப்பட்டது. ஆனால், சமூக மாற்றம், சமயச் சீர்திருத்தம், அரசியல் மாற்றம் போன்ற பேரளவின (Macro) மாற்றங்களில், தனிநபர்கள் பலரும் ஒன்றுகலந்து பெருந்திரளாக ஒன்று திரண்டே, இத்தகைய மாற்றங்களை நிகழ்த்தி வந்தனர். ஆனால் இந்தியக் குடிமை வாழ்வில் தனியொருவரின் விருப்புறுதி (Will) இறைமை (Sovereign) உறுதிசெய்யப்பட்டு ஆட்சி அதிகாரத்தால் ஏற்கப்பட்டதே கிடையாது. மாறாக, தனியொருவர்கள் பெருந்திரளாகத் திரண்டு, மாற்றங்களை நிகழ்த்துவதற்கு எதிராக, அனைவரையும் உதிரி உதிரியாகப் பொடித்துப் போடும் எதிர்ப்புரட்சிச் செயல்பாட்டைச் சநாதன இலக்கியங்கள் செய்து வருவதைப் பாரதிதாசன் சிறப்பாக அடையாளங் காட்டினார்.

## 2. மந்திரம்:

திருமணம் என்பது ஒருத்தியும் ஒருவனும் உள்ளம் ஒப்பினாலும் மணம் என்று கூறுதல் வாய்மையன்று. திருமணம் என்று சொன்னால், பார்ப்பனர் மந்திரம் வழியே இயலுதல் மட்டுமே ஆகும் (அக.வி.புது.696). வேத மந்திரம் வடமொழியே ஆகும் (இந்தி எ.பா. 720). வேள்வித்தீ இயற்றி, புரோகிதர் தலைமையில் ஆண்-பெண் இணைவு உறுதிசெய்யப்படுவதே திருமணம் என்று அறிவிக்கப்பட்டமை மண உறவைச் சமயவினையின் ஒரு பகுதியாக ஆக்கியுள்ள சூழ்ச்சி உய்த்துணரத்தக்கது.

**ஒருநாள் குறுங்கா டொன்று தீப்பட்**
**டெரிந்தது! சிற்றூர் எரிந்தது! மக்கள்**

**தெய்யோ தெய்யோ தெய்யோ என்றே**
**அரசனிடத்தில் அலறினார் ஒடி**
**அங்கிருந்த அகத்தியன் அரசே**
**தீ ஒரு தெய்வம் செம்புனல் தெய்வம்**
**காற்றொரு தெய்வம் கடுவெளி தெய்வம்**
**நிலம் ஒரு தெய்வம் நீஇதை உணர்க**
**தெய்எனல் அழிவு! தெய்வம் அழிப்பது.**
**இந்திரன் தெய்வம் எதற்கும் இறைவன்**
**மந்திர வேள்வியால் மகிழும் அவ்விந்திரன்**
என்று கூறி ஏகினான் அகத்தியன்.
(அக.வி.பு.கரடி, 1948, ப 696)

இக்குறிப்பானது ரிக்வேதத்தோடு தொடர்புடையது. இயற்கையின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் திண்டாடும் போது ஏற்பட்ட அச்சம். அதன்மீது அளவுகடந்த மரியாதை பக்தியாய் மாறி, இயற்கையின் விதவிதமான சீற்றங்களான நெருப்பு, வெள்ளம் போன்றவற்றைத் தெய்வங்களாக உருவகப்படுத்தி, அவற்றுக்கு வணக்கம் சொல்லிப் பணிவது என்பதாகும். பல தலைமுறைக்கு முன்னால் தன் கூட்டத்திற்குச் சோதனை வந்தபோது தலைமைதாங்கி வழிநடத்திய முன்னோர்களான இந்திரன், விஷ்ணு, ருத்திரன் முதலானோரை உதவிக்கு அழைத்தனர்.

மேற்குறித்த குறிப்பானது ஆரியத் தெய்வங்களைக் குறிப்பதாகும். ஆரியர்களின் கடவுளாக இந்திரன் இருப்பதையும், அந்த இந்திரனை மந்திர வேள்விகளால் மகிழ்விப்பதும், ஆரியர்களால் செய்யப்படுவதே என்பதும் சான்று. ஐம்பேராற்றல்களுக்கு மனித வடிவிலான குணங்களைக் கற்பித்து, தெய்வ உருவாக்கம் நிகழ்த்தியமையும், அன்னோர்தம் சினத்தை ஆற்றுவிக்கச் சோம, சுர பானங்களைப் படைத்தலும், ஆரியர் யக்ஞங்களின் ஒரு பகுதியாகும். அந்த மனித உரு கொண்ட தேவதைகள், கட்டற்ற காமங்களில் திளைப்பதும் முறை செய்யாமல் தண்டனைகளைப் பெருக்குவதும் ஆகும் எனக் கோசாம்பி கூறுவது இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

### 2.1 மந்திர எதிர்ப்பு:

**ஆரியர் மிலேச்சர் ஆதலால், ஆரியத்து**
**வேரினர் பார்ப்பனர் வேறினத்தவர்**
**ஆதலால், அவரின் வேத மந்திரம்**
**தீது பயப்பன, ஆதலால், திராவிடர்**
**வாழுமாறு மனங்கொளார் என்பதும் –**

என்று பாரதிதாசன் திராவிடர் வாழ்க்கை முறைகளில் ஊடுருவ எண்ணிய ஆரிய பார்ப்பனர் அடா மணமுறையை வேரோடு சாய்க்க எண்ணினார்.

**மணத்தின் மறுநாள் மணப்பெண் ணாளைத்**
**தண்கதிர்ச் செல்வன் புணரதை தருவதாம்**
**இரண்டாம் நாளில் இன்பச் செல்வியைக்**
**கந்தருவர்பால் கலப்புறச் செய்வதாம்**
**தீஎனும் தெய்வம் மூன்றா நாளில்**
**தூயள்பால்இன்பம் துய்க்க செய்வதாம்**
**நாளாம் நாள்தான் மணமகன் புணர்வதாம்**
**திராவிட மக்களின் செவிஏற் குமோ இதை?**
**வைதிக மணத்தை மெய்என ஒப்பிடில்**
**தமிழர் பண்பு தலைசா யாதோ? – என்று**
**ஸோம: ப்ரதமோ விவிதே**
**கந்தர்வோ விவித உத்தர**
**த்ருதியோ அக்நிஷ்டே பதி:**
**துரீயஸ்தே மநுஷ்யஜா**
**ஸோமோ (அ) தத் கந்தர்வாய**
**கந்தர்வோ (அ) தத் அக்தயே**
**ரயிஞ்ச புத்ராகும்ச அதாத**
**அக்நிர் மஹ்ய இமாம்**
(சான்று: விவாஹ மந்தராத்த போதினி)
என்று வைதீக மரபைச் சாடுகிறார்.

பார்ப்பனரை நீக்கி, அவர்தம் நலிவடைந்த சடங்குகளையும் நீக்கி, நற்றமிழர் ஒப்புமணம் செய்ய வேண்டும். (பா.க.தொ.2,1949, ப.781)

உழைப்பிலிருந்து விலகி நிற்கும் பார்ப்பனர்கள், வாழ்வியக்கத்திற்குத் தேவையான பொருள்களைப்

பெற்றுக்கொள்ளும் மறைமுக வழிமுறையாக வேள்வியில் ஆகுதி செய்தல், தேவர்களை மணங் குளிர்வித்தல் என்று கரவான முறையில் பொருள்களைக் கவர்வதைப் பலரும் பலகாலமாய்க் கண்டித்து வருகின்றனர். பெண்களையும் பொருளாகப் பாவிக்கும் ஆரிய சிந்தனைமுறை, திருமண உறவினை உறுதி செய்யும் சமய வினையின் ஓர் அங்கமாகப் பெண்ணின் இளமையை நுகரத்தர வேண்டும் என்கிற இச் சிந்தனை, அக்குழுவின் பால்நிலை வளர்ச்சி ஒழுங்கின் வெளிப்பாடு எனக் கொள்ளலாம். வரம்பற்ற பால்வேட்கை இங்கே தெய்வீகமயப் படுத்தப்பட்டுள்ளது.

**ஆயுர்வேதம் - வைத்திய சாஸ்திரம் - வேத மந்திரம் - சிற்ப சாஸ்திரம்:**

நாவிதர் என்னும் வண்ணார்கள் என்று இப்போது அழைக்கப்படும் இவர்கள், முன்னாளில் வைத்திய சாஸ்திரியர்களாக இருந்தவர்கள். அந்நாள் முதல் இந்நாள் வரைக்கும் இவர்களே பண்டிதர்கள். சத்திரம் வைத்து அறுவைச் சிகிச்சை செய்யும் வல்லவர்கள். இவர்களை அரசர்கள் சிறப்பு மானியம் தந்து ஆதரித்து வந்தார்கள். அரச சமூகத்தில் இவர்களுக்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பு அதிகமிருந்தது. இடைக்காலத்தில் வந்த ஆரியர்கள் தமிழ் அரசர்களிடம் செல்வாக்கு அடைய அனுசரித்த தந்திரச் செயல்களில் முதன்மையானது இப்பண்டிதர்களை அரசனிடமிருந்து அறுத்து விட்டதேயாகும்.

தமிழ் வைத்திய முறைகளைத் தமிழர்களாகிய இவர்களிடமே அறிந்து கொண்டு, அதைத் தமது வேதத்தில் புகுத்தி, அதற்கு ஆயுர்வேதம் என்று பெயர் சொல்லி மேன்மைப்படுத்தினர். இவ்வகையில் நாளடைவில் தமிழ் வைத்தியத் தொழிலில் நெருக்கடி உருவாக்கப்பட்டது. சத்திரமிடுவதில் ஒரு பகுதியாகிய சவரத் தொழிலையும் துணிகளைச் சுத்தம் செய்யும் தொழிலையும் மாத்திரம் உபயோகிக்கும் நிலைமை ஏற்பட்டது.

என்றைக்கு வைத்திய சாஸ்திரமானது கடவுள் சொன்னதாகச் சொல்லப்படும் வேதத்தில் இடம்பெற்றதோ, அன்றுமுதலே அது விருத்தியடைய முடியாத நிலை ஏற்பட்டது. கடவுள் சொன்னதை மீறி அதன்மேல் மனிதனுடைய ஆராய்ச்சியைச் செலுத்த எவருக்கும் துணிவு ஏற்பட நியாயமில்லை.

இதே போல, சிற்ப சாஸ்திரிகளுக்கு அரச சமூகத்தில் செல்வாக்கு இருந்தது. ஆனாலும் அரசர்கள் ஆஸ்திகப் புத்தியை மீறி, கண்ட விஷயத்தையெல்லாம் கடவுள் சம்பந்தத்திலே நுழைத்தார்கள். எனவே சிற்பிகள் கோயில் பணிகளையே செய்து கிடப்பதால் அறிவை விசாலப்படுத்த வாய்ப்பில்லை. தங்கள் திறமையையெல்லாம் அரசனை மகிழ்விக்கக் கடவுள் உருவம் அமைப்பதிலேயே செலவிட்டார்கள். இருந்தாலும் அரசர்கள் மலைகண்ட இடத்தில் கோயில்கட்டும் பணியைச் செய்தபோது, ஆரியர்கள் தமிழ்ச் சிற்பிகளின் பெருங்கவுரவத்தை அழிக்க எண்ணி, வேதத்தில் ஒரு பகுதியை ஏற்பாடு செய்தார்கள். சிற்பிகள் கடவுட் சிலையைச் செய்தால் மட்டும் பயனில்லை. வேத மந்திரத்தால் அவைகளுக்கு உயிர் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.

சிற்பத்தைப் பற்றியும் சித்திரத்தைப் பற்றியும் வேதத்தில் சில முறைகளை ஆரியர்கள் சேர்த்த பின்னர், அவைகளே பிற்காலத்தில் சிற்பத்திற்கும் சித்திரத்திற்கும் ஆதாரமாக்கபட்டன. எனவே சிற்பிகளின் அறிவானது கோயில் விக்கிரங்களில் மட்டுமாக நின்று போயிற்று. உலக முன்னேற்றத்திற்கு உபயோகப்படவேண்டிய சிற்ப சித்திரங்கள் கோயிலுக்குள் மாத்திரம் புகுந்து கொண்டன. அந்நாள் முதல் இந்நாள் வரை அதே நிலைமை தான். இல்லையெனில் இன்றைய உலகில் மேற்படி கலைகள் முதன்மை பெற்றிருக்கும். இதை இடையில் துண்டித்தது ஆஸ்திகமே.

சிற்ப சாத்திரிகளையும், சித்திரிகளையும் தொழிலாளர்களாக்கித் தாழ்த்தியது ஆஸ்திகமே. எந்தத் தொழிலாளர்களை மேன்மைப்படுத்தி அவர்களால்

தேசத்தை உந்தப்படுத்த வேண்டுமோ அவர்களைத் தாழ்மைப்படுத்தி ஊருக்குப் புறம்பாக வாழச்சொல்லி தாழ்வுபடுத்தியது புராதன ஆஸ்திக இந்தியா.

பொருளுண்மை அறியும் அறிவும், பொதுமக்கள்பால் சிறந்த அன்பும் உடைய தமிழர்களுக்கு, ஆஸ்திகம் செய்த கொடுமைகள் சொல்லிமாளாது. இக்காலத்தில் விஞ்ஞானப் புலமையின் சாயல், அக்காலத்துச் சித்தர்களிடத்து இருந்தது. பொதுமக்களின் நன்மைக்காக வஸ்து விவேகம் கொண்ட பெரியாராகிய சித்தர்கள், ஆஸ்திகர்களைக் கண்டித்து வந்தனர். இதனால் அவர்களுக்குக் கிடைத்தது அஞ்ஞாத வாசம். காடுகளுக்குச் சென்றாலும் பொதுமக்களுக்குப் பல உண்மைகளைச் சொல்லி வந்தார்கள். இவ்வாறு பல உண்மைகளைச் சொல்லி வந்த ஒரே காரணத்தால் சித்தர்களின் நுட்ப அறிவை ஆஸ்திக இந்தியா இழந்துவிட்டது.

சுயமரியாதைக்காரர்களின் தலையில் இன்றைய ஆஸ்திகர்கள் போடும் நாஸ்திகம் என்னும் கம்பளிப் பூச்சியைத் தான் அக்காலச் சித்தர்களின் தலையில் போட்டு மருட்டினார்கள். யாருக்கும் பயப்படாத சித்தர்கள் ஆஸ்திகர்களைக் கடுமையாக எதிர்த்தார்கள். முற்கால ஆஸ்திகர்களின் அறிவு கொழுந்து விட்டுக் கொண்டே இருந்ததாகச் சொன்னால், பொருளின் தன்மை உட்புகுந்து பார்ப்பதையே ஆதாரமாக உடைய விஞ்ஞானப் புலமையின் பக்கமே அவ்வறிவு செல்லவில்லை. செல்லவும் முடியாது. (பாவேந்தம் - 22, 2009:160-162).

வடபுலத்தைத் தரவுக்களமாகக் கொண்டு தீண்டாமையும் தீண்டத்தகாதோரும் உருவாக்கப்பட்ட வரலாற்றுப் பின்னணியை, விடுதலையாளர் அம்பேத்கர் ஒருவாறு பொழிப்புரை செய்தார். அது பவுத்தம் என்கிற சமயத்து மெய்யியல் கொள்கை, வாழ்வியல் கொள்கை, ஆரியச் சனாதனத்துக்கான எதிர்வினை என அவர் அடையாளப்படுத்துகிறார். அதுபோலவே தென்புலத்தைத் தரவுக்களமாகக் கொண்டு தீண்டாமை, ஒதுக்கம், புறம்நிறுத்தல் போன்றவற்றிற்கான காரணிகளைத் திணைவழி வந்த குடிகளின் மருத்துவ அறிவு, சிற்ப அறிவு, பிற தனித்துவமான வாழ்வியல் திறன்கள் - இவற்றைக் கவர்ந்து கொண்டு அந்தத் திறனாளிகளை வெறும் கூடுகளாக்கி வெளியே நிறுத்துவது; இதுவே ஆரிய ஆஸ்தீகப் பண்பு எனப் பாரதிதாசன் ஒரு வரலாற்று ஊகத்தை முன்வைத்தார்.

**வைதீகம்:**

நாட்டில் வறுமை அகற்றாமல் கொள்ளை நோய் போல் மதத்தைக் கூட்டி அழும் வைதீகத்தை வேரோடு அழிக்க வேண்டும்.

கணவன் இறந்து விட்டால் கைம்பெண்ணானவள் வருந்தக் கூடாது. ஆசைக்குரியவனை நாடித் திருமணம் செய்து கொள்ளலாம். வேதநெறியின் (வைதீகம்) எந்தக் கட்டுப்பாட்டையும் பொருட்படுத்தத் தேவையில்லை.

இதை 'அடஞ்செய்யும் வைதீகம்' எனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். (பா.க.தொ.1,1938, ப.189). கோயில் பார்ப்பனரின் வேதத்தைத் தூயது இல்லை என்றும் தொல்லை விளைவிப்பது என்றும் கூறுகிறார். குப்பை கூட்டும் உழைக்கும் பெண் பேசும் தமிழ்ப்பேச்சை விடப் பார்ப்பனரின் வேதம் தரமற்றது என்கிறார் பாரதிதாசன். (இசையமுது, ப.1008).

லௌகிகத்தின் துஷ்டப் பிள்ளை வைதிகம்:

லௌகிகம் என்பது லோகம் சம்பந்தப்பட்டது. அதாவது மனிதனுக்கும் இந்த உலகத்திற்கும் உள்ள சம்பந்தம் பற்றியது. 'பரமார்த்திகம்' என்பது பெரியபொருள் சம்பந்தமானது. அதாவது பெரியபொருள் அல்லது கடவுள். அக்கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தம் பற்றியது. மக்களின் பணம், கோயிலுக்கும் கோயில் தரகர்களுக்கும் கோடிக்கணக்கில் அனுதினமும் செலவானால், இந்தப் பரமார்த்திகம் போக மீதியானால் லௌகிகம் ஏது?

லௌகிகர்கள் ஏமாந்து கிடந்தால் பொய், வஞ்சகம், கொலை, களவு முதலியவைகளும் பரமார்த்திக

வேசம் போட்டு தன் வேலையை நடத்தும். இந்தச் செயலைத் தான் லௌகிகத்தின் துஷ்டப் பிள்ளையாக வைதீகத்தைக் குறிப்பிடுகிறார் (புதுவை முரசு, மார்ச்சு, 1932, மானுடம் போற்று, ப.196).

வைதீகத்தின் சமூகப் பொருளியல் அடிப்படைக ளுக்குப் பொருந்தாத் தன்மையைச் சுட்டிக்காட்டியும், ஆனால் உலகியலின் (லௌகீகம்) அத்தனை கூறுகளிலும் ஆட்சிசெலுத்த விரும்பும் அதன் அதிகார வெறியையும், பாரதிதாசன் கட்டவிழ்த்துக் காட்டுகிறார். உண்மையில் ஆரிய வேதியர்கள் மலை, காடு, வயல்வெளி, கடற்புறம், பாலைவெளி என எங்கு வாழப் புகுந்தாலும், இறுதியாக அடைக்கலம் புகுவது அவ்விடத்தின் அதிகார மண்டலமே என்று அறிஞர் பலர் சுட்டுவது இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

**சமண் கொள்கை:**

சமண, புத்த சமயத்தவர் மீது ஞானசம்பந்தர் காழ்ப்புணர்ச்சியைக் காட்டியது வரலாறு நெடுகக் காணக் கூடியது. மதுரையில் எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றியதற்கு அவர் இலக்கியச் சாட்சியாக இருந்தார். இந்த வரலாற்று குறிப்பையே

**படியேறு சமண்கொள்கை மாற்றிடச் சம்பந்த**
**பார்ப்பனன் சூழ்ச்சி செய்து**
**படுகொலை புரிந்திட்ட பல்லாயி ரங்கொண்ட**
**பண்புசேர் தமிழர் நெஞ்சும்**
**என்று பாரதிதாசன் பதிவுசெய்கிறார்.**
**எண்ணாயிரம் தமிழ் மக்களைக் கழுவால்**
**இழித்த குருதியைத் தேனென்றாள் விழியால்**
**பண்ணப் பழகடா பச்சைப் படுகொலை**
**பைந்தமிழர்க் கெலாம் உயிரடா விடுதலை**
**(பீரிட்டு அடிக்கும் உடற்குருதி**

என்று அதற்கு இணையான எதிர்வினையை இலக்கியக் களத்தில் பதிவித்தார் பாரதிதாசன்.

சென்னைக்கு அருகில் உள்ள பெரியபாளையம் அம்மன் கோவில் புகழ்பெற்ற அம்மன் தலமாகும். இங்கு நடைபெறும் பலியிடுதலைத் தடைசெய்ய, பாரதிதாசன் ஜீவ ரட்சகப் பிரச்சாரச் சபையைச் சார்ந்த சமணர் ஸ்ரீபால், ஓவியர் வேணுகோபால் சர்மா, டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆகியோரோடு சென்று பரப்புரை செய்தார். (கோ.கிருட்டிணமூர்த்தி, 1991:143).

மாற்றுக் கொள்கையை - கொள்கையினரை வைதீகம் கையாளும் விதம் உலக அரங்கில் தனித்துவமானது. அதுவும் நுண்ணுயிர்கள் முதல் பேருயிர்கள் வரை எவையும் கொல்லத்தக்கன அல்ல என்ற சமணருக்குப் படுகொலையைப் பரிசாகத் தந்த சம்பந்தர் காலத்து வைதீகம் சிறப்பாகக் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இதையொட்டிப் பாரதிதாசனின் பன்மணித்திரளில் (1964, ப.1505) கவிதை ஒன்று பதியனிடப்பட்டுள்ளது.

**உருவிலா ஒன்றுக் குருவ மைத்தது**
**பெரியதோர் மடமை அவ்வுருவங் கட்கு**
**விலங்கு பறவைகள் வெட்டுவ தென்பது**
**கலப்பட மற்ற கயமை யாகும்.**

**மடமையை நாட்டில் மலிவு செய்தால்**
**உடைமையை யலேசாய் உறிஞலாம் என்பது**
**பூசாரி எண்ணமும் ஆசாரி எண்ணமும்**
**இந்து வேதம் என்பதிலிருந்தே**
**இந்தக் கொலைகள் இவ்வாறு பரவின**
**யாகப் பேரால் வேக வைத்தே**
**ஆடு மாடுகளை அவர்கள் உண்பார்**
**தெய்வத்திற்குத் தீக்கொலை விலக்குமோர்**
**காந்தி அண்ணலார் கடவுளுக்கு**
**சொன்னார் அவரைச் சுட்டுக் கொன்றவன்**
**இன்னான் என்பதை யாரும் அறிவார்.**

**அறிஞர் ஆதித்தர் அன்புகூர்ந்தே**
**பலிவிலக்கு மசோதா பகரும் சென்னைச்**
**சட்டம் ஆக்குதல் சரியே என்போம்**
**அந்தச் சட்டம் அந்தணர் யாகச்**

**செந்தீ உயிர்களைத் தீயவைப் பதையும்**
**தடுக்க வேண்டும்! தடுக்க வேண்டும்!**

**பலியிட்டு உயிர்களை நலிவு செய்யாதீர்!**
**என்ற கருத்தை இத்தென் னாட்டில்**
**நாடோறும் நாடோறும் ஏடுகள் விடுத்தும்**
**வீடுகள் தோறும் விழாக்கள் தோறும்**
**சிற்றூர் தோறும் செழுநகர் தோறும்**
**சென்று பரப்பினோன் சீபால் அடடா**
**என்னென்ன இன்னல் ஏற்றான் அவற்றை**
**இன்னல் என்னான் இன்பமென் றெண்ணினான்**
**தன்னலமற்ற பெருந்தகைக்கு**
**நன்றி நவிலுக போல் வாழ்கவே!**

உருவமில்லாத பேராற்றலுக்கு உருவம் கொடுப்பதும், குறிப்பாக மனித உருவம் கொடுப்பதும், அதற்கு மனிதப் பண்பேற்றம் செய்வதும், அதன் விரும்பத்தகாத குண வெளிப்பாட்டைத் தணிவித்து ஆறுதல்படுத்தப் பலி/படையல் இடுதலும் வேத ஆரிய வழக்கே என்பது தெய்வக் கருத்துருவாக்கத்தில் கவனம் செலுத்தவேண்டிய முக்கியக் கூறாகும்.

ஒரு மனிதனின் ஆன்ம விடுதலையானது, பிற உயிர்களின் மீது கருணை காட்டுவது. இதையும் முதன்முதலில் தத்துவமாகச் சொன்னது சமண சமயம். இதை உள்வாங்கிய பாரதிதாசன், உயிர்க்கொலையை அனுமதிக்கிற இந்து வேதம் என்பதிலிருந்தே பலி போன்ற கொலைகள் பரவின. யாகத்தின் பெயரால், வேக வைத்த ஆடு,மாடுகளை உண்டனர். இதை அந்தணர்கள் செய்கின்றனர். கடவுளருக்குப் படையலாக விலங்குகள், பறவைகள் வெட்ட வேண்டாம் என்று சொன்ன காந்தி அண்ணலாரையே சுட்டுக் கொன்றனர். கொன்றவர் யாரென்பதும் உலகுக்கே தெரியும். எனவே உயிர்க் கொலையை, உணவுப் பழக்கத்திலிருந்து நீக்குவதற்காக எதிர்ப்பதை விட, கோயிலில் கடவுளர் முன் படையலிடுவதற்காகச் செய்வதை எதிர்ப்பது வேத/பிராமணீய தத்துவத்திற்கான எதிர்வினை என்ற கோணத்தில் முதன்மைப்படுத்த வேண்டும்.

இவ்விடத்தில் ஒப்பிட்டு உணர வேண்டிய இன்னொரு சமகால நிகழ்வுப் போக்கொன்றும் உண்டு. அது கோயில்களில் ஆடு,கோழி பலியிடத் தடை என்கிற அம்மையார் ஜெயலலிதா அரசின் ஆணை ஆகும். இது பல்வேறு சிறுவழிபாட்டு மரபுகளாகிய மரம் புற்று, நீர்நிலைகள், ஊன்றப்பட்டிருந்த 'நடுகல்' மரபின் முன் படையலிடப்பட்ட முன்னோர் வழிபாட்டின் தொடர்ச்சியாகும். இவற்றைப் படிப்படியாகக் கட்டட நிலையில் மேம்படுத்தி, குடமுழுக்குச் செய்து, ஆகம விதிப்படி பெருங்கோயிலாக 'மேனிலையாக்கம்' செய்து, அங்கு பூசகர் நிலையிலிருந்த பண்டாரத்தார், வள்ளுவர், கணியர் போன்ற மண்ணின் மைந்தர்களை அப்புறப்படுத்திவிட்டு, இப்போது இந்தக் கோயிலின் தெய்வங்கள் பெருந்தெய்வங்களாக அஷ்டபந்தனம் செய்யப்பட்டு விட்டதால், இனி இங்கு உயிர்ப்பலி இட அனுமதி இல்லை என்று இந்து அறநிலையத் துறையினர் ஆளுகை மேட்டிமையோடு ஆணையிட்டால், அது ஏற்கத்தக்கதல்ல என்று பெரும்பான்மை மண்ணின் மைந்தர்கள் எதிர்க்குரல் எழுப்புவது சனநாயக உரிமை சார்ந்ததே ஆகும். ஏனெனில், கோயில் உள்ளிருப்பது அவர்களது முன்னோரின் நினைவு; மூல முதற்பொருள் என்று வேதங்கள் நிச்சயித்த தேவர்கள் அல்லர்.

**புத்தர்:**

பாரதத்தாய் புத்தருக்கு சித்தருக்குத் தாய் (தொண்டர் படை பாட்டு, 1930 ப.87).

இப்படிப்பட்ட புத்தரின் கொள்கைகளையே புத்தர் பிறந்த நாவலந்தீவில் பின்பற்றினர். அவர்கள் இரண்டு இலக்கத்தவரே ஆவர். புத்தர் கொள்கையை ஆரிய மறையோர் வஞ்சகத்தால் மறக்கடித்ததே காரணம்.

நாவலந்தீவைத் தவிர உலகில் 20 கோடி மக்களால் புத்தசமயம் பின்பற்றப்படுகிறது. அங்கு அது பெரிய அளவில் பரவியதற்குக் காரணம் அங்கு ஆரிய

வஞ்சகர்கள் இல்லை. புத்தர் கொள்கையை நாவலந்தீவை விட்டு அரச வன்முறையால் வெளியேற்றியது வியப்பில்லை. வேறு எது வியப்பு என்றால், புத்தர் கொள்கையை ஆரியப் பொய் கொண்டு புரட்டியது தான். மறுபிறப்பு, ஆன்மா இவைகளைப் புத்தர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் நாவலந்தீவில் பிறந்த ஒருவனை நோக்கி, மேற்கண்ட கொள்கைகளைப் புத்தர் ஒப்புக்கொள்கிறார் என்று நம்ப வைத்தனர். ஆனால் மறுபிறப்பு இல்லை என்ற புத்தரின் கொள்கையை மாற்றியமைத்தவர்கள் திபெத்திய லாமாக்களே என்று ஆராய்ந்து கூறினார் எஸ். இராமநாதன். அதற்கு வஜ்ராயனப் பௌத்தம் என்று பெயர். இவ்வனைத்துக் கூறுகளையும் ஒன்றுகலந்து, மகாயானம் என்று ஒரு பிரிவைச் சமசுகிருத மொழிநூல்களை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கி, மெய்யான புத்த சமயத்தை நிலைகுலையச் செய்தனர். எனினும், மகாயானம், வச்சிராயனம் என்று எந்தப் பிரிவுகளிலும் முதன்மைப்படுத்தப்படாத 'பிறப்பறுத்தல்' என்னும் சிந்தனையை ஈனயானம் என்கிற தேரவாத (திராவிட) புத்த சமயம் தக்க வைத்திருப்பதையும், அதன் சிந்தனைக் கீற்றுகளைப் பாரதிதாசனின் புத்தமபுது ஆக்கங்களிலும் காண்கிறோம்.

### பிறப்பை ஒழித்தல்:

புத்தர் பிறப்பை ஒழிக்க வேண்டும் என்று கூறுவது, துன்பத்தில் உழலும் மக்கட்பூண்டே இல்லாது செய்ய வேண்டும் என்பது தானே ஒழிய வேறு எதுவுமில்லை. அதாவது உலகமக்கள் அனைவரும் மணவாழ்க்கையில் விழுந்து பிள்ளைகளை வரைமுறையின்றிப் பெறுவதன் வாயிலாகப் பிறப்பை வளர்க்க வேண்டாம் என்பதே புத்தரின் கருத்து.

இந்த உலகத்துறவு மக்களால் புரிந்துகொள்ள முடியாதது; ஆனால் இங்கு தான் இன்ப முழுமை இருக்கிறது; இதைத் தமிழர் புரிந்துகொண்டால் நாடு நலம் பெறும் (குயில் குரல் 1 இசை 26.5.1959 உலகுக்கோர் ஐந்தொழுக்கம் ப.144).

**இருக்கும் பிள்ளைகள் எனக்குப் போதும் அம்மா – என்**
**கருக்கதவை மூடிவிடுங்கள் அம்மா, அம்மா!**
**(இருக்கும் பிள்ளைகள்)**
**தோன்றியுள்ள மக்கள் நலன் யாவும் – இங்குத்**
**தோன்றாத மக்கள் தந்ததாகும்.**
**தோன்றாமை இன்பம் என்று சொன்னார் – மிகத்**
**தூயரான புத்த ஐயாவும் (இருக்கும் பிள்ளைகள்)**
(தேனருவி1978ப1759).

இதனைக் கருத்தடை மருத்துவமனையில் பெண்ணொருத்தியின் வேண்டுகோளாகப் பாரதிதாசன் படைக்கிறார்.

புத்தரின் கொல்லா நோன்பைச் சமணரும் சைவரும் திரித்துச் சொன்னதைச் சுட்டிக்காட்டி, இவ்வுலகில் கொல்லா நோன்பைச் சரியான பொருளில் சொன்னவர் புத்தர் ஒருவரே என்றார் பாரதிதாசன்.

உயிர்ப் பலி கொடுக்கக் கூடாது என்று சொன்ன ஒரே சிந்தனை, உலகளவில் இந்தியாவில்தான் பிறந்தது. தமிழ்நாட்டிற்குக் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் தான் வந்தது. அதுவரை பார்ப்பனர்கள் எல்லாம் வேள்வி நிகழ்த்தி உயிர்க்கொலை புரிந்து புலால் உண்டனர். வேதத்தில் எல்லா வகையான உயிர்களையும் பலியிடுதல் மிகுந்ததால் தான் புத்தரே கொல்லாமையைப் பேசினார். ஆனால் புலால் உண்ணாமையைப் பேசவில்லை.

சைவம், வைணவம் போன்ற ஆகமநெறிக்கு உட்பட்ட மத்தியகாலச் சமயங்களும், கோயில்களும் உருவாவதற்கு முன்பாகவே, தமது முன்னோர் இன்றைக்கு மீள்நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிற முருகனை எப்படி வணங்கினார்கள்? ஆடு,சேவல் பலிகொடுத்து, இரத்தப்பலி கொடுத்துத் தான் வணங்கினார்கள். அப்படித்தான் நமது திணை இலக்கியங்களும் பேசுகின்றன.

ஆதிசங்கரர் தனது மாயாவாதக் கொள்கையைப் பௌத்தத்திலிருந்தே பெற்றார் என்பர் சமய வரலாற்று அறிஞர். மகாயான பௌத்தத்தின் மாற்று உருவமே

சங்கரரின் கொள்கை. இதனை உணர்ந்தே இராமானுசரும் மத்துவரும், அதிசங்கரர் கொள்கையை மாறுவேடமிட்டு வந்த பௌத்தம் என்னும் பொருளில் 'பிரசன்ன பௌத்தம்' என்ற நகையாடினர். இந்த வரலாற்றுக் குறிப்பை வைத்து,

**குடியேறும் ஆரியப் பாதகர்கள் சூழ்ச்சியால்**
**கொலையுண்ட தமிழர் நெஞ்சும்**
**குறுநெறிச் சங்கரன் புத்தநெறி மாற்றிடக்**
**கொல்வித்த தமிழர் நெஞ்சும்**

என்று பாரதிதாசன் பதிவு செய்கிறார்.

வைதீகம் மட்டுமன்று, தாந்தரீகம், லோகாயதம், சாங்கியம் (எண்ணூல்), வைசேசிகம் (சிறப்பியம்) என்கிற தொன்மைக் காலப் பொருள்முதல்வாத மெய்யியல் முகாம்கள் அனைத்துமே, வரம்புக் கட்டப்படாத இன்ப நாட்டம் (Hedonism) குறித்து எந்தக் கருத்தும் தெரிவிக்காமல் இருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இதில் எந்த மெய்யியல் முகாமையும் சாராத, வாழ்வியக்கத்தின் பேரோட்டத்தில் உருண்டு செல்கிற பழங்குடிமக்களும் இன்ப நாட்டம் குறித்தோ, மக்கட்பேறு குறித்தோ கருத்துச் செலுத்தாமல் இருந்திருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. பிறவாமை, பிறப்பறுத்தல் என்கிற கருவிகளைக் கொண்டு, இன்ப நாட்டத்தின் மீது மோதிய ஒரே மெய்யியல் முகாம் பவுத்தம் மட்டுமே. அதன் நோக்கம் வெறும் புதுமை படைப்பதல்ல. மானுட வாழ்வின் துன்பத்தை அறுப்பது என்பதேயாகும்.

### புரோகிதர் :

**தொந்தி சுமக்கும் புரோகிதர் (பா.க.தொ.1, 1938, ப.210)**
**உய்யும் புரோகிதத் தந்தை – அவன்**
**உத்தியோகம் பார்க்கும் மைந்தன்**
**செய்யும் திருத்தொண்டிரண்டில் – தம்பி**
**செம்மையாய் ஒன்றினைக் கூறு**
**(இசையமுது, தொ.2,1952, ப.1009)**

**திருமணமின்றிச் செத்தான் – அந்தச்**
**சில்லிட்ட பிணத்துக்குத் திருமணம் செய்ய**
**மெல்லிய வாழைக் கன்றை வெட்டுவது**
**புரோகித தன்புரட்டு நூல் அதனைத்**
**திராவிடர் உள்ளம் தீண்டவும் நாணுமே!**

(பா.க.தொ.2, 1949, ப.782)

சாதகம் கணித்தல், பிள்ளைக்குத் தீட்டு கழித்தல், கல்யாணம், சாந்தி முகூர்த்தம், பெண்டாட்டி 7 மாத கர்ப்ப வழி, பிள்ளை செத்தது, பெண்டாட்டி செத்தது, சாகும் தருவாயில் பாவம் போகக் கோதானம் கொடுக்கத் திவசம், அமாவாசை, வீடு கட்ட, குடிபோக, அழையா வீட்டில் நுழையா சம்பந்தியாகவும் கிரஹணத் தோஷத்திற்குத் தருப்பைப்புல், கரிநாள் தேடி எலுமிச்சம்பழம், சங்கராச்சாரியார் சுவாமி கட்டணரசீது கொண்டு ஐயர் தாமே வீடுதேடி வருதலும், ஐயரை அழைப்பதும், தட்சணை கொடுப்பதுமான வாய்ப்பு மனித வாழ்க்கையில் தொடர்ந்து நடந்து வருகிறது. இதனால் பாவம் நீங்குகிறது; புண்ணியம் சுரக்கிறது; பிள்ளை பிறந்தது முதல், மனிதன் சாகும் வரை ஐயரை அழைத்துச் சடங்குகள் நிகழ்த்தும் இந்த வழக்கத்தையெல்லாம் சாடுகிறார் பாரதிதாசன். (புதுவை முரசு 8.6.1931 மானுடம் போற்று, ப.97)

சமய உருவாக்கத்திலும், அதன் அப்பால்மை அர்த்த உருவாக்கத்திலும், முதல் அலகாக இடம் பெறுவது புனித நூல்களாகும் (Sacred texts). இரண்டாவது அலகு: புரோகிதர் குழாமாகும். மூன்றாவது அலகு: மரபு ஒழுங்குகள், கட்டளைத் தொகுதிகள், தக்கன, தகாதன, கடைபிடிகள், விலக்குகள் போன்றவையாகும். இதில் இரண்டாவது அலகாகிய புரோகிதர் குழாம் தான், முன்னும் பின்னும் உள்ள அஃறிணை ஏற்பாடுகளை, ஆட்சி செலுத்தும் உயர்திணை உறுப்பாக இருப்பதைக் காண வேண்டும். இவ்வுறுப்பே காலந்தோறும் சமூகங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்பச் சமய அமைப்பு விதிகளைத் தகவமைத்துச் செலுத்தும் உயர்தனித் தலைமைக் கூறாகும்.

### ஆன்மா:

அகத்தியன் விட்ட புதுக்கரடியில் (வெளிவந்த ஆண்டு, 1948) மன்னனின் திருமணி மன்றில்,

ஒருநாள் அகத்தியன் புதியதாய்க் கருத்தொன்றைக் கூறினான்; மன்னன் அதை ஆய்ந்திட்டான். பின்வருமாறு கூறினான்:

**மன்னன்: "பிறந்த உடலும் பிணைந்த உயிரும்**
**இறந்தபின் இல்லாதொழிந்தனர்**
**எதுபின் உயிர் உடல் ஏய்தும் என்றான்"**
**அகத்தியன்: 'ஆன்மா என்றும் அழியா'** தென்று

மரணம் தவிர்க்க இயலாதது. எனவே மற்றொரு புதுக்கரடி தெற்றென விட்டான். மரணத்தைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. உடலும் ஆன்மாவும் ஒன்றாகக் கருதுவது தவறு. இரண்டும் வேறுபட்டவை. உடல் அழியத்தக்கது; ஆன்மா நிரந்தரமானது. மரணம் நேர்கையில் உடல் தான் அழிகிறது; ஆன்மா என்றும் அழிவதில்லை. காற்றில் உலராதது; தீயில் பொசுங்காதது; ஆயுதத்தால் வெட்டுப்படாதது; பகவத் கீதையில் உண்மையாகக் காணப்படும் போரை முதன்மைப்படுத்திப் போருக்கு எதிரான நிலைப்பாடு கொண்ட அர்ஜுனனுக்குச் சொல்லப்படுவதாக அமைந்துள்ளது. இது பகவத் கீதையின் இரண்டாவது இயலில் 11 முதல் 28 வரையிலான செய்யுள்களாக இடம்பெற்றுள்ளது. (அம்பேத்கர் தொகுதி 7, ப. 298).

அரசன் வீற்றிருப்பதும், பொன், பொருள், செல்வம் வைத்திருப்பதும், முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயன். மக்கள் யாவரும் அரசனாக மணிமுடி சூட முடியாது. சிறுமை முற்பிறப்பில் செய்த தீவினைப் பயன். இப்படியான கருத்தை நாட்டில் எங்கும் பரப்பினால், மன்னனின் ஆட்சியை மக்கள் எப்போதும் எதிர்க்க மாட்டார்கள். மக்களாட்சி பிறக்க வழி ஏற்படாது. அரசனாக இருப்பது முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயன். மக்களாக இருப்பது முற்பிறப்பில் செய்த தீவினைப் பயன். மக்கள் எய்திய சிறுமை முற்பிறப்பில் செய்த தீவினைப் பயன் என்பதே இந்திய வரலாற்றில் ஏற்பட்ட 'தேக்கநிலைக்கு' மெய்யான காரணமாகும். ஆனால் தேக்கநிலை என்பதை மட்டும் 'கூறியது கூறலாக' கூவிவந்த 'பொதுவுடைமையர்', அதற்குக் காரணமான அணுக்கருவை அடையாளங்காட்டத் தவறினர். அது 'சநாதனம்' என்கிற 'மாறாமை' என்ற பொருள் தருகிற பிராமணியமே ஆகும்.

அகத்தியன் என்கிற புனைவுரு வழியாக, இயல் தமிழுக்குள் நேரடியாகச் சமசுகிருத வேதியக் கருத்துகள் கலக்கப்படுவதை வரலாறு நெடுகக் காண்கிறோம். இது ஏற்கனவே தமிழில் ஓர் இலக்கிய வகைமையாக நிலைநிறுத்தப்பட்டுள்ள போற்றிப் பாடல்கள் - சம்பந்தர் தேவாரம் - நம்மாழ்வாரின் திருவாய்மொழி, மற்றும் பெருங்காப்பியமாகக் கம்பனின் இராமாவதாரம், வில்லிபுத்தூரார் பாரதம், உரை மரபாகப் பரிமேலழகரின் குறளுரை - என்பவற்றைக் கடந்து, பகவத் கீதைக் கட்டமைப்பைச் சார்ந்து ஆன்மா, மறுபிறப்பு, பரமாத்மா போன்ற கருத்துகளை அரண்செய்து, மெய்யியல் நிலையில் புத்தநெறியை எதிர்தரப்பாக நிறுத்தி விவாதிக்க முற்படுவதைக் காண்கிறோம்.

### மனுதர்மம்:

மனுநூல் நாட்டில் வழங்கப்பட வேண்டுமென்றால் அதற்குப் பார்ப்பனர்கள் காப்பாற்றப்பட வேண்டும். பார்ப்பனர் சொற்படி ஆள்வோர் ஆளவேண்டும். (கடல்மேற் குமிழிகள், 1948, ப.677) என்பது அரசுருவாக்கத்தின் கருத்தியல் அடிப்படைகளுள் ஒன்றாகும். ஆனால் சமூகத்தின் பொருளாதாரப் பரிமாணத்தை மட்டுமே வரலாற்று ஆய்வாளர் பலர் முதன்மைப்படுத்தி வந்தனர்.

### மனுதர்ம எதிர்ப்பு:

புலை ஒழுக்கம் கொண்ட பொல்லாத வடக்கர் தலையெடுத்து, இந்தத் திராவிடத்தின் கலை ஒழுக்கம், பண்பை அடியோடு ஒழித்து நாட்டையே அடிமையாக்க வலைவிரித்துப் பொய்கள் மலிந்த மனுநூலை பரவலாக்குவதைப் பார்க்கிறோம்.

**பார்ப்பனர் தம்மை இழிவு படுத்திடப்**
**பார்ப்பான் தன்னைப் பழி வாங்கிடுவேன்**
**பார்ப்பனர் நான்முகன் படைப்பில் உயர்ந்தவர்**

**முதலில் நான்முகன் முகத்தில் வந்தவர்;**
**அவள் தோளினின்றே ஆளுவோன் வந்தான்;**
**வசையுடன் இடுப்பில் வணிகன் வந்தான்;**
**காலில் பிறந்த கழிவிடை அல்லவோ**
**தறுதலை யான தம்பிரான் நீயே?**
**என்றனன், தம்பிரான் இயம்பு கின்றான்:**
**"முகத்தில் பிறப்பதும் உண்டோ முட்டாளே?**
**தோளிற் பிறப்பார் உண்டோ தொழும்பனே?**
**இடையிற் பிறப்பார் உண்டோ கழுதையே?**
**நான்முகன் என்பான் உளனோ நாயே?**
**புளுகடா புகன்றவை எலாம்போக் கிலியே!**
(குறிஞ்சித்திரட்டு, 1993, பா.க.ப. 1167)

இந்த மனுதர்மக் கொள்கை, மூலபுருஷனைப் பலி கொடுத்ததன் மூலம் உண்டானதாக, ரிக் வேதம் குறிப்பிடுகிறது.

**பாரதிதாசன் நல்வழி:**

**அறத்தை விடுதலை செய்வதே அடிப்படைக்**
**கடமை**
**மனுமுதலோர் முன்னால் வகுத்தது அறமெனில்**
**இனியதை மாற்றலும் அஃதே – மனுதான்**
**பிறப்பினிலே தாழ்வுயர்வு பேசலற அஃது**
**அறுப்ப தறமா அறை!**

பிறப்பினிலே தாழ்வு உயர்வு பேசுகின்ற மனுதர்மத்தை அழிக்க வேண்டும் என்கிறார் பாரதிதாசன்.

பிராமணியக் கடவுள் கருத்துருவாக்கம், எல்லாம் வல்ல படைப்பாற்றலை கடவுளுக்கு வழங்குவதை விட, மனிதர்களில் உள்ள பல்வேறு குழுக்கள் யார் யார், கடவுளின் எந்த எந்த உறுப்புகளில் இருந்து தோன்றினார்கள், அது உலகியல் வாழ்வில் மக்களுக்கு எந்தவகை அதிகாரப் படிநிலை வழங்க உதவுகிறது என்பதிலேயே முதன்மைக் கவனம் செலுத்துகிறது.

செமிட்டிய மதங்களான - யூத, கிறித்துவ, இசுலாமிய - கடவுள் உருவாக்கக் கோட்பாட்டில் களிமண்ணிலிருந்து மனிதன் உருவாக்கப்பட்டு, அவனுக்குள் உயிர்க்காற்றை ஊதி உட்செலுத்தி, மானிட வாழ்வைத் தொடக்கி வைப்பதாகப் புனிதச் சான்றுகள் கிடைக்கின்றன. ஆனால் அந்த முதல் மனிதனுக்கும் அடுத்தடுத்து வரும் மனிதத் தலைமுறைகளுக்கும் கடவுளின் உயிர்க்காற்றை முதலில் பெற்றவர் பெறாதவர் என்கிற வகையில், உலகியல் அதிகாரம் சார்ந்து பேதங்களோ பாகுபாடுகளோ இல்லாததைக் கவனிக்க வேண்டும்.

**பெண் விடுதலை:**

**இதுவெல்லாம் முன்னால் பிரம்மன் எழுதியதாம்**
**ஆரும் அழிக்கமுடியாது கொண்டவனால்**
**நேருவதை நாம் தடுக்க எண்ணுவதும்**
**நேர்மையில்லை**
**பெண்டாட்டி என்றும் பிழை செய்யக்கூடியவள்**
**கொண்டவன் கொல்வான்; அணைப்பான்**
**அவன் விருப்பம்**
**இந்நாள் இதுவெல்லாம் நான் சொல்லும்**
**சொல்லல்ல**
**அந்நாள் மனுவே அழுத்தி எழுதியவை.**
(பாரதிதாசன் பன்மணித்திரள், 1964, பா.க.ப. 1485)

என்கிற பாரதிதாசன் கருத்துகள், மனுவின் 'சமய அமைப்பு'ச் சட்டங்கள் எந்த அளவுக்குச் சாதாரண மனிதர்களின் அன்றாட வாழ்க்கையை அடைத்துக் கொண்டிருக்கும் சேற்றுச் சகதியாக உள்ளன என்பதைக் காட்டுவனவாக உள்ளன.

**சாங்கியம்:**

உலகிற்கு முதன்முதலில் தத்துவநூல் (கபிலர், எண்ணூல்) தந்தவர்கள் தமிழர்கள். இருநூல்கள், இருகொள்கைகள், இருவேறு மொழிகள், இருவேறு பண்பாடுகள். வடமதுரைக் கண்ணன் பகவத் கீதையைப் பகர்ந்தான்; தென்மதுரைத் திருவள்ளுவர் திருக்குறள் அருளினார். கீதையைக் கண்ணன் நான்மறை அடிப்படையில் அருளினான். திருக்குறளை வள்ளுவர் ஆரூர்க் கபிலர் அருளிய எண்ணூல் அடிப்படையில் அருளினார். எண்ணூல் என்பதைச் சாங்கியம் என்று வடமொழியார் வழங்குகிறார்கள். ஆனால் பரிமேலழகர் உரையாசிரியர், சாங்கியக் கருத்தைக் கொண்டு திருக்குறளுக்கு உரைசெய்யவில்லை. மற்றொரு

உரையாசிரியரான கல்லாடனாரோ, வள்ளுவர் சமயக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறி, பொருள் இது என்று குறள் படைத்தார் என்கிறார்.

வள்ளுவர் எந்த மதத்தையும் சாராதவர், சாங்கியம் என்பது மதமன்று; அது தத்துவ நூலே. இரண்டாயிரம் என்னும் ஆண்டிற்கு முன் படைக்கப்பட்ட குறளுக்கு ஆயிரத்துநூறு ஆண்டுகள் கழித்துப் பெருவைணவரான பரிமேலழகர் உரைசெய்தார். இவ்வுரையானது வள்ளுவரின் உள்ளத்தை மறைத்தது. 'நிற வேறுபாட்டை அறவே ஒதுக்கிய திருவள்ளுவரின் அமிழ்தக் கொள்கையை நஞ்செனப் பரிமேலழகர் உரைசெய்தார். தமிழரின் எதிர்ப்புறத்தில் உள்ள இனத்தாரின் மேன்மையை வள்ளுவத்தின் உரையாகச் செருகினார். வடநூல் அடிப்படையாகக் கொண்டே வள்ளுவர் குறளை இயற்றினார் என்று எண்ணும்படிப் பரிமேலழகர் உரைசெய்தார். ஒழுக்கமுடைமை, குடிமை என்பதற்கு உரைசொன்ன பரிமேலழகர், தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கம் தன்னை உடையார் ஆதல் என்று பிழையுரை செய்தார்.

சாங்கியம் என்னும் தத்துவத் தரிசனம் மிகப் பழமையானது. இதன் ஆசிரியர் கபிலர். இவர் கி.மு.7ஆம் நூற்றாண்டாக இருக்கலாம். அன்றைய தத்துவ ஞானிகளின் முக்கியக் கவலை, உலகத் தோற்றம் பற்றிய விளக்கம்; சாங்கியம் தந்த விடை: இந்த உலகமானது உணர்வற்ற ஒரு மூலப்பொருளிலிருந்து பிறந்தது (மூலப்பிரகிருதி) என்பதாகும். உலகில் ஐம்பூதங்களும் மூலப் பிரகிருதியிலிருந்து வந்தன என்பதன் மூலம், சாங்கியம் பொருள் முதல்வாதமாகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டது. கருவிசார்ந்த விஞ்ஞான வளர்ச்சியில்லாத அந்த நாளில் மூலமான ஜடப்பொருளிலிருந்து சகலமும் தோன்றியது என்கிற விளக்கம் முக்கியச் செய்தியாகும்.

பின்னாளில் வேதாந்திகள் உள்புகுந்து, புருஷன் என்ற பெயரில் சடப்பொருளற்ற ஒரு மகா உணர்வினை உருவாக்கி, மூலப்பொருளுக்குச் சமமாக வைத்துவிட்டார்கள். யோகம் என்கிற பெயரிலும் இந்தத் திருப்பணி நடந்தது. நாத்திகவாதமான இந்தச் சாங்கியத்தை வேதமரபு என்று சொல்லி, அதன் உயிர்ச்சத்தை வேதாந்திகள் உறிஞ்சிவிட்டார்கள். (சான்று: மணிமேகலை. நீலகேசி) (அருணன், தமிழரின் தத்துவ மரபு தொகுதி.1). மெய்யியல் அடிப்படையில் அமைந்த மதங்களைச் சடங்குகள், நம்பிக்கைகள், தெய்வங்கள் சார்ந்ததாக மாற்றியமை இந்த வரலாற்றுக் குறிப்புகளில் காணக் கிடைக்கின்றன. சமய உருவாக்கத்தில் மெய்யியலின் பங்கு என்ன என்பதை இந்தச் சான்றுகள் வழி நன்கறியலாம்.

## பாரதிதாசன் சொல்லாடல்களும் கண்ணோட்டங்களும்:

மங்காத தமிழ் மறவர்களின் வரலாற்றையெல்லாம் மங்க வைத்துத் தமிழர்களெல்லாம் அசுரர்கள் என்றும், தம்மைச் சுரர்கள் என்றும், நம்மையெல்லாம் அழகற்றோர், ஒழுக்கமிலார் என்றும் கூறினார்கள். மேலும், குரங்கினங்கள் குறுங்கரடிக் கூட்டம் என்றெல்லாம் இழிவு படுத்தினர்.

**அரக்கரென்றார், அசுரர் என்றார், நம்மையெல்லாம்**
**அழகற்றோர் ஒழுக்கமிலார் என வரைந்தார்**
**சுரக்கவில்லை மலையருவி! உணர்ச்சி வெள்ளம்**
**தோன்றவில்லை நெஞ்சத்தில் நமைமறந்தோம்**

**இராமன்:**

**வாலியின் பால் வஞ்சத்தைச் செய்த ராமன்**
**வாலிக்கு மோட்சத்தை அருள் செய்தானாம்**

**ஆழ்வார்:**

**கோலைத்தன் வசமாக்கச் சதையை விற்ற**
**கொடியவன்பேர் ஆழ்வானாம் உடன் பிறந்தீர்;**

**இந்திரன்:**

**கேலியொன்று கேட்டிரோ நரகன் என்போன்,**
**கீழ்ச்செயல்கள் செய்தானாம் சுரர்கட்கெல்லாம்**
**ஏலாத செயல் செய்த பாவியாம் – அவ்விந்திரனின்**
**ஆட்சியையும் பறித்ததுண்டாம்**

**நரகன் வதம்:**

**பெண்ணினத்தைக் கொல்லாமை கடைபிடித்த**
**பெரியானை, நரகன் எனும் தமிழச்சேயைப்**
**பெண்டாட்டி துணையனுப்பி, மானமின்றி**
**பெருவெற்றி கிழித்தாராம் கண்ண வீரர்**
**பண்டியகையாம்! தீவாளிஅந்த நாளாம்.**
**பல்லக்கை வழிகூட்டி அனுப்புகின்ற**
**பெண்டுக்குப் போடுதல் போல் கழுத்துக்கோடி**
**பெரிதுபெரிதாய் வாங்கி படையலிட்டே**
**அணிந்திடவும் வேண்டுமாம், அந்நாளில்**
**அக மகிழ வேண்டுமாம். அதுவுமின்றித்**
**தணியாத மகிழ்ச்சிதனை; அறிவைஅந்நாள்**
**தலைமுழுக வேண்டுமாம், தமிழர் மானம்**
**தணல் பட்டுப் படடென வெடித்த தென்று**
**சாற்றுதல் போல் வெடி கொளுத்த வேண்டுமாம். இப்**

**பணியிட்டோர்,ஆரியர்கள். தமிழர் என்னும்**
**பண்டிதர்கள் இவற்றிற்குக் கவிதை செய்தார்.**
**இனாழிப்போர் அடிசுமக்கும் படிச்சு வர்கள்!**
**இனமழிப்பார் அடிசுமக்கும் படிச்சு வர்கள்!**
**கனலென்று நடுங்கினரோ? நம்மினத்தைக்**
**கசந்தாரோ? வற்றியதோர் ஓலையைப் போல்**
**மனம் சுருண்டு போனாரோ ? தம்மைத்தாமே**
**மறந்தாரோ; ஐயகோ தமிழர் தம்முன்**
**முன மிருந்தார் சிலகம்பர்: விட்டதாலே**
**முளைத்தகம் பக்கிளைகள் மும்ம டங்கோ?**

புலமையோர், இலக்கணிகள், தர்க்க வல்லுநர் போன்றோர் தொழிற்படும் மெய்யியல் துறை போன்று அல்லாது, சாமானியர் கைக்கொள்ளும் மதத்தின் பரிமாணம் என்பது பண்டிகை நாட்களேயாகும். ஒரு சமுதாயத்தின் பேரெண்ணிக்கையினர் பங்கு கொள்ளும் பண்டிகைத் தடத்தில் தான் இன வெறுப்பு, பால் பாகுபாடு, உருவக் கேலி, வேறுபாடுகளைப் பகடிசெய்தல் போன்றவை ஆழமாக ஊன்றப்பட்டுள்ளன. மதத்தின் இருப்பைப் பெருந்திரளான மக்களின் பொது நினைவில் (Common memory) பதிய வைத்திருப்பதில், பண்டிகைக் கொண்டாட்டங்களின் பங்கு, சமய அமைப்பு விதிகளின் படி மிக ஆழமானது.

**சமஸ்கிருதம் (தீய வட சொல்):**

**கோயில் மணவாயில்களில் கொஞ்சுதமிழ் நீக்கி தங்கள்**
**தீய வடசொல் புகுத்தும் தெக்கணாமுட்டி கட்கெல்லாம்**
**போய் அளக்கும் காங்கிரசா எங்கள் தமிழை – இங்கு**
**காத்ததென்று புகன்றனை கண்ணு மில்லையா?**

**தமிழ் நூல்:**

**பேய்களை நாம் கண்டதில்லை பேருலகில் என்தமிழா**
**அன்று தமிழ்நூல் அழித்தார்கள் ஆரியர்கள் இன்று**
**தமிழ் வேரறுக்க எண்ணிவிட்டார் என் தமிழா**
(பாரதிதாசன் பன்மணித்திரள், பக்.1461 - 1462)

**பேதம் - வெள்ளையர் ஆட்சி:**

**வேதத்தின் பேர்சொல்லி தெற்கை வளைக்க**
**விளைத்தனர் சூழ்ச்சிகள் அந்நாள் – வந்த**
**வெள்ளையர்கள் ஆட்சி தொலைப்பதன் பேரால்**
**சாதி மதங்கள் வடவர் காலூன்றும்**
**சாரக்கட்டானது கண்டோம் - மக்கள்**
**தாயகம் காக்கத் திராவிட மக்கள்**
**அனைவரும் ஒன்றெனக் கொண்டோம்!**
(பாரதிதாசன், பன்மணித்திரள், ப.1529)

**நிறைவுரை:**

புராண இதிகாசக் குறிப்புகளின் படி 'இந்து' (சனாதனம்) என்கிற மதம் காலமற்ற காலத்தில் இயங்கி வருவது என்பதை அறிகிறோம். ஆனால் 19, 20-ஆம் நூற்றாண்டில் உருவான பிரிட்டிஷ் காலனிய ஆட்சியை எதிர்த்து, இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட குடிமைச் சமூகப் பரிமாணங்களை (இசுலாம், கிறித்துவம் தவிர்த்து) ஒரு சமயமாகத் திரட்டிக் கொள்ளும் விந்தையான நேர்வு நிகழ்ந்ததை வரலாற்று ஆய்வாளர்கள் சிலர் விண்டு உரைத்துள்ளனர். இந்த நேர்வுக்குப் பிறகே, இந்தியாவின் பூர்வீக மற்றும் பெரும்பான்மை மதம் இந்து மதமே எனும் வாதம், அரசியல் சமூக வெளியில் முழக்கமாக மாறத் தொடங்கிற்று.

பெருந்திரளான மக்களின் மனத்தில், உடலில், வாழ்க்கைப்பாடுகளில் ஓர் அருவப்பொருளாக ஊடுருவி, ஆனால் அழுத்தம்திருத்தமாக

அன்றாடக் கடைபிடிகளாக, நியமங்களாக, ஒழுகலாறுகளாகப் பற்றிக் கொண்டிருப்பதை உருவி எடுத்து, அறிவுப்புலத்தில் அதைப் பொருண்மைத் தோற்றத்திற்குக் கொண்டு சேர்த்து, வெகுஜன விமர்சனச் சொல்லாடலுக்கு உட்படுத்தியதே, பாரதிதாசனின் இலக்கிய ஆக்கங்களின் சிறப்பான பகுதி என்று கொள்ளத்தக்கதாகும். சமய அமைப்பு விதிகளைப் புரிந்து கொள்வதன் மூலம் மட்டுமே, முன்பு கூறிய வெகுஜன விமர்சகனின் சொல்லாடல்களைக் கூர்மைப்படுத்த இயலும். இதில் பாரதிதாசனின் ஆக்கங்கள் - தொன்மைக் கால, மத்திய கால, நவீன கால இலக்கியப் படைப்பாளிகள் எல்லாரிடமிருந்தும் பலபடிகள் முன்னேறி நிற்பதாகும்.

19 - 20ஆம் நூற்றாண்டுகளில் வளர்ந்து வருகிற மொழி/இன உணர்ச்சிக்கு அடிப்படை, தொன்மைக் காலத் திணைநிலை இலக்கியச் சிந்தனைகளே ஆகும். ஆனால் வேத வழிப்பட்ட சிந்தனைகள், திணைநிலைச் சிந்தனைகளை வென்றடக்கித் தமிழ்பேசும் நிலப்பரப்பில் ஆயிரம் ஆண்டுகள் நிலைபெற்று நிற்கின்றன. திணைநிலை வழிவந்த மொழி-இனத் தேய உணர்ச்சியை மீண்டும் வாழ்வியக்கத்தின் மையத்திற்குக் கொண்டுவருவதே பாரதிதாசனின் முதன்மை குறிக்கோளாகும். அதற்குக் குடிமை வாழ்விற்குள் செல்வாக்கு செலுத்துகிற சமயத்தின் அமைப்பு விதிகளை உணர்ந்து தெளிந்து, அதற்கு முறிமருந்தாக, சுயமரியாதை, சனநாயகம், சோசலிசம், மொழி-இன உணர்ச்சி போன்றவற்றையே மாற்றாக நிறுத்துவதைப் பார்க்கிறோம்.

இந்த மொழி-இனத் திரட்சி என்கிற நிகழ்வுப்போக்கிற்கு முற்பட்டு தேவைகளாக ஆரியர் குடியேற்றம், கங்கை, சிந்து ஆற்றங்கரைகளில் அமைந்த குடியமர்வுகள், அக்கம்பக்கமாக அமைந்திருந்த திணைநிலைக் குடிகள், வழிவளர்ந்த பேரரசுகளோடு புரோகித உறவு கொண்டமை, பிறகு நாவலந்தேயம் (இந்தியா) முழுமையும் அகற்சி மேற்கொண்டமை, உற்பத்தி சார்ந்த உழைப்புச் சக்தியாக வளராமல், அப்பால்மை உலகுக்கான இறைத்தரகு அலகாகத் தம் குழுவை வார்த்தெடுத்துக் கொண்டமை, இந்தியாவின் பல்வேறு சாம்ராஜ்யங்களோடு, வேள்வி, சடங்கு, பண்டிகைகள், நுண்கலைத் துறைகள் சார்ந்து பிணைப்பு கொண்டமை, கிழக்கிந்தியக் கம்பெனியும் அதன் தொடர்ச்சியான காலனீய அரசிலும், உயர் அதிகாரப் பொறுப்புகளில் இருந்து கொண்டே சநாதனப் பண்பாட்டைக் காத்து வந்தமை, விடுதலை பெற்ற இந்திய அரசில் தனிப்பெரும் அதிகார மண்டலமாக உயர்ந்தமை என்கிற சமூக வரலாற்று அணுவியக்கங்களும் புரிந்து கொள்ளப்படுவது ஓர் இன்றியமையாத தேவையாகும்.

இவ்வனைத்தின் கூட்டிணைவோடே மேற்சொன்ன மொழி-இனத் தேயத் திரட்சியைப் பாரதிதாசன் விளங்கிக்கொண்டும், விண்டுரைத்தும் வந்தார் எனலாம்.

## குறிப்புதவி நூல்கள்:


1. **இசையமுது, பாரதிதாசன்.**
2. **அகத்தியன் விட்ட புதுக்கரடி, பாரதிதாசன்**
3. **தேனருவி, பாரதிதாசன்**
4. **பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1 & 2**
5. **பாரதிதாசன் பன்மணித்திரள்**


## ஆசிரியர் குறிப்பு:


*பேராசிரியர் மணி கோ.பன்னீர்செல்வம் அவர்கள், சென்னையிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், பாவேந்தர் பாரதிதாசன் ஆய்வு இருக்கையில் பணியாற்றி வருகிறார்.*


* * *

***The Essence of Social Justice.***

- “If a larger country oppresses a smaller country, I’ll stand with the smaller country.
- If the smaller country has a majoritarian religion that oppresses minority religions, I’ll stand with minority religions.
- If the minority religion has caste and one caste oppresses another caste, I’ll stand with the caste being oppressed.
- In the oppressed caste, if an employer oppresses his employee, I’ll stand with the employee.
- If the employee goes home and oppresses his wife, I’ll stand with that woman.

Overall, oppression is my enemy!

**Periyar E.V.R**

# மதுவின் வரலாறு – விலக்கு - சாத்தியக்கூறுகள்

எழுத்தாளர் **ஞான. வள்ளுவன்**



**கட்டுரைச் சுருக்கம்:**

*இன்றைய சூழலில் தமிழகத்தில் முழு மதுவிலக்கு வேண்டும் என்று சில அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் வலியுறுத்திக் குரலை உயர்த்தியுள்ளன. பன்னெடுங்காலமாக அவ்வப்போது இது போன்ற வலியுறுத்தல்கள் தேர்தலை மையப்படுத்தி எழுவது நடைபெற்று வருகிறது.*

*இருப்பினும், இந்நிலையில் முழுமையான மதுவிலக்கு என்பது சாத்தியமா? என்பதை ஆராயும் முகத்தான், தமிழ்நாட்டில் மதுவின் வரலாறு தொடங்கி, இன்றுவரை நாம் அதன் வழியாகச் சந்தித்த விளைவுகள் என்ன? என்பதையும், மதுவின் பிடியிலிருந்து மக்கள் விடுபட வேண்டுமாயின் அதற்கு யாரெல்லாம் எவ்வழியிலெல்லாம் தங்கள் பங்கினைச் செலுத்த வேண்டும்? என்பதையும் கண்டறிவதே இக்கட்டுரையின் சாரமாகும்.*

## கட்டுரையின் நோக்கம்:

பெரும்பான்மை ஏழை எளிய விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரத்தைச் சீர்குலைக்கும் காரணிகளில் முதன்மையாகத் திகழ்வது மதுப்பழக்கம் ஆகும். இப்பழக்கம் உலகம் முழுவதும் பன்னெடுங்காலமாகப் பரவியிருந்தாலும், பிற நாடுகளில் மதுப் பழக்கத்தால் மக்கள் சீரழிந்து விட்டார்கள் என்றோ, நாட்டின் பொருளாதாரமே மது விற்பனையால் தான் நிலைநிறுத்தப்படுகிறது என்றோ கூறப்படவில்லை.

மாறாக, இந்திய ஒன்றியத்தில் மட்டும் பெரும்பான்மையான விளிம்புநிலை மக்கள் சீரழிந்து போவதற்கு மது முக்கிய காரணமாக உள்ளது என்பதும், நாட்டு வருவாயின் பெரும்பங்கு மதுவிற்பனை வழியாகவே கிடைக்கிறது என்பதால் அது தீங்கென்றறிந்தும், அதனைக் கைவிட முடியாமல் ஒன்றிய, மாநில அரசுகள் தடுமாறுகின்றன என்பதையும் காண்கின்றோம். இதற்கிடையில் அரசியல் காரணங்களுக்காக எதிர்க்கட்சிகளாக உள்ளபோது மதுவிலக்கை ஆதரித்தும், ஆளுங்கட்சியாக இருக்கும்போது அதற்கு எதிராகவும் பேசும் நிலையில் தங்கள் கொள்கையில் நிலையில்லாமல் அரசியல் கட்சிகள் இருக்கின்றன.

தமிழகத்தைப் பொருத்தமட்டில், முழு மதுவிலக்கு சாத்தியமில்லாத நிலையில், தொடர்ந்து நடைபெறும் கள்ளச் சாராயச் சாவுகளால், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படும் சூழல் தொடர்வதால், எந்த முடிவினையும் எடுக்கமுடியாமல் உள்ள ஆளும் அரசுக்குப் பல நெருக்கடிகள் வருகின்றன.

இச்சூழலில் இத்தீங்கிழைக்கும் கொடிய மதுவை அடியோடு ஒழித்துவிட முடியுமா? மது விற்பனையன்றி, வேறு வழிகளில் நாடு தன் பொருளாதாரத்தை வலுச்செய்ய வழியே இல்லையா?

இம்மது ஒழிக்கப்பட வேண்டுமாயின் அதற்கான வழி யார் கையில் இருக்கிறது? போன்ற ஐயப்பாடுகளுக்கு வழிகாணும் முயற்சியில், மதுவின் வரலாற்றை அறிந்து கொண்டு, அதற்கான முடிவைக் காண முயலுகின்ற வகையில், அது குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விடுதலைக்கு முன் நம் நாடு பல துண்டுகளாகச் சிதறிக் கிடந்தது. ஆங்கிலேயர்களின் முயற்சியால் அஃது ஒருங்கிணைக்கப் பட்டு 'இந்தியா' என்ற பெயரோடு நமக்கு அளிக்கப்பட்டது. இன்றைய ஒன்றிய அரசு தமக்குள்ள அதிகாரங்களோடு மாநிலங்களுக்கு எனச் சில அதிகாரங்களையும் அளித்து ஆட்சி நடந்து வருகிறது. இந்நிலையில், மதுவிலக்கைத் தன் வாழ்நாள் முழுவதும் ஆதரித்த காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலம் தவிர்த்து, இந்திய ஒன்றியத்தின் பிற மாநிலங்களில் வருவாய்க்காக வேண்டி, மது விற்பனை அரசின் ஆதரவோடு நடந்து கொண்டு தான் வருகிறது. தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள், தனியாரிடம் தாரை வார்க்காது, தாமே மது விற்பனை செய்வதை மேற்கொண்டும் வருகின்றன.

மது என்ற போதை தரும் நீரானது, மனித வாழ்வில் நீண்ட காலமாகவே அவனுடன் பயணித்து வருகிறது. மனித சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கும் ஒன்றாக மது விளங்கினாலும், அது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் விரும்பி அருந்தும் ஒரு பானமாக இருந்துள்ளது.

இந்திய ஒன்றியத்தின் பெரும்பான்மை மக்களான இந்துக்களின் புனித நூலாகக் கருதப்படுவன வேதங்கள் ஆகும். என்றைக்கும் அழிக்க முடியாத, மாற்ற முடியாத தன்மை கொண்ட ஸநாதனத்தின் அடையாளமாகக் கருதப்படும் இந்த வேதங்கள் ரிக், யஜுர், சாம, அதர்வண என்ற நான்கு ஆகும். இவற்றின் காலம் மூவாயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என்று அறியப்படும் நிலையில், இதனை பெருமைப்படுத்தும் விதமாக இவை பத்தாயிரம் ஆண்டுகள் பழமையானவை என்றும், அதற்குப் பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றியவை என்றெல்லாம் பலவாறு பேசப்படுகிறது. துவக்கத்தில் வாய்மொழியாக பாடப்பட்டும், சொல்லப்பட்டும் வந்த வேதங்கள், பின்னாளில் வடமொழியான சமஸ்கிருதத்தில் எழுத்து வடிவம் பெற்றன. (இன்று தமிழிலும் வேதங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன)

இவ்வேதங்கள் ஆரியர்களுக்கு உரியது. காலப்போக்கில் ஆரியர்கள் நாட்டின் பிற பகுதிகளுக்குப் பரவியபோது, தங்களின் வேதங்களை உடன்கொண்டு சென்றனர். அவர்கள் சென்ற பகுதியிலிருந்த மக்களின் மொழி வேறாக இருந்தபோது, வடமொழியை அறியாத அம்மக்களிடையே, தங்கள் மொழியில் உள்ள வேதங்கள் கடவுளால் எழுதப்பட்டவை என்றும், மக்கள் செய்யும் பாவங்களைப் போக்கவும், வேண்டியதைக் கொடுக்கக் கடவுளைப் பிரார்த்திப்பதற்கும், இந்த மந்திரங்கள் வழி காட்டும் என்றும் கூறினார்கள். அவற்றைப் படிப்பதற்கும், கற்பதற்கும் புனிதமான தங்களுக்கு மட்டுமே உரிமை உள்ளது என்று கூறியதை மக்களும், அவர்களை ஆண்ட மன்னர்களும் நம்பினார்கள். இப்படியாக வேத மந்திரங்களுக்கு நாட்டில் வேறு எதற்கும் இல்லாத அளவுக்கு உயர்வையும், புனிதத்தையும் நிலை நாட்டினார்கள். இன்றைக்கும் பார்ப்பனர்கள் இதனை விடாமல் கையில் வைத்துள்ளனர் என்பதற்கு அவர்களின் மதகுருவான சங்கராச்சாரியார் வேதம் பற்றிக் கூறிய இந்த வரிகளே சாட்சி.

'ஆராய்ந்து பார்த்தால் ஹிந்துமதப் பிரிவுகளுக்கு மட்டுமின்றி உலகில் உள்ள எல்லா மதங்களுக்குமே மூலம் வேதம் தான் என்று தெரியும். அந்த மூலத்தை மங்காமல் ரட்சிக்க வேண்டும் என்பதே நம்முடைய தலையாய கடமை.' (1)

வேதங்களை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்ட மனு சாஸ்திரம் போன்றவற்றில் கூறப்பட்டுள்ள நீதிகளின் படித் தான் அரசாள வேண்டும் என்றும், அதனைக் கடைபிடிக்காத மன்னன் நரகத்திற்குத் தான் செல்வான் என்பதைக் கேட்ட அந்நாளைய நம் மன்னர்கள், அதனைத் தலைமேற்கொண்டு நாட்டில் 'ஒரு குலத்திற்கொரு நீதி' என்ற பாகுபாடு கொண்ட மனுதர்ம ஆட்சி நடத்தினார்கள்.

இத்தகைய பலம் வாய்ந்த வேதங்களின் பாடல்கள், குறிப்பாக ரிக் வேதப் பாடல்களில் பெரும்பான்மையானவற்றில் ஆரியர்கள் விரும்பி அருந்திய மது வகையான 'சோம பானம்' பற்றியே கூறப்பட்டுள்ளன என்றால் மிகையில்லை. சோம பானம் என்பது 'சோமலதா' என்ற ஒரு மூலிகையிலிருந்தோ ஒருவகை கிழங்கிலிருந்தோ எடுக்கப்படும் சாறாகும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அக்காலத்திலேயே இந்த மதுவுக்கு அடிமையாகிப் போன அம்மக்கள், அதனைப் பெருமைப்படுத்தவும், புனிதப்படுத்தவும் வேண்டி, இந்த ஸோம ரசமானது 'கடவுளின் பானம்' என்றும், அவர்களுக்குப் பிடித்தமானது என்றும் சொல்லி அவர்களை வணங்கி அழைத்த போதெல்லாம் அதனைப் பருகிட வேண்டினர்.

எதற்காக அவர்களின் கடவுளர்களை வேண்டினர் என்றால், அவர்கள் இந்த நாட்டிற்குள் நுழைந்தபோது அங்கு உயர்ந்த நாகரிகத்தில், கோட்டை கொத்தளங்களில் வாழ்ந்திருந்த கருப்பின மக்களை தஸ்யூக்கள் என்றும் அரக்கர்கள் என்றும் அழைத்தனர். தங்களின் முக்கிய எதிரிகளாகக் கருதிய அம்மக்களைப் போரிட்டு அழித்திட, தங்களின் கடவுளர்களான இந்திரன், வருணன், ருத்ரன், அக்கினி ஆகியோரை அழைத்து 'பலத்தையும் மகிழ்வையும் தரும் சோமபானத்தை அருந்திவிட்டு எங்கள் எதிரிகளை அழிப்பாயாக' என்று வேண்டினர். இது குறித்த பாடல்களே ரிக் வேதத்தில் பெரும்பான்மையாக உள்ளன.

அப்பாடல்களில் சிலவற்றைப் பார்க்கையில் இது விளங்கும்.

- 4-0 இந்திரனே! சித்திரபலனுவே! இங்கு வா! விரல்களால் பிசையப்பட்டவையும் எப்போதும் சுத்தமாயிருப்பவையுமான இந்த ஸோமங்கள் உன்னை விரும்புகின்றன. (பக்-02)
- 4-2 ஸோமபானஞ் செய்பவனே! எங்கள் யக்ஞங்களுக்கு வா.ஸோமத்தைப் பருகு. செல்வத்தைத் தரும் உன் திருப்தி பசுக்களையளிக்கிறது. (பக்-5)
- 5-5 ஸோமத்தைப் பருகுபவனின் திருப்திக்காக தயிரோடு கலக்கப்பட்டுள்ள இந்த ரஸங்கள் ஊற்றப்படுகின்றன. (பக்-6)
- 52-10 இந்திரனே! ஸோம ரச பானத்தால் நீ மதமடைந்து உன்னுடைய வச்சிராயுதம் சோதியையும் புவியையும் தடைசெய்த விருத்தனின் தலையை வேகத்தோடு துணித்தபோது தோன்றிய அஹியின் ஆரவாரத்தால் வந்த பயத்தால் வலிய சோதியும் கிழிந்தது. (பக்-87)
- 19-9 அக்கினியே! நான் முன்போல் உன் பானத்துக்காக இனிய ஸோமத்தைப் பொழிகிறேன். மருத்துக்களோடு வா. (பக்-24)
- 23-4 நாங்கள் யக்ஞத்தில் தோன்றுபவர்களும் சுத்த வலியர்களுமான மித்திரனையும் வருணனையும் ஸோமத்தைப் பருக அழைக்கின்றோம். (பக்-29)
- 48-12 உஷையே! எல்லாத் தேவர்களையும் வானிலிருந்து ஸோமத்தைப் பருக அழைத்து வரவும். எங்களுக்கு மேன்மையாயும் வலிமை யளிப்பதாயும் உள்ள உணவைப் பசுக்களோடும் குதிரைகளோடும் அளிக்கவும். (பக்-79)
- 86-01 மிகுந்த பிரகாசமுள்ள மருத்துக்களே! நீங்கள் வானிலிருந்து இறங்கி வந்து எவனுடைய மனைக்குச் சென்று ஸோமபானஞ் செய்கிறீர்களோ அவன் நல்ல பாலகர்களுடனாகிறான். (பக்-140) (2)

இவற்றை நோக்குங்கால் இந்திய நிலப்பரப்பில், மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு ஆரியர்கள் வந்து குடியேறிய போதே ஸோமபானம் என்ற ஒருவகை மதுவை அருந்தும் பழக்கம் கொண்டிருந்தனர் என்று அறிய முடிகிறது. இதைவிட அதிக போதை அளிக்கக்கூடிய 'சுரா' என்ற பானத்தையும் அருந்தினார்கள் என்று வேதப்பாடல்கள் கூறுகின்றன.

வேதங்களைத் தொடர்ந்து எழுதப்பட்டவை சாஸ்திரங்களும், இதிகாசங்களும் ஆகும். கடவுளர்களில் மிக முக்கியமானவராகப் போற்றி வணங்கப்படும் இராம பிரானின் கதையைக் கூறும் இதிகாசம் இராமாயணம் ஆகும். இது முதலில் வால்மீகி என்பவரால் எழுதப்பட்டு அதன்பின்

பலர் அதனை எழுதியுள்ளனர். பின்னாளில் கம்பர் என்பார் தமிழிலும் அதனை எழுதியுள்ளார். இந்த இராமாயணங்களுக்குள் பல மாறுபாடுகள் காணப்படுகின்றன. கம்பர் தமிழில் எழுதும்போது, தமிழ்நாட்டுப் பண்பாட்டுக்கும், கலாச்சாரத்திற்கும் ஊறு ஏற்படாதவாறு அதனை மாற்றி எழுதினார் என்று சொல்வார்கள்.

இதன்படி, புனிதக் கடவுளாகக் கருதப்படும் இராமன் மது குடித்தான் என்று வால்மீகி இராமாயணம் கூறுவதாகவும், அப்படிக் காட்ட விரும்பாத கம்பர் அதனை மறைத்து எழுதியுள்ளார் என்றும், இரு இராமாயணங்களையும் பற்றி அறிந்த ஒருவரின் (ம.பொ.சி) கூற்றால் அறியலாம். அது என்ன?

'வான்மீகியில் வரும் இராமன் குடிப்பழக்கமுடையவன். ஆனால், கம்ப ராமாயணத்தில் அவன் குடிப்பழக்கத்தை விட்டு விடுகிறான். தமிழ்நாடு, தமிழர் நாகரிகம் குடிப்பழக்கத்திற்கு எதிரானவை என்பது கம்பரின் நம்பிக்கை. அதனால், குடிப்பழக்கமுடைய வான்மீகி ராமனை, குடியொழித்த கோமகனாகக் காட்டுகிறார். தெய்வமே மானிடனாக வந்தாலும், அவன் குடிப்பழக்க முடையவனானால், தமிழ்நாட்டில் நடமாட முடியாது என்று கம்பர் சொல்லாமல் சொல்லுகிறார்.!' (3)

இப்படியாகப் பல்லாயிரமாண்டுக்கு முன்னதான வேத காலத்திலிருந்தே மது வட இந்தியர்களின் பிரியமானதாக இருந்துள்ளது என்பதை அறியும்போது தமிழ்நாட்டின் அன்றைய நிலை என்ன என்பதைக் காண்போம்.

## சங்க காலத்தில் மது:

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்தகுடி என்ற பெருமை பெற்ற தமிழினம் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், மற்றும் அகழ்வாய்வு முடிவுகளின் அடிப்படையில் இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே உயர்ந்த நாகரிக வாழ்வில் திளைத்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது. அத்தகைய செம்மாந்த வாழ்க்கை வாழ்ந்த தமிழர்களின் அன்றாட வாழ்க்கையில் மது ஒரு முக்கிய நுகர்பொருளாகத் திகழ்ந்திருந்தது என்பதற்குச் சான்றுகள் இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன. அவற்றைக் கண்டால் அந்நாளில் மதுப்பழக்கம் தமிழர்களிடையே எந்த அளவுக்கு இருந்தது என்பதை அறியலாம்.

அன்றைக்கு மக்களை ஆண்ட மன்னர்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சியில், தமிழ்நாட்டின் கடற்கரைகளில் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, தொண்டி என்று பல துறைமுகங்கள் செயல்பட்டிருந்தன. அவற்றின் மூலம் தமிழர்கள் பல அயல்நாடுகளுக்குச் சென்று வணிகம் செய்து பொருளீட்டி வந்தனர். அதுபோல பல அயல்நாட்டினரும் இங்கு வந்து வணிகம் செய்தனர். அன்றைய வணிகம் என்பது பண்டமாற்று முறையில் நடைபெற்றதால் இங்கிருந்து லவங்கம், மிளகு, மெல்லிய ஆடைகள் போன்றவை ரோமாபுரி, பாரசீகம், சீனா போன்ற நாடுகட்கு ஏற்றுமதி ஆயின. அங்கிருந்து பலவகை ஆபரணக் கற்கள், குதிரைகள் போன்றவற்றோடு உயர்வகை மதுவும் இறக்குமதி ஆயிற்று. அரசர்களும், உயர்குடி மக்களும் அதனைப் பருகி மகிழ்ந்தனர். இது குறித்துப் பல சங்கப்பாடல்கள் உள்ளன. அவற்றுள் சிலவற்றைக் காணும்போது அன்றைய தமிழ் நாட்டில் மதுவின் தாக்கம் மக்களிடையே எப்படியிருந்தது என்பதை அறியலாம்.

பாண்டிய நாட்டை ஆண்ட ஒரு மன்னன் இலவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன் என்பான். அவன் காலத்தில் யவன நாட்டிலிருந்து மரக்கலங்களில் கொண்டுவரப்பட்ட உயர்வகை மதுவை அந்தப்புரத்தில் இருந்த மங்கையர்கள் அளிக்க அவன் பருகினான் என்று மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய புறநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது.

**'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்**
**பொன்செய் புனைகலத்து ஏந்தி, நாளும்**
**ஒன்தொடி மகளிர் மடுப்ப, மகிழ் சிறந்து**.......
(பாடல் 56)

**பொருள்:** யவனர் கலங்கள் ஏற்றி வந்த உயர்வகை மதுவை பொற்கலன்களில் நாடோறும் இளமகளிர் வார்த்து ஊட்ட உண்டு மகிழ்கின்றாய் (பக்-78).

இப்பாடல் வரிகள் வழியாக அந்நாளில் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியான உயர்வகை மதுவினை மன்னர்கள் பருகி மகிழ்ந்திருந்தனர் என்பதை அறியமுடிகிறது. மன்னர்கள் தாம் பருகியதோடு நிற்கவில்லை. தம்மை நாடிவந்த இரவலர்கட்கும் புலவர்கட்கும் வேறுபாடின்றி இம்மதுவை அளித்து மகிழ்ந்திருந்தனர் என்பதையும் சில பாடல்கள் தெரிவிக்கின்றன.

பறம்புமலையை ஆண்டவன் பாரி என்ற மன்னன். வள்ளல் தன்மை மிக்கவன். அவனை நாடி வருபவர்களுக்கு மதுவையும் ஊனையும் வாரிக் கொடுப்பான் என்று அவன் மறைந்ததை அறிந்து வருந்திய கபிலர் என்ற பெரும் புலவர் இப்படிப் பாடுகிறார்.

**’மட்டுவாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்,**
**அட்டு ஆன்று ஆனாக் கொழுந் துவை ஊன் சோறும்**
**பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி,**
**நட்டனை மன்னோ, முன்னே இனியே,**
**பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று**... (பாடல் 113)

**பொருள் :** பறம்பே! முன்னர் இருந்த நின் வளம் எத்தகையது? நின்னை நாடிவரும் இரவலர்க்கு மதுவைத் தருவார் சிலர்; கிடாவை வெட்டிச் சமைத்து ஊனும் சோறும் வேண்டிவேண்டி அளிப்பார் சிலர். அத்தகைய வளத்துடன் முன்னர் நீ எமக்கு நட்புடைமையாக விளங்கினயன்றோ! ஐயகோ! இன்றோ பாரி வீழ்ந்தனன் (பக்-129).

இம்மதுவின் ருசிக்கு மன்னர்களும் புலவர்களும் மட்டுமல்ல, பெண்களும் ஆர்வலராய் இருந்தனர். ஆம். பெண்பால் புலவரான ஔவையார் அன்றைக்கு மதுவை அருந்தியிருக்கிறார். அதையும் அவர் நாடிச்சென்ற மன்னன் அதியமான் கொடுத்தது என்று அவரே பாடுகிறார்.

**’சிறிய கட்பெறினே, எமக்கீயும் மன்னே!**
**பெரிய கட்பெறினே,**
**யாம் பாடத் தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே!**
**சிறு சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே!**
**பெருஞ் சோற் றாலும் நனிபல கலத்தன் மன்னே!....**
(பாடல் 235)

**பொருள்:** சிறிய அளவு மதுவே பெற்றால், அதனை எமக்கே அளித்து விடுவான். பெரிய அளவு கிடைத்தாலோ, யாம் பாட எமக்கு அளித்து அவனும் உண்பான். சிறு சோறு எனினும் பலரோடு உண்பான். பெருஞ்சோறு எனினோ மிகப் பலரோடு உண்பான் (பக்-244). (4)

அதியமானை இழந்து வாடிய ஔவையார் பாடிய இவ்வரிகள் அன்றைய நாளில் இருபாலினரும் மது அருந்தினர் என்பதைத் தெரிவிக்கின்றன.

இப்படி மன்னனும் அவனுக்கு நெருக்கமானவர்களும் மட்டும் அன்றைக்கு மது அருந்தவில்லை. மாறாக, குடிமக்களும் மதுவுக்கு ஆட்பட்டிருந்தனர் என்பதை படம்பிடித்துக்காட்டும் வரிகளும் உள்ளன.

சங்ககால நூல்களில் சிறிதாயினும் அன்றைய புகார் நகரின் மாண்பினைப் படம்பிடித்துக் காட்டும் ஒளிப்படம் போல் திகழும் இலக்கியம் பட்டினப்பாலை ஆகும். இதனைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பார் காவிரிப்பூம்பட்டினத்தில் ஓர் இரவின் கடையாமத்தில் தன் கணவரோடு கூடி மகிழ்ந்த மனைவியர்களின் செயல்களை விவரிக்கின்றார்.

**’துணை புணர்ந்த மடமங்கையர்**
**பட்டுநீக்கித் துகிலுடுத்தும்**
**மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும்**
**மைந்தர்கண்ணி மகளிர் சூடவும்**
**மகளிர்கோதை மைந்தர் மலையவும்**...
(பாடல் வரிகள் 105-110)

**பொருள்:** தன் கணவரைக் கூடிய மடப்பத்தை உடைய மகளிர், புணர்ச்சிக்கு முன்னர் தாம் களைந்து போட்ட பட்டுடையை அணிந்து கொள்ளாமல், கணவரின் துகிலைப் போர்த்திக் கொண்டும், தமக்கென வைத்திருந்த மட்டினைப் பருகாமல் தன் கணவர் மீதம் வைத்திருந்த மதுவினைப் பருகி மகிழ்ந்திருக்கவும், தாம் அணிந்து கொள்வதற்குரிய கண்ணியைக் கணவனும் மனைவியும் மாற்றிச் சூடிக் கொள்வதும் அணிந்து கொள்ளவேண்டிய மாலைகளை மாற்றி அணிந்து கொள்வதுமான வேடிக்கைகள் நிகழ்ந்தன. (பக்-22-23) (5)

ஆகக் கூடுதலாக, இந்திய அளவிலும், தமிழ்நாட்டளவிலும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மதுப்பழக்கம் என்பது மன்னர்-மக்கள் என்ற பாகுபாடின்றி அனைவரிடமும் இருந்தது என்பதை அறியமுடிகிற வேளையில், அது ஒரு தொடர்ந்த பழக்கமாக இருந்ததா என்று வரலாற்றைப் பார்க்கின்ற போது ஆமென்றே அறிய முடிகிறது. சங்க காலத்திற்குப் பின்னர் வந்த தமிழகத்து ஆட்சிகளில் மதுப்பழக்கம் எவ்வாறு இருந்தது என்பதை இனி காணச் செல்வோம்.

## பிற்கால மக்களிடையே மது:

தமிழக வரலாற்றில் சங்ககால நிறைவுக்குப் பின் ஆட்சிக்கு வந்த களப்பிரர்கள், பல்லவர்கள், அதன்பின் வந்த சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சி அனேகமாக பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை நீடித்தது. அதன்பின் வந்த ஆறு நூற்றாண்டுகள் அயலாரால் ஆளப்பட்ட சூழல் ஏற்பட்டது. விஜயநகரப் பேரரசாலும் நாயக்க மன்னர்களாலும் அதன்பின் மராட்டியர்களாலும் ஆளப்பட்டு, இறுதியில் ஆங்கிலேயர்களின் பிடியில் நாடு சென்றது. இடையில் ஆங்காங்கே குறுநில மன்னர்களும் பாளையக்காரர்களும் பல இடங்களில் அதிகாரம் செலுத்தி ஆண்டனர். போதாமைக்கு இசுலாமியர்களின் படையெடுப்புகளுக்கும் ஆளுமைக்கும் நாடு ஆளானது. இப்படிப்பட்ட குழப்பமான சூழலில் கிட்டதட்ட அறுநூறு ஆண்டுகாலம் நாட்டுமக்களின் பொருளாதார இன்னல்கள் சொல்லில் அடங்கா.

பல சமயங்களில் பஞ்சங்கள் தாண்டவமாடின. மக்கள் பசி பட்டினிக்கு ஆளாகித் தங்களைத் தாங்களே விற்றுக்கொள்ளும் அவலம் காணப்பட்டது. இந்நிலையிலும் நாட்டை ஆண்ட மன்னர்களும் மேட்டுக்குடியினரும் மது அருந்துவதை கடைபிடித்தே வந்தனர் என்பதொடு, வறுமைக் கொடுமையிலிருந்து மீள மயக்க நிலைக்குப் போவதன்றி வேறு வழியில்லை என்று எண்ணிய அடித்தட்டு மக்களும் மதுப் பழக்கத்திற்கு ஆளானார்கள்.

விஜயநகர நாயக்க மன்னர்கள் சிற்றின்ப ஆசை மிகுதியாகக் கொண்டவர்கள் என்பது அவர்களின் அந்தப்புரத்தில் பல நூறு பெண்கள் இருந்ததையும் அவர்கள் பல பெண்களை அரசிகளாக வைத்திருத்தனர் என்பதையும் அறியும் போது தெரிகிறது. இது குறித்த ஒரு தகவலைக் காணலாம்.

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாகக் கருதப்படுவது இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கொள்கையாகும். விஜயநகர ஆட்சிக் காலத்தில் ஆண் மக்களுடைய போகப்பொருள்களில் ஒன்றாகவே பெண்டிர் கருதப்பட்டனர் என்று இலக்கியங்களிலும் அயல்நாட்டவரின் கூற்றுக்களிலும் இருந்து நாம் அறியலாம். அரண்மனைகளில் இருந்த ஏராளமான அரசிளங்குமரிகளும் ஏவல் செய்த பெண்களும் அரச குடும்பத்து ஆண்களுடைய வேலைக்காரர்களாகவே கருதப்பட்டனர். விஜயநகரத்தார் பலதாரங்களை மணம் செய்து கொண்டனர் என்று அயல்நாட்டு வழிப்போக்கர்கள் எழுதியுள்ளனர். ஆனால் அவர்கள் கூறும் பெண்டிர் ஆயிரக்கணக்கிலும் நூற்றுக் கணக்கிலும் இருந்தனர் என்பதை நாம் நம்புவதற்கில்லை.' (பக்கம் 275) (6)

மேற்கண்ட வரலாற்று நூலில் விஜயநகரப் பேரரசின் அந்தப்புரங்களில் நூற்றுக்கணக்கான பெண்கள் இருந்ததாக அயல்நாட்டு வழிப்போக்கர்கள் சொன்னதை நம்புவதற்கில்லை என்று அதன் ஆசிரியர் (டாக்டர் அ. கிருஷ்ணசாமி) சொன்னாலும், போர்ச்சுகல் நாட்டிலிருந்து அக்காலத்தில் (1520-22) வந்த டாமிங்கோஸ் பீயஸ் என்பார் எழுதிய வரலாற்றுக் குறிப்பாக இதே நூலில் அளித்துள்ள தரவுகளைக் காண்போம்.

'இவ்வரச பெருமானுக்குப் (கிருஷ்ணதேவராயர்) பன்னிரெண்டு மனைவியர் இருந்த போதிலும் அவர்களுக்குள் மூவரைத் தம்முடைய பட்டத்தரசியராகக் கொண்டிருந்தார். இம்மூவரில் ஸ்ரீரங்கப்பட்டினத்து அரசருடைய மகள் (திருமலைத்தேவி) முதல் மனைவியாகவும், இளமையில் ஆசைநாயகியாக இருந்து பின்னர் மணம் செய்து கொண்டவள் (சின்னதேவி) இரண்டாவது மனைவியாகவும், கலிங்க

நாட்டரசன் பிரதாப ருத்திர கஜபதியின் மகள் (ஜெகன்மோகினி) மூன்றாவது தேவியாகவும் கருதப் பெறுகின்றனர்............ (பக்கம் 385)

அரசிகள் சுற்றுலா செல்லும்போது எப்பொழுதும் நன்கு மூடப்பட்ட பல்லக்குகளில் அமர்ந்து பெண்மக்களால் தூக்கிச் செல்லப்படுகின்றனர். ஆண்மையற்ற ஆண்களும் பெண் ஏவலாளர்களும் பல்லக்கைச் சூழ்ந்து செல்கின்றனர். ஒவ்வோர் அரசிக்கும் பொன்னும் பொருளும் ஆடை யணிகளும் ஏராளமாக இருந்ததென நான் கேள்விப்பட்டேன். கழுத்தணி, காலணி, முத்துவடங்கள், முத்துமாலைகள், நவரத்தின அணிகலன் முதலியன அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. இவ்வித அணிகலன்களை அணிந்த அறுபது இளம் பெண்டிர் ஒவ்வொருக்கும் தனியாக ஏவற் பெண்டிர் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். நான் பின்னர் கூறப்போகும் திருவிழாக் காட்சியொன்றில் இவ்வரசிகளின் ஏவற் பெண்டிரைக் கண்டு நான் வியப்புற்று நின்றேன். அரசிகளுடைய ஏவலைப் புரியும் பெண்டிரோடு மேலும் பன்னீராயிரம் பெண்களும் அரண்மனையில் இருந்ததாக நான் கேள்விப்பட்டேன்.......(பக்கம் 385)

விஜயநகர அரண்மனையின் அந்தப்புரத்து அரசிகள் குறித்து விரிவாக படம் பிடித்துக்காட்டிய அயல்நாட்டான் அங்கு பன்னீராயிரம் பெண்கள் இருந்தனர் என்று கூறியுள்ளது சற்று மிகையாக இருக்கலாம். ஆனால் பலநூறு பெண்கள் அங்கிருந்திருக்க வேண்டும் என்றே கருத வேண்டியுள்ளது.

இவர்களுக்குப் பின் வந்த நாயக்கர்களின் ஆட்சியில் பெரிதும் பேசப்படும் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கனின் (கி.பி.1623-1659) அன்றாட வாழ்வைக் கூறும் இவ்வரிகளைப் பார்ப்போம்.

'இவருக்கு 200 மனைவிமார்கள் இருந்தார்கள். இருவரே பட்ட மகிஷிகள். இவ்வுண்மையைத் திருமலை நாயக்கர் உருவச் சிலை இரு மனைவிமார்களோடு இருப்பது கொண்டு கண்டு கொள்ளலாம்.

பெண்கள் பலரை மணந்து கொள்வது ஆசியா கண்டத்திலேயே தொன்று தொட்டு வருவது. தமிழகத்திலும் இத்தீய வழக்கம் சங்க காலம் முதல் அண்மைக் காலம் வரையில் இருந்து வந்தது. சங்க காலத்தில் இவ்விதிக்கு விலக்காக ஒருவர் இருவரைக் காண்கின்றோம். நூற்றுக் கணக்கான மனைவியரை மணந்து கொள்வது இந்நாட்டு இந்து மன்னர்களிடமும் முஸ்லீம் வேந்தர்களிடமும் இருந்து வந்த பழக்கமாகும். இத்தீய மணமுறையே, இந்தியாவில் இந்து மன்னர்கள் ஆட்சியையும், முஸ்லீம் அரசர்கள் ஆட்சியையும் நிலைகுலைத்து, அரசுரிமைப் போர்களையும் உள்நாட்டுக் கலகங்களையும் உண்டு பண்ணி, அவ்வாட்சிகளை அடிக்கடி வீழ்ச்சியுறச் செய்தது. அரசர்களின் ஆட்சி காலத்தையும் சுருக்கியது.

இருநூறு மனைவிமார்களைத் திருமலை மன்னர் மணந்திருந்தாலும் 75 வயது வரையில் வாழ்ந்தது வியக்கத் தக்கது. போராட்டத்திற்கு வழியில்லாமல் இருந்ததும் பாராட்டுக்குரியதே.' (பக்கம் 131) (7)

திருமலை நாயக்கனின் மரணம் குறித்த சில கதைகளிலும், அவன் இருநூறு மனைவியரைத் தாண்டி, ஒரு பட்டர் மனைவி மீது ஆசை கொண்டு, ஒரு நாள் அவர் இல்லம் சென்று திரும்பும் வழியில் தவறி ஒரு கிணற்றில் விழுந்து இறந்தான் என்றும், இரண்டாம் கதையில் பட்டர்கள் கோயிலின் ஓர் அறையில் புதையல் உள்ளதெனக் கூறி அவனை அங்கு அழைத்துச் சென்று, அவன் உள்ளே சென்று பார்த்த போது பெரிய கல்லை வைத்து வாசலை அடைத்துவிட்டு வந்து 'மீனாட்சியம்மன் பொற்பாத கமலங்களில் திருமலை மன்னர் ஒன்றுபட்டு விட்டார்' என்று கூறிவிட்டனர் என்றும், மூன்றாம் கதையில் அவன் இறுதிக் காலத்தில் கிருஸ்தவ சமயத்தில் சேர்ந்ததால் பட்டர்களது சூழ்ச்சிக்குப் பலியானார் என்பதும் ஆகும். நூலாசிரியர் இது ஒழுக்கக் கேடானவர்களின் கட்டுக்கதை என்று தன் கருத்தினைக் கூறியிருந்தாலும், அவன் மரணம் குறித்த கதைகளைக் கட்டுக்கதைகள் என்றே நம்பினாலும், மூன்று கதைகளிலும் அவன் மரணம் பட்டர்களால் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளதை

மறுக்க முடியாது. எனவே அவன் கொல்லப்பட வேண்டும் என்ற ஆத்திரம் அன்றைய பட்டர்களிடம் இருந்ததற்கு ஏதோ ஒரு காரணம் வலுவுள்ளதாக இருக்க வேண்டும் என்றே கருத வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும் தங்களைப் போன்றே மக்களையும் சிற்றின்ப வேட்கை கொண்டவர்களாக வைத்திருக்க வேண்டும் என்று கருதியதன் காரணமாகவே அவர்களால் நாடுமுழுவதும் சீரமைக்கப்பட்ட விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலயங்களிலும், தேர்களிலும், பொது மக்கள் பயன்படுத்தும் குளக்கரைகளிலும், பாலுணர்வுச் சிற்பங்களும் ஓவியங்களும் மக்கள் பார்க்கும்படியாக இடம் பெற்றன.

அன்றைய அரசர்களும் மக்களும் சிற்றின்ப வேட்கை மிகுந்தவர்களாக இருந்த நிலையில், அதற்குத் துணையான மது நிச்சயமாகத் தேவைப்பட்டிருக்க வேண்டும். நாடு முழுவதும் கள்ளும் சாராயமும் பெருக்கெடுத்திருக்க வேண்டும். ஆனால் அது குறித்து வரலாற்றில் விரிவாகப் பேசப்படவில்லை. இருப்பினும் விஜயநகரப் பேரரசின் அரசாங்க வருவாய் குறித்து எழுதுகையில் இப்படியான தகவல்கள் கிடைக்கின்றன.

'விஜயநகர அரசாங்கத்தின் வருமானங்களாக நியாயம் வழங்குவதில் கிடைத்த வரிகள், கிராமங்களில் மக்கள் குடிபோதையினால் ஒருவரோடொருவர் அடித்துக் கொள்வதற்கும் திருட்டு விபச்சாரம் தீ வைத்தல் முதலிய குறறங்களுக்கும் அபராதங்கள் விதிக்கப்பட்டன.' (பக்கம் 207)

'தென்னங்கள், பனங்கள் முதலிய போதை தரும் பானங்களும், சாராயம் என்ற போதை தரும் பானமும் இருந்ததாகத் தெரிகிறது.' (பக்கம் 276) (8)

இதன்மூலம் அன்றைய கிராமங்களில் விளிம்புநிலை மக்களிடையே மதுப்பழக்கம் இருந்ததையும், அதன் விளைவாக திருட்டு, விபச்சாரம் போன்ற தீய பழக்கங்கட்கு அவர்கள் ஆளாகியிருந்தனர் என்றும் அறிய முடிகிறது.

அந்நாளில் கள் போன்ற மது வகைகளை அதற்காகப் பாரம்பரியமாக இருந்த தொழில்பிரிவினர் தயார் செய்து விற்று வந்தனர் என்ற நிலை, மராட்டியர்கள் ஆட்சியில் (கி.பி.1676 முதல் கி.பி.1855 வரை) மாற்றம் கண்டு, அரசாங்கமே சாராயம் காய்ச்சும் அளவுக்குப் போனது என்பதை அறியும்போது, மக்கள் எந்த அளவுக்கு அப்போதைப் பழக்கத்தில் அடிமையாகிப் போனார்கள் என்பது தெரிகிறது. அதைக்கூறும் இந்த வரிகளைக் காண்போம்.

**'சாராயக் குத்தகை** - சாராயம் காய்ச்சும் உரிமை அரசாங்கத்துக்கே உரியது. ஆகவே அதைக் குத்தகைக்கு விட்டனர்.

'1776 - கள்ளுக் குத்தகையில் வந்த வருமானம் ஒரு வருஷத்துக்கு ரூ.39972 என்று ஓர் ஆவணக்குறிப்பில் உள்ளது. தஞ்சை நகரம் மட்டும் தமக்கு உரியதாய் இருந்த காலத்திலும் இக் கள்ளுக்குத்தகை வருமானம் மிகுதியாகக் குறையவில்லை. இதனை,

'1828- சாராயம் கள்ளு வகையறா குத்தகை - மூன்று வருஷத்துக்கு 30420 ரூபாய்க்கு ஒப்புக்கொள்ளும் படிக்கு அன்வாஜி நோபாள இரண்டு பத்திரம் எழுதிக்கொள்ளுகிறது.' என்ற குறிப்பு வலியுறுத்தும்.

கி.பி.1841இல் மாதம் 1க்கு ரூ.760 வீதம் குத்தகை தருவதாகவும், 1847இல் மாதம் 1க்கு ரூ.190 தருவதாகவும், குத்தகை ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. குத்தகை விடாமல் சாராய விற்பனை சர்க்காரிடத்திலேயே இருந்ததாகவும் தெரிகிறது.

கோட்டையில் காளேராவப்பா காலத்தில், 10 சேர் செம்பினால் செம்பொன்றுக்கு 8 பணம் வீதம் விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்பவனுக்கு 1 பணம் சம்பளம். பின்னர் நீலகண்ட பிள்ளையின் காலத்தில் மூன்று விதமாகப் பிரித்தனர். ஒரு செம்பு ரூ.12 பணம், 11 பணம், 10 பணம்; விற்பவனுக்கு வழக்கம் போல் செம்பொன்றுக்கு 1 பணம். கி.பி.1811இல் திருவையாறு தாலுகா சாராயக்கடைக்காரன் கோட்டைக்கு வெளியே சாராயக்கடை வைத்தான்; குறைந்த விலைக்கு விற்றான்; அதனால் குடிப்பவர்கள் கோட்டைக்கு வெளியே சென்று குடித்தார்கள். சர்க்கார் கடையில் உள்ள சாராயம் விற்பனை ஆகவில்லை. ஆகவே செம்பொன்றுக்கு 9 பணம் அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

தஞ்சாவூர் கிடங்கில் காய்ச்சும் சாராயம், யானை குதிரை முதலியவற்றிற்கு வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு, எஞ்சியது விற்பனை செய்யப் பெற்றது. அவ்விற்பனைத் தொகை:

'மேஸ்தர் ராமனுடைய மாடியில் வைத்திருக்கும் தர்ம பள்ளிக்கூடத்திற்குக் கொடுப்பது வழக்கம்.' என்ற குறிப்பு சாராய விற்பனைத் தொகை கல்விக்கெனச் செலவிடப்பெற்றமை அறிய உதவுகிறது. சாராய வரி என்ற ஒருவகை வரியும் வசூலிக்கப்பட்டது.

'1765; நாகூர் பந்தர்; தெற்கிலிருந்து வடக்கே சாராயத்தின குப்பிகள் 10ஐக் கொண்டு போனதற்கு வரி துரையினிடமிருந்து வெள்ளிப் பணம் 6' என்றமையால் சாராயம் எடுத்துச் செல்ல வரி வசூலிக்கப்பட்டது என்று அறியப் பெறும். இந்தத் தலைப்பில் கி.பி.1726-27ல் கும்பினி பெற்ற வருமானம் ரூ.34206 என்று அறியவருகிறது. இது 'ஆப்காரி' எனப்பெற்றது.' (9)

மராட்டியர் காலத்தில், சாராயத்தை அரசாங்கமே காய்ச்சும் நிலையும், விற்பனை செய்யும் நிலையும், அதனூடே தனி நபர்களும் காய்ச்சிக் குறைந்த விலைக்கு விற்றதும், அதனால் அரசு விலை குறைப்பைச் செய்யக் கோரப்பட்டதும் காணும்போது, இன்றைய நிலைகள் அந்நாளிலேயே தொடங்கப்பட்டு விட்டன என்பது புலனாகிறது.

இந்நிலை நம்மைப் பல வழிகளில் சுரண்டிக் கொழிக்க வந்த வெள்ளைக்காரர்களின் ஆட்சியில் அமோகமாக பல்கிப் பெருகியது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கள் வகைகள், நாட்டுச் சாராயம் மட்டுமின்றித் தங்கள் நாட்டில் உற்பத்தியாகும் உயர்ரக சாராயங்களையும் இறக்குமதி செய்து மக்களை மேலும் அந்தப் போதைக்கு அடிமைப் படுத்தினார்கள். ஆங்கிலேயர்கள் நாட்டை விட்டு வெளியேறிய போது அரசாங்கத்தின் வருவாயில் நிலவரிக்கு அடுத்தபடியாக மது விற்பனை வழியாகக் கிடைத்த வருமானமே அதிகம் என்று கூறப்படுகிறது.

இவ்வாறு, பல்லாயிரம் ஆண்டுகட்கு மேலாகத் தமிழகத்தில் தொடரும் மது போதை மக்களைத் தீமையில் தள்ளும் என்பதை எவரும் கண்டிக்கவில்லையா? போதைக்கு அடிமையாகிப் போன மக்களுக்கு நல்வழிகளைப் போதிக்க வில்லையா? அரசாங்கத்திற்கு எதிராக எவரும் குரல் கொடுக்கவில்லையா? என்ற கேள்விகட்குள் புகுந்தால், என்றைக்கு இந்த மது என்ற தீமை நுழைந்ததோ, அன்றைக்கே அதற்கான எதிர் குரல்களும் எழும்பத் தொடங்கின. ஆனால் அது பலமான குரலாக எழவில்லை. ஏனெனில் வெகு சிலரே அதனைக் கண்டித்தனர், வெகுண்டெழுந்தனர், போராடினர். வரலாற்றில் அது குறித்து, இனி காண்போம்.

## மதுவுக்கு எதிரான அன்றைய குரல்கள்:

### திருக்குறள்:

சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் மன்னர்களும் மக்களும் மது அருந்துவதைக் கூறுகின்றன என்றாலும், அது தீமையானது என்று சொல்லப்பட வில்லை. ஆனால் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கூறவந்த திருவள்ளுவரின் திருக்குறள் தான் முதன்முதலாக மதுவின் தீமையைப் பற்றி விரிவாக எடுத்தியம்புகிறது. 'கள்ளுண்ணாமை' என்ற ஓர் அதிகாரத்தையே ஒதுக்கிய வள்ளுவப் பெருந்தகை, அதிலுள்ள பத்துப் பாடல்களிலும் மதுவின் தீமையினைக் கூறியுள்ளார். மதுப் பழக்கமுள்ளவர்களுக்கு காலத்திற்கும் அந்த அறிவுரைகள் தேவை என்பதால் அப்பாடல்கள் என்ன சொல்கின்றன என்பதைக் காண்போம்.

**'உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்**
**கட்காதல் கொண்டொழுகு வார்.' (குறள் 921)**

**பொருள்:** கள்ளின்மேல் விருப்பம் கொண்டு நடப்பவர் எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்படார். தமக்குள்ள புகழையும் இழந்து விடுவார்கள்.

**'உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்**
**எண்ணப் படவேண்டா தார்.' (922)**

**பொருள்:** கள்ளை உண்ணக் கூடாது. சான்றோர் களால் விரும்பப் படாதவர் வேண்டுமானால் கள்ளை உண்ணலாம்.

**'ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**

**சான்றோர் முகத்துக் களி.'** (923)

**பொருள்:** பெற்ற தாயின் முகத்திலும் கள்ளுண்டு மயங்குதல் துன்பம் தரும். அப்படியானால் குற்றம் கடியும் இயல்புடைய சான்றோரின் முகத்தில் அது என்னவாகும்?

**"நாண்என்னும் நள்ளாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்**

**பேணாப் பெருங்குற்றத் தார்க்கு."** (924)

**பொருள்:** நாணம் என்று சொல்லப்படும் நல்லவள், கள் என்று சொல்லப்படும் விரும்பாத பெருங்குற்றம் உடையவர்க்கு எதிரே நிற்காமல் செல்வாள்.

**"கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து**

**மெய்யறி யாமை கொளல்"** (925)

**பொருள்:** விலைப்பொருள் கொடுத்துக் கள்ளுண்டு தன் உடம்பைத் தான் அறியாத நிலையை மேற்கொள்ளுதல் செய்வது இன்வென்று அறியாத அறியாமை உடையதாகும்.

**"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்**

**நஞ்சுண்பார் கள்ளுண் பவர்."** (926)

**பொருள்:** உறங்கினவர் இறந்தவரிலிருந்து வேறுபட்டவரல்லர். அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குதலால் நஞ்சு உண்பவரே ஆவார்.

**"உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்**

**கள்ளொற்றி கண்சாய் பவர்."** (927)

**பொருள்:** கள்ளை மறைந்திருந்து குடித்து அறிவு மயற்குபவர் உள்ளூரில் வாழ்கின்றவரால் உள்ளான செய்திகள் ஆராயப்பட்டு எந்நாளும் சிரிக்கப் படுவர்.

**"களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து**

**ஒளித்ததுஉம் ஆங்கே மிகும்."** (928)

**பொருள்:** கள்ளுண்பவன் யான் ஒருபோதும் கள்ளுண்டறியேன் என்று சொல்வதை விடவேண்டும். நெஞ்சில் ஒளித்திருந்த குற்றமும் கள்ளுண்டபோதே வெளிப்படும்.

**"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**

**குளித்தானைத் தீத்துரீஇ யற்று."** (929)

**பொருள்:** கள்ளுண்டு மயங்கியவனைக் காரணம் காட்டித் தெளிவித்தல் நீரின்கீழ் மூழ்கின ஒருவனைத் தீவிளக்குக் கொண்டு தேடினாற்போன்று.

**"கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்**
**உள்ளான்கொல் உண்டதன் சோர்வு."** (930)

**பொருள்:** ஒருவன், தான் கள் உண்ணாத போது கள்ளுண்டு மயங்கியவனைக் காணுமிடத்தில், உண்டு மயங்குவதால் வரும் சோர்வை நினைக்க மாட்டானா?(10)

தமிழர் தம் வரலாற்றில் மதுப்பழக்கத்தை முதன்முதலாகக் கண்டித்த வள்ளுவப் பெருந்தகையின் குறள் கூறும் பொருள் என்ன என்பதை அறிஞர் பெருமக்கள் அவர்களுக்குரிய தன்மையில் விளக்கியுள்ளார்கள். ஆனால் அனைவருக்கும் புரியும் வகையில் தன் பத்துக் குறள்களில் திருவள்ளுவர் தெரிவித்துள்ளதைப் பார்த்தால் குடிப்பழக்கத்தின் கொடுமையும் அஃது எந்த அளவுக்கு மனிதனை கேவலப்படுத்தி மானமிழக்கச் செய்கிறது என்பதைக் காணமுடியும். இன்றைக்கு நாம் அன்றாடம் காணும் குடிகாரர்களின் நிலை அன்றைக்கும் இருந்துள்ளது என்பதைத் தான் வள்ளுவரின் குறள்கள் காட்டுகின்றன. இந்த அவல நிலையை அவர் கண்டித்ததைப் போன்று வேறு சில நீதி நூல்களும் கண்டித்துள்ளன. பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் வரிசையில் திருக்குறளும், காலத்தால் அதற்குப் பிந்தைய நீதிநூல்களும் உள்ளன. அந்நூல்கள் பல, கள் உண்ணுதலைக் கண்டித்துப் பாடியுள்ளன. அந்த வகையில் நாலடியார் என்ன சொல்கிறது எனப் பார்ப்போம்.

**நாலடியார்:**

சங்கம் மருவிய காலமான கிபி. 250 அளவில் சமண முனிவர்களால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் இப்பாடல்கள் கள்ளுண்ணுதலைப் பேசுகின்றன.

**"கள்ளார் கள்ளுண்ணார் கடிவ கழந்தொரீஇ**

**எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார் தள்ளியும்**

**வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியர்**

**சாயின் பரிவதிலர்** (பாடல் 157)

**பொருள்:** குற்றமற்ற அறிவினை உடையவராகிய மேன்மக்கள் எனப்படுபவர்கள் திருட மாட்டார்கள்; கள் குடிக்க மாட்டார்கள்; தள்ளத் தகுந்தவைகளைத் தள்ளி நீங்கி இருப்பார்கள்; அயலாரை அவமானமாக இகழ்ந்து பேசமாட்டார்கள்; தமக்கு எதனாலாயினும் தளர்ச்சி வந்த காலத்தும் அதற்காக வருத்தப்படவும் மாட்டார்கள். ( பக்கம் 87) (11)

மேன்மக்கள் குறித்துப் பாடிய இப்பாடல் வழியாக அந்நாளில் கள் குடிப்போரைத் திருடர்களோடு ஒப்பிட்டுக் கீழ்மக்களாகத் தமிழ்ச்சமூகம் பார்த்ததை அறியலாம்.

### இன்னா நாற்பது:

கபில தேவர் என்பார் எழுதிய இந்நீதி நூலில், கள் குடிப்பது எத்தகைய தீங்கானது என்பதைக் கூறும் பாடல்களைக் காண்போம்.

**"கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா**
**வள்ளல்க ளின்மை பரிசலர்கட்கு முன்னின்னா**
**வண்மை யிலாளர் வனப்பின்னா வாங்கின்னா**
**பண்ணில் புரவி பரிப்பு."**

**பொருள்:** கள் குடித்துவிட்டு மகிழ்வாக இருப்பதாகக் கருதுபவர்களுக்கு அப்பழக்கமில்லாத மூதூரும், பரிசு பெறுபவர்களுக்கு வள்ளல்கள் இல்லாத நிலையும், கொடைத்தன்மை இல்லாதவர்களின் அழகும், பயனில்லாத குதிரைக்கு ஆகும் செலவும் தீயதாகும்.

**"கள்ளுண்பான் கூறுங் கருமப் பொருளின்னா**
**முள்ளுடைக் காட்டி டைத்த னனியின்னா**
**வெள்ளம் படுமாக் கொலையின்னா வாங்கின்னா**
**கள்ள மனத்தார் தொடர்பு."**

**பொருள்:** கள்ளுண்டவன் சொல்லும் நியாயமும், முட்காட்டில் நடத்தலும், வெள்ளத்தில் அகப்பட்ட மிருகத்தைக் கொல்லுதலும், வஞ்சக மனத்தாரின் தொடர்பும் தீயதாகும். (பக்கம் 10, 34) (12)

இப்பாடல்கள் மூலம் குடிப்பழக்கத்தால் கேடு தான் விளையும் என்று கருதி அது இல்லாத நிலைக்கு ஆக்கப்பட்ட பெருமை பெற்ற ஊர்கள் பல இருந்துள்ளன என்பதும், கள்ளைக் குடித்துவிட்டு உளறும் குடிகாரன் பேச்சைப் பொருள் உள்ளதாகக் கருதாத நிலையும் அன்று இருந்துள்ளது என அறிய முடிகிறது.

### திரிகடுகம்:

நல்லாதனார் என்பார் எழுதிய நூலின் இப்பாடலின் வழியே, கள் குடித்தல் எத்தகைய துன்பத்தைத் தரும் என்பதை அறிய முடிகிறது.

**"விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும்**
**வீழக் களியாதான் காவாது உரையும்**
**தெளியாதான் கூரையுள் பல் காலும் சேறலும்**
**இம் மூன்றும் ஊர் எலாம் நோவது உடைத்து. (பாடல் 11)**

**பொருள்;** அழைக்காதவன் ஆடும் ஆட்டத்தினைப் பார்ப்பதும், மது உண்டவன் சொல்லும், நம்பாதவன் வீட்டிற்குப் பலமுறை செல்வதும், இம்மூன்றும் ஊரில் உள்ளோர்க்குத் துன்பம் தரும்.

**"புலை மயக்கம் வேண்டி பொருட் பெண்டிர்த் தோய்தல்**
**கலம் மயக்கம் கள் உண்டு வாழ்தல்**

சொலை முனிந்து பொய்ம் மயக்கம் சூதின்கண் தங்குதல்

இம்மூன்றும் நன்மை இலாளர் தொழில். (பாடல் 39) (13)

**பொருள்:** உடலை விரும்பி விலைவேசியரைச் சேர்தல், மதுமயக்கம் வேண்டிக் கள் உண்டல், சூதாடுதல் இம்மூன்றும் அறம் இல்லாதவர்கள் செய்யும் தொழில்களாகும்.

### சிறுபஞ்ச மூலம்:

இந்நூலை இயற்றியவர் காரியாசான் என்பார். இந்நூலின் ஒரு பாடல், தீய பெண்கள் குறித்து விளக்குவதாக அமைந்த இடத்தில், அவர்கள் கள் உண்ணுதலைக் கொண்டவர்கள் என்று சொல்லியிருப்பது கவனிக்கத் தக்கது. சங்க காலத்தில் ஔவையார் போன்ற பெண்பால் கவிஞர்களுக்கு, அதியமான் போன்ற அரசர்கள் கள்ளைக் கொடுத்து

மகிழ்ந்தனர் என்று பெருமையாகப் பேசப்பட்ட நிலையில், காலத்தில் அதற்குப் பிந்தைய இந்நூல் பெண்களின் கள்ளுண்ணும் பழக்கம் தீயது என்று கூறுகிறது.

இதனை நோக்குங்கால் சங்ககாலக் கள் என்பது உடலுக்குத் தீமை தராத, கலப்படமில்லாத, தூய்மையான, மனதுக்கு இன்பமளிக்கக்கூடிய ஒன்றாக இருந்து, பின்னாளில் அஃது இரண்டிற்கும் தீமை பயக்கும் விதத்தில் போதை தரும் வகையில் கலப்படக் கள்ளாகத் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் சிந்திக்க வைக்கிறது.

காரியாசான் என்பார் பாடிய சிறுபஞ்சமூலப் பாடலுக்குள் செல்வோம்.

**"கள்ளுண்டல் காணிற் கணவற் பிரிந்துறைதல்**
**வெள்கில ளாய்ப்பிற ரிற்சேற—லுள்ளிப்**
**பிறர்கரும மாராய்த ரீப்பெண் கிளைமைத்**
**திறமதுதீப் பெண்ணின் தொழில். (பாடல் 23)**

**பொருள்:** கள்ளுண்டலும், புணர்ச்சியை விரும்பாது தன் கணவனைப் பிரிந்துறைதலும், நாணிலளாய்ப் பிறருடைய மனைகட் சேறலும், பிறர் கருமத்தை நினைத்துப் பிறருடன் ஆராய்தலும், தீய பெண்களுடன் நட்புடன் இருப்பதுமான ஐந்தும் தீய பெண்களின் தொழிலாகும். (14)

இப்படியாகத் திருவள்ளுவர் தொடங்கி, பன்னெடுங்காலமாகக் கள்ளின் தீமைகளைப் பலர் எடுத்துக்கூறி வந்திருந்தாலும், அதன் பழக்கத்திலிருந்து மக்கள் விலகிடாமல் மேன்மேலும் அதிக அளவில் அதற்கு அடிமையான சூழலே வரலாற்றில் காண்கின்றோம். அதற்கு ஏற்ப, இன்றைய தமிழகத்தில் கள் மட்டுமல்லாது, கஞ்சா மற்றும் ஊமத்தை போன்ற தாவரங்களிலிருந்து தயாரிக்கப்படும் போதைப் பொருட்களின் பயன்பாடும் நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, மேலைநாடுகளில் நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்த புகையிலை, ஆங்கிலேயர் வருகைக்குப் பின், நம் நாட்டிலும் பரவத் தொடங்கியது. தற்போது புகையிலையிலிருந்து தயாரிக்கப்படும் சிகிரெட் தவிர, பான்பராக், குட்கா போன்ற போதை தரும் பொருட்கள் பல வகைகளில் தயாரிக்கப்பட்டு, மக்களை அதன் பழக்கத்திற்குத் தள்ளிவிட்டன.

இத் தீய பழக்கங்களின் தாக்கம், மக்களைப் பீடித்த காலம் ஆங்கிலேயரின் வருகையால் என்றால் மிகையில்லை. அதற்கு முன், கள் போன்ற பானங்கள் காயம் பட்ட போர் வீரர்களை மயக்கத்தில் ஆழ்த்தி, வலியை மறக்கச் செய்யும் மருந்தாகப் பயன்பட்ட நிலையில், தற்போது ஏழை எளிய விளிம்புநிலை மக்கள் தங்கள் வறுமையையும் பசிப்பிணியையும் மறந்திட இந்தப் பல்வகை போதைப் பொருட்கள் தேவை என்று தவறாகக் கருதுவதால் ஏற்பட்ட கேடான பழக்கமாகும்.

இப்படியாக, வரலாற்றில் ஈராயிரம் ஆண்டுகட்கு மேலாக மக்களின் பழக்கத்தில் ஊறிப்போன தீமை ஒன்றை ஒட்டுமொத்தமாகக் களைந்து எடுத்து விடமுடியுமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இருப்பினும், நாடு முழுவதும் மதுவைச் சட்டப்படியாக விலக்கி வைத்திட வேண்டும் என்ற எண்ணம் ஆளுகின்ற அரசுக்கு எப்போது வந்தது? அது எந்த அளவுக்கு வெற்றி பெற்றது? அது ஏன் நீடிக்க முடியவில்லை? போன்ற கேள்விகட்குள் இனி விடைதேடப் புறப்படுவோம்.

### சட்டரீதியான மதுவிலக்கின் வரலாறு: காங்கிரஸ் ஆட்சியில் மதுவிலக்கு:

அளவோடான மது உடலுக்கு நன்மை பயக்கும் என்பது குளிர் பிரதேசங்களான அயல்நாட்டாருக்கு வேண்டுமானால் பொருந்துமே தவிர, வெப்ப நாடான நம் நாட்டுக்கு அது பொருந்தாது. அவர்களைப் போல் அளவோடு மதுவினை அருந்துவது என்ற கட்டுப்பாடு ஒரு சிலருக்கு வேண்டுமானால் இங்கு சாத்தியப்படுமே தவிர, பெரும்பான்மை அடித்தட்டு மக்கள் அதிக போதை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தங்கள் ஒட்டுமொத்த அன்றாட வருவாயை இழந்தாகினும் அதைப் பெறவேண்டும் என்ற வெறியில் உள்ள நிலை தான் இங்கு காணப்படுகிறது. இப்படியான சூழலில் ஏற்கனவே கண்டது போல, பதினெட்டாம் நூற்றாண்டில் ஆண்ட மராட்டியர்கள் காலத்திலேயே, சாராயம் காய்ச்சி

விற்கும் உரிமையை அரசாங்கமே ஏற்று நடத்திய நிலை நாட்டு விடுதலை வரையிலும் தொடர்ந்தது.

ஆங்கிலேயர்கள் ஆட்சியில் அயல்நாட்டு மது வகைகளைத் தயாரிக்கத் தொழிற்சாலைகள் தனியாரால் நிறுவப்பட்டன. அதன் மூலம் தனியார் நிறுவனங்கள் மதுவிற்பனை செய்தன. அதுபோல கிராமங்களில் தென்னை மற்றும் பனை மரங்களிலிருந்து இறக்கப்பட்ட கள் விற்பனையும் தனியார்களால் நடத்தப்பட்டன. இவற்றின் வழியாகக் கிடைத்த வரிப்பணம் அரசாங்கத்தின் பெரும்பான்மை செலவுகளை ஈடுகட்டக்கூடிய அளவுக்கு அதிகமாக இருந்ததால் அன்றைய அரசாங்கமும் அதற்கு உறுதுணையாகவே இருந்தது. ஆனால் அடித்தட்டு மக்கள் வாழ்க்கை நிலையோ பரிதாபத்திற்குள்ளானது. அவர்களின் பசி பட்டினிக்கும் சாவுகளுக்கும் கள்ளும் சாராயமுமே காரணமாக இருந்தன.

இச்சமயத்தில் நாட்டு விடுதலைக்கான போராட்டத்தை முன்னிறுத்திய காங்கிரஸ் இயக்கம் காந்தியடிகளின் தலைமையில் இயங்கியது. ஆங்கிலேயர்களுக்கு எதிராக "ஒத்துழையாமை இயக்கம்" என்ற பெயரில் 1920ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் நாள் எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் துவக்கினார் காந்தியடிகள். ஐந்து முக்கிய அம்சங்களைக் கொண்ட இந்த இயக்கத்தில், 1. ஆங்கிலேயர்கள் அளித்த கௌரவ பட்டங்களைத் துறத்தல், 2. உள்ளாட்சி அமைப்பின் உறுப்பினர் பதவிகளைத் துறத்தல், 3. அயல்நாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தல், 4. நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்தல், மற்றும் 5. மதுக்கடைகளுக்கு எதிரான புறக்கணிப்பு ஆகியன அடங்கும்.

பெரும்பான்மை ஏழை மக்கள் மதுவுக்கு அடிமையாகி மாண்டு போகிறார்களே என்று கருதிய காந்தியடிகள், இப்போராட்டத்தைத் தீவிரமாகக் கையாண்டார். தமிழகத்தில் அப்போதைய காங்கிரஸில் இருந்த தந்தை பெரியார், இப்போராட்டத்திற்குத் தன் முழு ஆதரவினைத் தந்தார். ஈரோட்டில் தனக்கு உரிமையாக இருந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட கள் இறக்கும் தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார். தன் மனைவி நாகம்மையார், தங்கை கண்ணம்மாள் ஆகியோரைக் கள்ளுக்கடைகளுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடச் செய்தார். அதன் பயனாக நாடு முழுவதும் ஏற்பட்ட பெரும் போராட்டத்தின் விளைவினை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறிய அரசு, போராட்டத்தைக் கைவிடக் கோரியபோது "அது என் கையில் இல்லை. தமிழ்நாட்டில் ஈரோட்டில் இரு பெண்கள் கையில் இருக்கிறது" என்றார் காந்தியடிகள். அந்த அளவுக்குக் கள்ளுக்கடை எதிர்ப்புப் போராட்டம் தமிழநாட்டில் வலுப்பெற்றது. ஆனாலும் அதனை ஒழிக்க முடியவில்லை. இரண்டாண்டுகளில் ஒத்துழையாமை இயக்கம் வலுவிழந்தது.

அன்றைய ஆங்கில அரசு கொண்டுவந்த இரட்டை ஆட்சி முறையால் கி.பி.1920 முதல் 17 ஆண்டுகள் தமிழகத்தில் நீதிக்கட்சியின் ஆட்சி நடைபெற்றது. நாட்டில் அதுவரை நடைபெறாத பல சீர்திருத்தங்கள் அந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்டன. ஆனால் மதுவுக்கு எதிரான நடவடிக்கைகள் ஏதும் நடைபெறவில்லை.

இந்நிலையில், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் முக்கிய நபராகவும் காந்தியடிகளுக்கு நெருக்கமானவராகவும் இருந்த ராஜகோபாலாச்சாரியார் ஒரு தீவிர மது எதிர்ப்பாளர். திருச்செங்கோட்டுக்கு அருகில் காந்தி ஆசிரமம் ஒன்றை நிறுவி அதில் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தார். அன்று தமிழ்நாட்டில் 11034 கள்ளுக்கடைகளும், 6352 சாராயக்கடைகளும் இருந்தன. ஆண்டுக்கு 11 கோடி காலன் சாராயமும், 16,75,000 காலன் கள்ளும் விற்பனை ஆயின. ராஜாஜியின் செயல்பாடுகளால் கவரப்பட்ட அன்றைய சென்னை மாகாண கலால் ஆணையர் காட்டெரல் என்பார், திருச்செங்கோடு பகுதிகளில் மட்டும் சோதனை அடிப்படையில் மதுவிலக்கினை அமல்படுத்தப் பரிந்துரைதார். அதன்படி, அப்பகுதியில் 31 கடைகளில் மட்டும் மதுவிலக்கு அமலானது. அடுத்து ராசிபுரம் பகுதியில் 22 கடைகளில் அமலுக்கு வந்தது. இதன்படி அக்கடைகள் மூடப்பட்டன. மூன்று ஆண்டுகள் நீடித்த இந்த நடைமுறையால்

அதிக செலவு ஆனதோடு பக்கத்து தாலுக்காக்களில் விற்பனை அதிகரித்து அரசுக்குத் தொல்லைகள் ஏற்பட்டதால் நடைமுறையில் இருந்த மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டு, ஏற்கனவே மூடப்பட்ட அனைத்துக் கடைகளும் திறக்கப் பட்டன.

இருப்பினும், காங்கிரசார் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டதால் மது விற்பனை சற்றுக் குறையத் தொடங்கியபோது கடைகளின் விற்பனை நேரம் அதிகரிக்கப்பட்டது. இந்நிலையில் அடுத்து நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க, ராஜகோபாலாச்சாரியார் 1937இல் முதலமைச்சரானார். தீவிர மது எதிர்ப்பாளரான அவர் பதவி ஏற்றதும் தன் மதுவிலக்குக் கொள்கையை நடைமுறைப் படுத்த முனைப்போடு இறங்கினார். ஆனால் பல காங்கிரஸ் கட்சியினரே அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அக்கட்சியின் முக்கியமானவர்களில் ஒருவரான சத்தியமூர்த்தி "குடிகாரர்கள் இல்லாத அடிமை நாட்டில் வாழ்வதை விட குடிகாரர்கள் வாழும் சுதந்திர நாட்டில் ஒரு பிரஜையாக வாழவே விரும்புகிறேன்." என்றார்.

இருந்தாலும், காந்தியடிகளின் ஒத்துழைப்போடு தன் முக்கியக் கொள்கையாக இருந்த மதுவிலக்கினை அமல்படுத்த ராஜாஜி முயன்றதன் விளைவாக, காங்கிரஸ் கட்சியும் அதனை ஏற்று அன்றைய முக்கியத் தலைவர்களாக இருந்த ராஜேந்திர பிரசாத், அன்சாரி படேல் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவினை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்பத் தமிழ்நாட்டில் படிப்படியாக மதுவிலக்கை அமல்படுத்த முடிவு செய்த ராஜாஜி, முதன்முதலாக தனது சொந்த மாவட்டமான சேலத்திலும், அதன் பின்னர் இருபத்தைந்து மாவட்டங்களிலும் மதுவிலக்கைச் சட்டமாக்கினார்.

இச்சட்டத்தின்படி அனுமதி பெற்றவர்கள் குடிக்கலாம் என்றும், அனுமதியின்றிக் குடிப்பவர்கள் அபராதம் செலுத்த வேண்டும் என்றும் ஆனது. மேலும் கேளிக்கை மற்றும் உணவு விடுதிகள், கிருத்தவ மதச் சடங்குகளில் இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. இதனைக் கண்காணிக்கவும் அமல் படுத்தவும் டிக்ஸன், தாம்சன் என்ற இரு ஆங்கில அதிகாரிகளை ராஜாஜி நியமித்தார்.

மதுவிலக்கால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பினை ஈடுகட்ட விற்பனை வரியை அமல்படுத்தினார் முதலமைச்சர் ராஜாஜி. அடுத்த கட்டமாக, சித்தூர் கடப்பா மற்றும் வடார்க்காடு மாவட்டங்களில் மதுவிலக்கு அமலுக்கு வந்தது. இருந்தாலும் மாகாணம் முழுமைக்கும் அது கொண்டுவரப்பட வில்லை. இதனால் அரசுக்கு நிதி நெருக்கடி கூடுதலானது. இதனைச் சமாளிக்க என்று காரணம் சொல்லித் தமிழ்நாட்டில் 2200 பள்ளிக்கூடங்களை மூடினார் ராஜகோபாலாச்சாரியார்.

காந்தியின் சீடராக இருந்து மதுவிலக்கை முழுமையாக ஆதரித்த பெரியார், ஆச்சாரியார் மதுவிலக்குக்காக ஏழை எளிய கிராமப்புற மக்களின் கல்வி உரிமையைப் பாதிக்கும்படியாகப் பள்ளிக்கூடங்களை மூடியதைக் கடுமையாக எதிர்த்தார். இருந்தாலும், மதுவிலக்கு அதற்குரிய இடங்களில் நடைமுறையிலேயே இருந்தது. இச்சமயத்தில் மதுவின் கூடுதல் விலை காரணமாக நாட்டில் பல இடங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுதலில் ஈடுபடலாயினர். பல இடங்களில் கள்ளச் சாராய விற்பனை வெகு விமரிசையாக நடந்தது. அதனால் சாவுகளும் நிகழ்ந்தன.

பின்னர் காங்கிரஸ் கட்சிக்குள் நிகழ்ந்த சில சச்சரவுகள் மற்றும் நாட்டில் பெரியார் தலைமையில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகினார். அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர்களால் மதுவிலக்கு நிறுத்தப்பட்டு, மீண்டும் கள் சாராய விற்பனை தொடங்கியது.

நாடு விடுதலை அடையும் வரை நீடித்த இந்த நிலை, 1948ல் முதலமைச்சராக பதவி ஏற்ற ஓமாந்தூர் இராமசாமியாரால், மீண்டும் காந்தியடிகளின் பிறந்தநாளான 02-10-1948 முதல் தமிழ்நாடு முழுமைக்கும் நடைமுறைக்கு வந்தது. ஆனால் அவரைச் சார்ந்த காங்கிரசாருக்கே இது பிடிக்காமல், அவர் குறுகிய நாட்களில் பதவியிலிருந்து

விலக நேரிட்டது. அதன்பின் முதலமைச்சரான குமாரசாமிராஜா என்பவரும் அதனை நீடித்ததோடு, சாராயம் காய்ச்சுதலைக் கைவிட்டவர்களுக்கு மாற்றுத் தொழிலுக்கு ஏற்பாடுகளைச் செய்தார்.

பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் 1952ல் மீண்டும் முதலமைச்சரானார் இராஜகோபாலாச்சாரியார். தமிழ்நாட்டில் மட்டுமல்லாது இந்திய ஒன்றியம் முழுமைக்கும் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார். இவரது கோரிக்கையை ஏற்ற அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு, திரு நாராயணன் என்பார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். அக்குழுவானது முழு மதுவிலக்கை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்; மாநிலங்களுக்கு இதனால் ஏற்படும் வருவாய் இழப்பை மத்திய அரசு ஈடுகட்ட வேண்டும் என்பதான பரிந்துரைகளைக் கூறியது.

இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒன்றிய அரசு மக்களவை மூலமாக, மதுக்கடைகளின் எண்ணிக்கையை படிப்படியாகக் குறைக்க வேண்டும்; மதுவுக்கு மாற்றாக ஆரோக்கியமான குளிர் பானங்களைத் தயாரிக்க வேண்டும் போன்ற எட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றியது. மேலும் மதுவிலக்கைக் கண்காணிக்க மதுவிலக்குக் கமிட்டி ஒன்றையும் ஏற்படுத்தியது.

இச்சூழலில், இந்தியாவில் சில மாநிலங்களில் மதுவிலக்கு நடைமுறையில் இல்லாமல் இருந்தது. தமிழகத்தில் சென்னை மாகாணம் என்று இருப்பதை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்றும், இந்தியா முழுமைக்கும் மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் என்றும் உண்ணா நோன்பிருந்து சங்கரலிங்கனார் என்பார் உயிர் துறந்தார். அச்சமயத்தில் ஒன்றிய அரசு மதுவிலக்கைத் தீவிரப்படுத்திட டேக் சந்த் என்பார் தலைமையில் ஒரு கமிட்டியை அமைத்தது.

அக்கமிட்டியானது, மதுவிலக்கை மீறுகின்றவர் களைப் பிணையில் வரமுடியாத வகையில் கைது செய்வது, சொத்துக்களை பறிமுதல் செய்வது, அரசுப் பணியிலிருந்து குற்றவாளிகளை நீக்குவது, மற்றும் காந்தி நூற்றாண்டு சமயத்தில் நாடு முழுமைக்கும் முழு மதுவிலக்கை அமல்படுத்துவது ஆகிய பரிந்துரைகளை அளித்தது.

இந்த நடவடிக்கைகள் எதுவும் முழுமை பெறவில்லை. மதுவிலக்கு கடைபிடிக்கப்பட்ட மாநிலங்களில் கள்ளச்சாராயம் பெருக்கெடுத்து ஓடியது. ஒன்றிய அரசோ இழப்பை ஈடுசெய்ய எந்த நிதியையும் மாநிலங்களுக்கு அளிக்காமல் வாளாயிருந்தது. இப்படியான நிலையே நீண்ட காலம் தொடர்ந்தது.

### திராவிட ஆட்சியில் மதுவிலக்கு:

நாடு விடுதலை அடைந்த நாளிலிருந்து பெரும்பாலும் தோல்வியையே கண்டிருந்தாலும், ஒப்புக்கு நடைமுறையில் இருந்த மதுவிலக்கு, இனியும் நீடிக்க முடியுமா? என்ற கேள்வி 1967ஆம் ஆண்டில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிகண்டு ஆட்சிக்கு வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன் எழுந்தது. அதன் தலைவரும் முதலமைச்சருமான அறிஞர் அண்ணா அவர்கள், தன் ஆட்சியில் "இந்தி எதிர்ப்பு நீடிக்கும்; கோயில் முதலிய அறநிலையங்கள் பாதுகாக்கப்படும்; குடிசை வாழ்வோர் நிலை மேம்படுத்தப்படும்; மதுவிலக்கும் நீடிக்கும்" என்று அறிவித்தார். அன்றைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் காமராசர் உட்படப் பலரும் அதனை ஆதரித்தனர். ஆனால் தந்தை பெரியாரோ அதற்கு மாறாகத் தன் கருத்தினைத் தெரிவித்தார். 04-03-1967 அன்றைய விடுதலை தலையங்கத்தில் பெரியார் எழுதிய இந்த வரிகளை அப்படியே தருவது மதுவிலக்கு தொடர்பாக இன்றைக்கு நாம் என்ன முடிவினை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு அடித்தளமாக அமையும்.

"நான் காங்கிரசை விட்டு வந்த பிறகு, சுமார் 30 ஆண்டுகளாகவே, இன்று உள்ள மதுவிலக்குக் கொள்கைக்கு எதிரி! இதற்காக, நான் மதுக்குடங்களைக் காவடி கட்டிச் சுமந்துபோகிற மாதிரி, என்னைக் கேலிச் சித்திரம் போட்டுப் பத்திரிகைகளில் எழுதியுள்ளார்கள். நான் காங்கிரஸ் மது விலக்குக்கு, உள் எண்ணம்

கண்டுபிடித்து, ''குடியரசு'' இதழில் கட்டுரைகள் தலையங்கங்கள் எழுதியிருக்கிறேன். நிறைய கூட்டங்களில் பேசியிருக்கிறேன்!

1938-ல் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் பதவிக்கு வந்தபோது, நமது கல்வி வளர்ச்சியை ஒழித்துக் கட்டுவதற்கு ஓர் ஆதாரம் தேவைப் பட்டது. அதாவது 100க்கு 5 பேரே படித்த மக்களாயிருந்த நாம், ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, 100க்கு 7 பேர் படித்த மக்களானோம். இதைக் கண்டு ஆத்திரமடைந்த ராஜாஜி "கல்வியை இன்றுள்ள தன்மைப்படி நடத்துவதானால் அரசாங்கத்திடம் போதிய வசதியில்லை. அதனால் வரவு செலவைச் சரிக்கட்ட 2600 பள்ளிகளை (அதுவும் கிராமப் புறங்களில்) மூடவேண்டியது அவசியமாகிறது" என்று சொல்லியே, மதுவிலக்கினால் ஏற்பட்ட நட்டத்தைச் சரிகட்டினேன் என்று சாக்குக் கண்டுபிடித்துக் கொண்டார்.

ஆனால் அந்த மதுவிலக்கு அமலுக்கு வந்த நாள் முதல், நாளிதுவரைக்கும் அந்த மதுவிலக்குக் காரணமாக, அது ஒரு குடிசைத் தொழிலாக மாறி, இன்று குடிப்பது ஒரு பிரபுத்துவ நாகரிகமாகவே மக்களிடம் பரவியிருக்கிறது! இந்த மதுவிலக்கினால் குடியர்களின் எண்ணிக்கை ஒரு சிறிதும் குறைந்தபாடில்லை என்பதோடு, இதற்காகக் குடிகாரர்கள் செலவிடும் பணமும் 50 முதல் 100 சதவீதம் உயர்ந்ததே யல்லாமல் குறையவில்லை என்பதோடு, முன்பு மதுக்கடைக்குச் சென்று வாங்கிக் குடித்தவர்களுக்கு, இன்று வீடு தேடிவந்து விநியோகம் ஆகும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த மது உற்பத்தித் தொழில் மூலம் நாட்டில் அயோக்கியர்கள், நாணயமில்லாதவர்கள் பெருகி இருக்கிறார்கள். அவர்கள் போலீசுக்கு நண்பர்களாக ஆகிவிடுகிறார்கள். குடியர்கள் உடல்நிலையோ மிக மிகக் கேடடைந்தும் விடுகிறது.

இன்று ''மக்களால் தேர்தெடுக்கப்பட்டு'' ஆட்சிக்கு வந்திருக்கும் கட்சியார், ராஜாஜியைத் திருப்திப்படுத்த அவருக்குப் பயந்து, மதுவிலக்கைத் தீவிரப் படுத்துவோம் என்று கூறியிருப்பதாகக் கருத வேண்டியிருக்கிறது. நம் மக்கள் சகல துறைகளிலும் கேட்டடைந்து, கெட்டு உழல வேண்டும் என்பது தான் பார்ப்பன தர்மம். எந்த நிலையிலும் பார்ப்பனர் யாருக்குமே நல்லவழி காட்டமாட்டார்கள்.

இந்த மதுவிலக்குத் துறையில், தேவைப்பட்டவர் களுக்கு எல்லாம் மது கிடைக்கும்படியும், மதுவினால் உடலும் புத்தியும் கெடாதபடியும் இருக்கத்தக்க வண்ணம், மது அனுமதிப்பு ஏற்படுத்தினால், சர்க்காருக்கு நல்ல நிதி வரும்படி ஏற்படுவதுடன், பார்ப்பனர் தவிர்த்த மற்ற சகல துறையிலும் உள்ள மக்களில், நல்ல அளவுக்கு இந்த ஆட்சிக்கு ஆதரவு கிடைக்கும் என்று கருதுகிறேன்." (பக்கம் 467-468) (15)

இருப்பினும், பெரியாரின் தலை மாணாக்கனாக இருந்த அறிஞர் அண்ணா "மது விற்பனை மூலம் வரும் வருவாய் தொழுநோயாளியின் கையில் உள்ள வெண்ணெயை வாங்குவதற்குச் சமம்" என்று சொல்லி, 03-02-1969 அன்று தன் இறுதி மூச்சு அடங்கும் வரை மதுவிலக்கைத் தளர்த்தவில்லை.

அண்ணாவுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி ''மதுவிலக்கால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் நிதிக் குறைவை மத்திய அரசு ஈடுசெய்யாவிட்டால் மதுவிலக்கை ரத்து செய்யும் சூழ்நிலை ஏற்படும்'' என்று எச்சரித்தார். இதில் ஒரு வகையில் நியாயம் இருந்தது. நாடு விடுதலைக்குப் பின் தமிழ்நாடு தொடர்ந்து மதுவிலக்கைப் பிடிவாதமாகக் கடைபிடித்து வந்தாலும், ஒன்றிய அரசு அதனால் அரசுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்ய எந்த நிதி உதவியையும் அளிக்கவில்லை. அண்ணா ஆட்சியில் இருந்தபோதே "இப்படி மதுவிலக்கால் ஆண்டுக்குப் பலகோடி ரூபாய்கள் நட்டமாவதால் இதனை இனியும் கடைபிடிக்க வேண்டுமா?" என்று தொடர்ந்து பெரியார் வலியுறுத்திக் கொண்டிருந்தார். அதனைக் கருத்தில் கொண்டே கலைஞர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

இருப்பினும் அதற்கு ஒன்றிய அரசு செவி சாய்க்கவில்லை. மாறாக, புதிதாக மதுவிலக்கை

நடைமுறைக்கு கொண்டுவரும் மாநிலங்களுக்குத் தான் நிதி உதவியே தவிர, ஏற்கனவே மதுவிலக்கு உள்ள மாநிலங்களுக்கு இல்லை" என்று கைவிரித்தது. அந்நிலையில் கடுமையான நிதிப் பற்றாக்குறையில் தத்தளித்த தமிழ்நாட்டில், 1937க்குப்பின் அன்றைய முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மதுவிலக்கை 1971 அக்டோபரில் ஒத்தி வைப்பதாக அறிவித்தார். அப்போது சில அரசியல் கட்சியினர் அதனை எதிர்த்தனர்.

அதற்குப் பதிலளித்த கலைஞர், "சட்டப்பேரவையில் மதுவிலக்கை ஒத்தி வைப்பதாக அறிவித்த போது நான் மிகுந்த மனவேதனையோடே அதனை அறிவித்தேன். இந்திய நாடு முழுமைக்குமான மதுவிலக்கு என்பதை ஆதரித்த உத்தமர் காந்தியடிகள் வழி நடப்பதாகக் கூறும் மத்திய அரசும், பல மாநில முதல்வர்களாலும் பின்பற்ற முடியாத மதுவிலக்கினை நாம் மட்டும் ஏற்க வேண்டும் என்பது என்ன நியாயம்? கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு வளையத்துக்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாளைக்குத் தான் தன்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்க முடியும்?" என்று அரசாங்க நியாயமான வினா ஒன்றினை எழுப்பினார்.

இப்படியாக, பல விவாதங்களுக்கும் யோசனைகளுக்கும் நடுவில், தமிழ்நாடு அரசு கொண்டு வந்த ஆணையால், மதுவிலக்குக் கொள்கை இந்தியா முழுமைக்கான மதுவிலக்குச் சட்டம் அமலுக்கு வரும் வரை, தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது. 30-08-1971 அன்று முதல் நடைமுறைக்கு வந்த இத்தற்காலிகத் தளர்வால், தமிழ்நாடு முழுவதும் கள் சாராயக்கடைகள் திறக்கப்பட்டன. அரசின் வருவாய் கூடியது. ஆனால் இத்தளர்வு நீண்ட நாள் நிலைக்கவில்லை. மாறாக, இரண்டாண்டு கழிந்த நிலையில், கலைஞர் 1974ஆம் ஆண்டு மீண்டும் மதுவிலக்கினை நடைமுறைப் படுத்தினார்.

இது குறித்துப் பின்னாளில் கருத்து தெரிவித்த அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "1971ல் மதுவிலக்கைத் தற்காலிகமாக ஒத்தி வைப்பதாகத் தான் அரசு கூறியது. அதன் அடிப்படையில் பார்த்தால் அது மீண்டும் நடைமுறைக்கு வரும் என்று தானே பொருள்? அதனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயே, ஒத்தி வைக்கப்பட்ட மதுவிலக்கு மீண்டும் திரும்பப் பெறப்பட்டு, தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்தும் சட்ட முன்வடிவை ஒருமனதாக 22-08-1974 அன்று நிறைவேற்றி, மதுவிலக்கு நடைமுறைக்கு வந்து விட்டது என்பது தான் உண்மை." என்றார்.

மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமாக இருந்த அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த எம்.ஜி. இராமச்சந்திரன், மதுவிலக்கு குறித்து 13-09-1969ல் அளித்த அறிக்கை ஒன்றில், "மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள எந்தத் தனி மனிதனுக்கோ எந்தக் கட்சிக்கோ உள்ள அக்கறையை விட, அந்தக் கொள்கை மக்களுக்குத் தேவையானது என்பதில் திமுக தலைவரும் தமிழக முதல்வருமான கலைஞருக்குத் தான் அதிக அக்கறையும் அதிகப் பிடிப்பும் உண்டு என்பதை என்னால் துணிந்து கூற முடியும்." என்று அறிக்கை விட்டார். ஆனால், அதற்குப் பின் ஆட்சிக்கு வந்து முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் "என் தாய் மீது ஆணையாக மதுவிலக்கை அமல்படுத்துவேன்" என்று சூளுரைத்த எம்.ஜி.ஆர், அன்றைய பொருளாதாரச் சிக்கல்களையும் கள்ளச் சாராய பெருக்கத்தையும் சமாளிக்க முடியாமல் மதுவிலக்கைத் தானே ரத்து செய்தார். இதனால் 1981ஆம் ஆண்டு மே திங்கள் 1ஆம் நாள் தமிழகத்தில் மீண்டும் கள் சாராய விற்பனை தொடங்கப்பட்டது.

நாடு முழுவதும் கள்ளுக்கடைகள் ஏலம் விடப்பட்டன. பல தனியார் நிறுவனங்கள் சாராய உற்பத்தியில் இறங்கின. இதனால் கள்ளச் சாராயம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டாலும், அரசாங்க ஆதரவோடு நடைபெற்ற கள் சாராய விற்பனை அமோகமாகப் பெருகி அன்றாட கூலி வாங்கும் ஏழை எளிய நடுத்தர உழைக்கும் மக்களில் பெரும்பாலோர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகும் நிலை உருவானது. (16)

இப்படித் தொடங்கப்பட்ட மதுவிலக்கு நீக்கமானது இன்றுவரை நீடிக்கிறது. 1983-ல் முதல்வராக இருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் அரசு நிறுவனமான 'டாஸ்மார்க் ' மூலம்,அரசே மொத்த மது விற்பனை செய்யும் முறையை நடைமுறைப்படுத்தினார்.

ஏற்கனவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் தஞ்சை மராட்டியர்கள் ஆட்சியில் அரசாங்கமே சாராயம் காய்ச்சி விற்பனை செய்ததை அறிந்த நமக்கு, இந்த நிகழ்வு ஆச்சரியத்தை அளிக்கவில்லை. மாறாக அன்றைய சூழல் வேறு, இன்றைய சூழல் வேறு என்ற நிலையில், மக்கள் வாழ்க்கை இன்னலுக்கு ஆளாவதற்கு அரசாங்கமே துணை போவதா? என்ற கேள்வி தான் எழுகிறது. இதற்கெல்லாம் என்ன தான் காரணம்? அடிப்படையில், அரசியல் ரீதியாக பெருகிவரும் மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்த முக்கியத் தேவை பொருளாதாரம் என்ற வகையில், அதைப் பெரும் அளவுக்கு ஈட்டித் தருவது மதுவிற்பனை தான் என்பதும், இந்தியா முழுமைக்குமான மதுவிலக்கை அமல்படுத்த முனையாத ஒன்றிய அரசு மதுவிலக்கை நடைமுறைப்படுத்திடும் மாநிலங்களுக்கு எந்த நிதி உதவியையும் அளிக்காததும் காரணங்களாகும் என்றே கருதத் தோன்றுகிறது.

இந்தச் சூழலில், மீண்டும் ஆட்சிக்கு வந்த கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 1989ஆம் ஆண்டு கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் நடைவடிக்கையில் ஒன்றாக, மலிவுவிலை மதுவை அறிமுகப்படுத்தினார். ஆனால் மக்கள் மத்தியில், குறிப்பாகப் பெண்களின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. இதனால், பின்னர் ஆட்சிக்கு வந்த ஜெயலலிதா அதனை ரத்து செய்தார். எதிர்பார்த்தது போல, நாட்டில் பல இடங்களில் கள்ளச் சாராயச் சாவுகள் நிகழ்ந்தன. மது விலக்குக் கொள்கையில் ஒரு சரியான முடிவினை எடுக்க முடியாமல், மாறி மாறி ஆட்சிக்கு வந்த திராவிடக் கட்சிகள் தடுமாறின. இதற்கிடையில் கடந்த 2003ஆம் ஆண்டு சாராய மொத்த விற்பனையை மட்டும் மேற்கொண்டிருந்த டாஸ்மாக் நிறுவனம், சில்லறை விற்பனையையும் தாங்களே மேற்கொள்ளும் வகையில் ஆணை பிறப்பித்தார் முதலமைச்சர் ஜெயலலிதா. இதனால் நாடு முழுவதும் டாஸ்மாக் மது விற்பனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. பல்லாயிரக் கணக்கானவர்கள் இதன்மூலம் மது விற்பனையாளர்களாகப் பணியமர்த்தப்பட்டனர். இன்றைக்கு வரை ஜெயலலிதா அம்மையார் துவக்கி வைத்த இந்த நிலையே நீடிக்கிறது.

தரமான, பாதுகாப்பான, உயிருக்கு ஆபத்து விளைவிக்காத மது என்று சொல்லி அரசாங்கமே அதனை விற்பனை செய்தாலும், போதை போதாமலும், கூடுதல் விலை கொடுத்து வாங்கிட இயலாமலும், தவிக்கும் விளிம்பு நிலை மக்கள் கள்ளச் சாராயத்தையே நாடுகின்றனர். போதை அதிகமாக இருக்க வேண்டும் என்று கருதி அதனைக் காய்ச்சுவோர், உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் ரசாயனப் பொருட்களைக் கலப்பதால், அது ஒரு நிலையில் உயிரைக் கொல்லும் விஷமாக மாறி அடிக்கடி கள்ளச் சாராயச் சாவுகள் நிகழ்கின்றன.

இன்றைய நாளில் அரசாங்கம் விற்பனை செய்யும் சாராயம், மற்றும் கள்ளத் தனமாகக் காய்ச்சி விற்கப்படும் சாராயம் தவிர, பல உருவங்களில் விற்பனை செய்யப்படும் கஞ்சா, பான்பராக், குட்கா போன்ற போதை தரும் பொருட்களின் நுகர்வால் பெரும்பான்மை இளைஞர்களும், மாணவர்களும் சீரழிந்து வருவதைக் காண்கின்றோம்.

பல்லாயிரம் ஆண்டுகளாக நம் வாழ்வோடு இணைந்து பயணித்து வரும் இந்தத் தீய பழக்கமான மதுவை ஒட்டுமொத்தமாக ஒழித்துக் கட்டிவிட முடியுமா? அரசாங்கம் மட்டும் இதில் ஈடுபட்டால் போதுமா? என்ன வகையில் இதனைக் கையாண்டால் எளிய மக்கள் இந்தக் கொடுமையிலிருந்து விடுபட இயலும்? இது போன்ற கேள்விகள் மதுவின் கொடுமைகளை அறிவோரிடம் எழுகின்றன. என்ன தான் செய்ய முடியும்? செய்ய வேண்டும்?

### என்ன தான் செய்ய வேண்டும்?

வரலாற்றில் மது என்பது பண்டைக் காலந்தொட்டு உலகம் முழுதும் மனிதர்களால் நுகரப்பட்ட ஒரு போதை தரும் பானமாக இருந்து வருகிறது. பல

குளிர் பகுதி நாடுகளுக்கு மது அவசியமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் வெப்பப் பகுதிகளில் ஒன்றான நம் நாட்டில் மது உடல் பாதுகாப்புக்காக இல்லாமல், உடலையும், அறிவையும், சுற்றுப்புறத்தையும் கெடுக்கும் கேடாக அமைந்துள்ளது கண்கூடு. பன்னெடுங் காலமாக இருக்கும் இத் தீய பழக்கத்தைக் கண்டித்துப் பல சான்றோர்கள் அறிவு புகட்டியிருந்தாலும், இதுநாள் வரை எவர் செவியிலும் எட்டவில்லை. மாறாக, அப்பழக்கம் உச்சிக்குச் சென்று விட்ட ஓர் அபாயத்தைத் தான் காண்கின்றோம். இத்தீமை பயக்கும் பழக்கம் "வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு" என்பதைக் குடிப்போர் யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

உத்தமர் காந்தியடிகளின் தலையாய கொள்கை மதுவிலக்கு என்றும், அதனை முழுமையாக ஆதரிக்கிறோம் என்று பேச்சளவில் சொல்லிக் கொள்ளும் ஒன்றிய அரசு, அதனை நடைமுறைப் படுத்திட எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மதுவிலக்கினை நடைமுறைப்படுத்தியுள்ள மாநில அரசுகளின் ''நிதி இழப்பினை ஈடு செய்ய உதவுங்கள்" என்ற கோரிக்கையும் ஏற்கப்படவில்லை. இதன் மூலம் ஒன்றிய அரசின் உண்மைக்கு மாறான மனப்பான்மை தான் மாநில அரசுகள் முழு மதுவிலக்கை நடைமுறைப்படுத்த முடியாமைக்கு முக்கிய காரணமாகும்.

இப்படிப்பட்ட சூழலுக்குத் தள்ளப்பட்ட பல மாநில அரசுகள், தங்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்கிக் கொள்ள, வருவாய் ஈட்டித்தரும் மதுவிற்னையைக் கைவிட முடியாமல் தவிக்கின்றன. இது தவிர்க்க முடியாத ஒன்று. தமிழ்நாட்டைப் பொருத்த மட்டில் சுற்றியுள்ள கேரளா, ஆந்திரா, கர்னாடகா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களில் மதுவிற்பனை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நிலையில், இங்கு மட்டும் மதுவிற்பனையை அரசு நிறுத்திட வேண்டும் என்பதில் கிஞ்சிற்றும் நியாயம் இல்லை.

அரசியல் ஆதாயம் கருதி, எதிர்க்கட்சிகளாக உள்ளவை மதுவிலக்கை ஆதரித்துப் பேசுவதும், ஆளுங்கட்சியாக வந்தபின் அதனைக் கைவிட்டு விடுவதும் வாடிக்கையாக உள்ளதைக் காண்கின்றோம். ஆனால், ஆட்சிக்கு என்றைக்கும் வரமுடியாது என்று கருதும் சிறு கட்சிகள், மக்கள் தங்களை மறந்துவிடக் கூடாது என்ற ஆதாய நோக்கில் மதுவிலக்கை ஆதரித்துப் பேசுவதையும் காண்கின்றோம்.

இப்படியான சூழலில், நிச்சயமாக முழு மதுவிலக்கினை இனி நடைமுறைப்படுத்த, கண்ணுக்கெட்டிய தூரம் வரை வழியே இல்லை என்று எண்ண வேண்டியுள்ளது. இருந்தாலும் கண்ணெதிரே பாதிக்கப்படும் ஏழை எளிய மக்களின் நலன்கள் காக்கப்பட வேண்டும் என்பது உயிர்ப் பிரச்சினையாகும். அதனால் மக்களின் பாதுகாப்பிற்கான வழிமுறைகளைக் கடைபிடித்தல் என்பது அரசாங்கம், பொதுமக்கள் என அனைவரும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே சாத்தியமாகும். அவைகட்கான வழிகள் எவை? என்பதைக் காண்போம்.

### மதுவுக்கு எதிரான பரப்புரை (பிரச்சாரம்):

குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கு, மதுவின் தீமைகளையும் அதனால் அவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் ஏற்படும் தீமைகளையும் உணர்த்தும் வகையில் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக நடத்தப்படும் விழிப்புணர்வு முகாம்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும், இந்திய ஒன்றியம் அக்டோபர் இரண்டாம் நாளைத் "தேசிய மது எதிர்ப்பு நாள்" என்ற பெயரில் கடைபிடிக்கிறது. சூன் 26ஆம் நாள் உலக போதைப்பொருள் எதிர்ப்பு நாளாகக் கருதப்படுகிறது. அந்நாட்களில் அனைத்துக் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், அரசு அலுவலகங்களிலும் மது மற்றும் போதைப் பொருட்களின் தீமைகள் குறித்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுபோல பொதமக்கள் பங்கேற்கும் வகையில் குறிப்பாகக் கிராமப்புறங்களில் ஆடல் பாடல் நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் பிரச்சாரம் நடத்தப்பட வேண்டும். தற்போது இதுபோன்ற நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் வெறும் சடங்காகவே அவை நடைபெறுகின்றன. இதுவரை இந்த விழிப்புணர்வு பிரச்சாரங்களால் எந்த அளவுக்கு

மக்கள் குடிப்பழக்கத்தை விட்டனர் என்ற தரவு கிடைக்கப்பெறவில்லை.

இந்நிலையில், அண்மையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகள் கல்லூரிகளில், போதை தடுப்பு கிளப் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 100 நாள் வேலைத் திட்டத்தில் ஈடுபடுவோர், மற்றும் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு, போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பொதமக்கள் கூடும் இடங்களில் கலைநிகழ்ச்சிகள் மூலமாகப் போதைப்பொருட்கள் தடுப்புப் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளது. 18 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்குப் போதைப்பொருள் மருந்து விற்பனை செய்வதைத் தடுக்க அனைத்து மருந்து விற்பனைக் கடைகளிலும் கேமராக்கள் பொருத்தப்பட்டன. பள்ளிகளுக்கு அருகிலுள்ள சிறு விற்பனைக் கடைகளில் போதைப்பொருட்கள் விற்கப்படுகின்றனவா? என்பதை உணவு பாதுகாப்புத் துறையுடன் இணைந்து தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதுபோன்ற போதை தடுப்புக்கான நிகழ்ச்சிகளைத் தமிழ்நாட்டிலேயே முதன்மை மாவட்டமாகச் சிறப்பாக நடத்தியமைக்காக 2024 சூன் 30ஆம் தேதி தலைநகர் புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியருக்கு இந்தப் பாராட்டு கிடைத்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சாரங்கள் அனைத்துப் பகுதிகளிலும் வலிமையாக நடத்தப்பட்டு, மது மற்றும் போதைப் பழக்கத்திற்கு நீண்ட காலமாக அடிமையாகி இருந்து அதனைக் கைவிட்ட நபர்களுக்கு, உள்ளாட்சி மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் பரிசுகள், ஊக்கத் தொகைகள், வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு குறிப்பாக மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் குடிப்பழக்கம் மற்றும் போதைப்பொருள்கட்கு அடிமையாகும் நிலை பெருகி வருகிறது என்பது மிகுந்த வருத்தமளிக்கிறது. இந்நிலையில் கல்வி நிறுவனங்களில் நீதிகூறல் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும். அவற்றில் மது ஒழிப்புப் பிரச்சாரத்தைப் பேச்சாளர்கள், மருத்துவர்கள், மதுவால் சீர்கெட்டுத் திருந்தியவர்களைக் கொண்டு நடத்த வேண்டும். மாணவர்களின் சேர்க்கையின் போதே "மதுப் பழக்கத்தில் ஈடுபட மாட்டேன்" என்ற உறுதிமொழியினை மாணாக்கர்களிடம் பெற வேண்டும். தவறு செய்யும் மாணவர்கள் கண்டறியப் பட்டால் "நிரந்தர நீக்கம்" போன்ற கடுமையான தண்டனை வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

அரசுப்பணியில் இருப்போர் குடிபோதையில் கண்டறியப்பட்டு நிரூபிக்கப்பட்டால் அவர்கள் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்படுவார்கள் என்பதை அவர்களின் நடத்தை விதிகளில் கொணர வேண்டும்.

நாட்டில் பெரும்பான்மை மக்கள் இறைநம்பிக்கை உடையவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் அவர்களில் பெரும்பான்மையானவர்கள் குடிப்பழக்கத்திற்கும் ஆளாகி இருக்கின்றனர். எனவே, சமயம் சார்ந்த சான்றோர்கள், தங்கள் சமயப்பணிகளினிடையே மதுவின் தீமைகளை எடுத்துரைத்து அவர்களை நல்வழிப்படுத்தும் வகையில் கூட்டங்களைப் பக்தர்களிடையே நடத்திட வேண்டும். "புலால் உண்பவர்கள் நுழையக்கூடாது" என்று வடலூர் சத்தியஞான சபையில் இராமலிங்க அடிகளார் எழுதி வைத்ததைப் போலவே "குடிப்பழக்கம் உள்ளவர்கள் கோயிலுக்குள் நுழையக்கூடாது" என்று அனைத்து சமய வழிபாட்டுத் தலங்களிலும் அறிவிப்புகள் வைக்கப்பட வேண்டும்.

### அரசியல் கட்சிகளின் கடமை:

மது ஒழிப்பில் அரசாங்கத்தின் பங்கு தான் முக்கியமானது. காலங்காலமாகக் கைவிட முடியாமல், மாநில அரசுகளைத் தவிப்பில் வைத்துள்ள மதுவிலக்கு, மிக அக்கறையோடு பார்க்கப்பட வேண்டிய ஒன்று. இன்றைக்குத் தமிழ்நாட்டைப் பொருத்த மட்டில் அரசே மதுவிற்பனையைச் செய்து வருகிறது. அரசின் மொத்த வருவாயில் பத்திரப்பதிவு வருவாயும், மது விற்பனை வருவாயும் தான் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மதுவிற்பனைக்காகப் பல்லாயிரக் கணக்கானவர்கள் வேலை வாய்ப்பைப்

பெற்றுள்ளார்கள் என்பதைப் பார்க்கின்ற போது, ஒரே சமயத்தில் முழு மதுவிலக்கு என்பது உடனடியாகச் சாத்தியமில்லை என்பதே நிதர்சனம். எனவே, நாட்டில் உள்ள சாராயக் கடைகளைப் படிப்படியாகக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அரசாங்கம் என்பது ஓர் அரசியல் கட்சியாலோ அல்லது பல கட்சிகளின் கூட்டணியாலோ இன்றைக்கு நடத்தப்படுகிறது. இந்த வகையில் ஆளுங்கட்சியாக உள்ள கட்சியோ அல்லது கட்சிகளோ, தன் உறுப்பினர்களை மதுவிலக்கு விஷயத்தில் மிகுந்த கட்டுப்பாட்டோடு வைத்திருத்தல் அவசியம். ஆனால் நடைமுறையில் அது வேறாக உள்ளது. ஆளுங்கட்சி எதிர்க்கட்சி எனப் பாகுபாடின்றி அனைவரும் சாராய ஆலைகளுக்கு உரிமையாளர்களாக உள்ளார்கள். பல இடங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோராகவும் ஊக்கப் படுத்துவோராகவும் இருக்கின்றனர். இது முற்றிலும் ஏற்க முடியாத ஒன்று. மக்களின் உயிரோடு விளையாடும் ஒரு தீய பழக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, பணம் சேர்ப்பது ஒன்றே குறிக்கோள் என்று செயல்படும் சமூக விரோதிகளைத் தங்கள் கட்சிகளில் வைத்திருப்பதை அரசியல் தலைவர்கள் எந்த நிலையிலும் அனுமதிக்கக் கூடாது. இவைகளின் பேரில் கட்சிப் பொறுப்பாளர்களிடம் உறுதிமொழியினைப் பெறவேண்டும். பிடிபடும்போது "கட்சியை விட்டு நீக்கி விட்டோம்" என்றும், சில நாட்களில் மக்களின் மறதியைப் பயன்படுத்தி அவர்களை மீண்டும் சேர்ததுக் கொள்வது போன்ற நியாயமற்ற செயல்களைக் கட்சிகள் கைவிட வேண்டும்.

தற்போதெல்லாம் கட்சி வேறுபாடின்றி, கூட்டங்கள் மாநாடுகள் பேரணிகள் என்றால் சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இது கட்டாய ஒன்றாகி விட்டது. குவார்ட்டரும், பிரியாணியும் கைச்செலவுக்குத் தொகையும் பெறாமல் யாரும் வரமாட்டார்கள் என்ற நிலை அனைத்துக் கட்சிகளுக்கும் ஏற்பட்டு விட்டது. அந்த அளவுக்கு மதுப்பழக்கம் பெருகி விட்டதற்குக் கட்சிகள் தான் பொறுப்பேற்க வேண்டும்.

எனவே கூட்டம் சேர்ப்பதில் யார் பெரியவர்கள்? என்ற தேவையற்ற கௌரவம் பார்க்காமல், தங்களால் அழைத்து வரப்படுபவர்களுக்குச் சாராயம் கொடுப்பதை அனைத்துக் கட்சிகளும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். அதீத குடிப்பழக்கம் உள்ள கட்சிப் பொறுப்பாளர்களைக் கண்டறிந்து அவர்களை உடனடியாகக் கட்சி பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டு, "குடிகாரர்களுக்கு கட்சியில் எந்தப் பொறுப்பும் தரப்படமாட்டாது" என்று பொதுவெளியில் அறிவிக்க வேண்டும்.

**அரசாங்கத்தின் கடமை:**

அரசு அலுவலர்கள், குறிப்பாக வருவாய்த் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவல்துறையினரின் பங்கு மதுவிலக்கை நடைமுறைப் படுத்துவதிலும், கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலும் முக்கியமான ஒன்றாக உள்ளது. அண்மையில் கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயத்தால் 67 பேர் மாண்ட நிகழ்வு அரசுத் துறைகளும், காவல்துறையும் எந்த அளவுக்கு மெத்தனமாக இருந்துள்ளன என்பதைக் காட்டுகிறது.

"புகை போகாத இடத்திலும் போலீஸ் போகும்" என்ற பழமொழிக்கு ஏற்ப காவல்துறையினருக்குத் தெரியாமல் எதுவும் நடக்க வாய்ப்பில்லை. கள்ளச் சாராயம் காய்ச்சுதலும் விற்பதுவும், பெட்டிக் கடைகளில் பதுக்கிப் போதைப் பொருட்களை விற்பதுவும் நிகழ்ந்திட வாய்ப்பே இல்லை. இது காவல்துறை மற்றும் அரசு அலுவலர்களின் கையாலாகாத்தனத்தைக் காட்டுகிறதா? என்றால் இல்லை; மாறாக அவர்களில் பெரும்பான்மையானவர்கள் கையூட்டு பெறுவதில் அதிக அக்கறை கொண்ட சமூக விரோதிகளாக உள்ளனர் என்பதே கசப்பான உண்மை.

மது ஒழிப்புக்காகவே செயல்படும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு மற்றும் உளவுப்பிரிவு போன்றவை காவல்துறையில் இருந்தாலும், அனைவருக்கும் தெரிந்த இடங்களில் துணிந்து கள்ளச் சாராயம்

விற்கப்படுவதையும், அதனால் சாவுகள் நிகழ்வதையும் அறியும்போது, இந்தப் பிரிவுகளின் பணிநேர்மையையும் கடமை உணர்வையும் சந்தேகிக்க வேண்டிய நிலை தான் ஏற்படுகிறது. எனவே, அரசு இதில் கடுமையான நடவடிக்கைகளைத் தயவு தாட்சண்யமின்றி எடுக்க வேண்டும். கடமை தவறும் அலுவலர்கள் மற்றும் காவல்துறையினர் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களை நிரந்தரமாக பணிநீக்கம் செய்யும் அளவுக்கு அரசு விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரசியல் ரீதியாக எதிர்க்கட்சிகள் இன்றைக்குக் கூப்பாடு போடும் கள்ளச்சாராய மரணங்கள், தமிழ்நாட்டில் மட்டும் நடக்கவில்லை. இந்திய ஒன்றியம் முழுக்கவும், குறிப்பாக மதுவிலக்கைக் கடைபிடிக்கும் குஜராத்திலும் தொடர்ந்து நடந்து கொண்டு தான் உள்ளன. இதுவரை நாட்டில் நடந்த சில முக்கியக் கள்ளச் சாராய மரணங்களைப் பார்த்தாலே இது புரியும்.

பல மாநிலங்களில் கள்ளச் சாராய மரணங்கள் நிகழ்ந்துள்ள நிலையில், அதனை ஒழிக்கத் தமிழ்நாடு அரசு பல காலமாகவே முனைப்போடு செயல்பட்டுத் தான் வருகிறது. மதுவிலக்கு தொடர்பாக முதன்முதலாக தமிழ்நாட்டில் 1937ல் இயற்றிய மதுவிலக்குச் சட்டத்தில், சாராயம் குடிப்போர், அதனைக் காய்ச்சுவோர், விற்பனை செய்வோர்க்கு அளிக்கப்பட்ட தண்டனைகள் மிகக் குறைவாகவே இருந்தன. இதற்கான தண்டனைகளாக, அதிக பட்சம் 6 மாதச் சிறை தண்டனையும் 2000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டன. ஆனால், தற்போது தமிழ்நாடு அரசு "மதுவிலக்குச் சட்டம் — 2024" என்ற பெயரில் 1937ஆம் ஆண்டின் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவந்து, தண்டனையாக 10 ஆண்டுகளும் அபராதமாக ரூபாய் 5 லட்சமும் என்று அறிவித்துள்ளது. கள்ளச் சாராய மரணம் ஏற்பட்டால், அதற்குப் பொறுப்பானவர்களுக்கு ஆயுள்

| நிகழ்ந்த காலம் | கள்ள சாராய சாவுக்குரிய மாநிலம் | சாவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1981 | கர்நாடகம் | 308 பேர் |
| 1992 | ஒடிசா | 200க்கு மேல் |
| 2004 டிசம்பர் | மகாராஷ்ட்ரா | 87 |
| 2008 மே | கர்நாடகம் | 180 |
| 2009 சூலை | குஜராத் | 136 |
| 2011 டிசம்பர் | மேற்கு வங்காளம் | 194 |
| 2015 சூன் | மகாராஷ்ட்ரா | 102 |
| 2019 பிப்ரவரி | உத்ரகாண்ட் / உத்திரபிரதேசம் | 104 |
| 2022 சூலை | குஜராத் | 42 |
| 2023 ஏப்ரல் | பீகார் | 37 |
| 2023 மே | தமிழ்நாடு | 22 |
| 2024 மார்ச் | பஞ்சாப் | 21 |
| 2024 சூன் | தமிழ்நாடு | 67 |

தண்டனையும் 10 லட்ச ரூபாய் அபராதமும் என்றும் அறிவித்துள்ளது.

கள்ளக்குறிச்சி கள்ளச் சாராய மரணங்கள் தொடர்பாக, அப்பகுதியின் சாராயம் காய்ச்சும் மையமாகச் செயல்படும் கல்ராயன் மலைப்பகுதி மக்களின் வாழ்க்கை மேம்பாடு தொடர்பாகச் சென்னை உயர்நீதமன்ற நீதியரசர்கள் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரித்து வருகின்றனர். அவ்வழக்கு தொடர்பாக அப்பகுதியின் மலைவாழ் மக்களின் மேம்பாட்டுக்காக அரசு இதுவரை மேற்கொண்ட நலத்திட்டங்கள் குறித்த விவரங்களை விரைவில் அளிப்பதாக அரசு வழக்குரைஞர் தெரிவித்ததைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த நீதியரசர்கள்,

"கள்ளச் சாராயம் தயாரிப்பது மட்டுமே அந்தப் பகுதி மக்களின் ஒரே வாழ்வாதாரமாக உள்ளது. அதனை ஒழிக்கும் பட்சத்தில் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கல்ராயன் மலைப்பகுதி சுற்றுலா தலத்துக்கு உகந்த பகுதியாக உள்ளதால், அந்தப் பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அந்தப் பகுதி மக்களுக்கு உடனடித் தேவையான மருத்துவம், கல்வி, போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகளைத் தமிழக அரசு உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும். இதற்காக, கல்ராயன் பகுதிக்கு நாங்கள் செல்வதை விட, தமிழக முதல்வரோ அல்லது ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரோ சென்று பார்வையிட்டால், அப்பகுதி மக்களுக்கு ஏதேனும் நன்மை கிடைக்கும்" என்று கூறியுள்ளனர்.

இதிலிருந்து, இந்த அரசு மீது, மக்கள் மட்டுமன்றி, நீதித் துறையும் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளது என்பது புலனாகிறது. எனவே, அமைச்சர்களும், அரசு அலுவலர்களும், காவல்துறையினரும் மக்கள் நலனில் அக்கறையோடு செயல்பட்டால் ஓர் அரசாங்கம் எதையும் சாதிக்க முடியும் என்பதை அறியலாம்.

இன்றைய மக்களாட்சி முறையில், ஒன்றிய அரசு எவ்வித அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கும் இடமளிக்காமல், மாநில அரசுகளுக்குப் போதிய நிதியினை அளித்தால் இது நிச்சயம் சாத்தியமாகும் என்பதே உண்மை.

**பொது மக்களின் கடமை;**

பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் ஒரு பழக்கம், அது தீமை பயக்கத்தக்கது என்பதை ஆன்றோர்களும் சான்றோர்களும் பலவாறு எடுத்துக் கூறியும், அப்பழக்கத்தால் கெட்டொழிந்தவர்களின் வரலாற்றைக் கேட்ட பின்பும், "நான் இப்படித் தான் இருப்பேன்" என்று சாக்கடையில் சென்று விழும் திருந்தாத குடிகாரர்கள் இருந்தால், மதுவிலக்கு என்பது எவ்வகையில் சட்டமியற்றினாலும் எந்தக் கடுமையான தண்டனைகளை அறிவித்தாலும் அது சாத்தியமில்லை.

"திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் வரிகள் சொல்லுவதைப் போல, குடிப்பவர்களே தங்கள் தவறை உணர்ந்து திருந்தாவிட்டால், யாராலும் அவர்களைத் திருத்த முடியாது என்பதும், அவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியாது என்பதுமே உண்மை. மேற்சொல்லப்பட்ட வழிமுறைகள் அனைத்தையும் செவ்வனே கடைபிடித்தாலும் கூட, குடிப்பவர்கள் தாமாகவே அப்பழக்கத்தைக் கைவிடாத போது, முழு மதுவிலக்கு என்பது நிறைவேற்ற முடியாத ஒன்றாகவே அமையும்.

"அரசாங்கம் மதுவை விற்கிறது; அதனால் நாங்கள் வாங்கிக் குடிக்கிறோம்" என்று குடிகாரர்களும், "அரசாங்கம் மதுவை விற்பதால் தான் குடிக்கிறார்கள். அது நிறுத்தப்பட்டால் நிலை சீரடையும்" என்று சமூகச் செயற்பாட்டாளர்களும் சொல்கிறார்கள். ஆனால், அதில் முழு உண்மை உள்ளதா? அரசு மதுவிற்பனையைச் செய்து கொண்டிருக்கும் போதே கள்ளசாராயம் பெருக்கெடுத்து ஓடும் போது, அரசு விற்பனையையும் நிறுத்திவிட்டால், அன்றாடம் கூடுதலான பல நூறு சாவுகளைக் காணும் நிலை தான் ஏற்படும்.

எனவே, அரசு விற்பதை மட்டும் குற்றம் சொல்வதில் நியாயம் இல்லை. மனைவி மக்களோடு

குறைந்த வருவாயில் அன்றாட வாழ்வுக்கே அல்லல் படும் நிலையில், உடலுக்கும் உறவுகட்கும் கேடு விளைவிக்கும் இந்தக் குடிப்பழக்கம் தேவை தானா? என்பதை ஒவ்வொரு குடிகாரனும் சிந்திக்க வேண்டும். ஆற்றுப்படுத்துதல் (Counselling) மூலம் இப்படிச் சிந்திக்க வைத்துக் குடிப்பழக்கத்தைக் கைவிட்ட மொடக் குடியர்கள் பலர், நம் கண்முன்னே இன்றைக்கு நல்வாழ்வுக்குத் திரும்பியுள்ளதைக் கண்டுகொண்டு தான் இருக்கின்றோம்.

எனவே, முழு மதுவிலக்கு என்பது உடனடியாகச் சாத்தியமில்லாத ஒன்று என்றாலும், பெரும்பான்மை ஏழை எளிய மக்களும், எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களும் இளைஞர்களும் போதைப் பழக்கங்களிலிருந்து விடுபட வேண்டுமாயின், மேற்சொன்ன அனைவரின் கூட்டுமுயற்சியால் மட்டுமே அஃது சாத்தியமாகும். அதில் பொதுமக்களின் பங்கு தான் பெரும்பான்மையாக உள்ளது.

## முடிவுரை;

முழு மதுவிலக்கு சாத்தியமா? என்று அறிய முற்பட்ட போது, மதுவின் வரலாறு, தொடக்கம் முதல் அதன் தீமைகளை எடுத்துச் சொன்ன இலக்கிய வரலாற்றுச் சான்றுகள், வரலாற்றில் பல்வேறு அரசுகள் மது குறித்துக் கையாண்ட முறைகள், மதுவிலக்கை யோசித்த அரசுகள், அதனை அமல்படுத்த முடியாமல் போன போது அரசே விற்பனை செய்யும் அளவுக்கு வந்த நிலை, என்று யாவும் கண்டோம்.

மதுவின் தீமைகளிலிருந்து ஓரளவுக்காவது மக்களைக் காக்க என்ன முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதையும், முழு மதுவிக்கு எப்படி எவரால் சாத்தியமாகும்? என்பதையும் ஆராய்ந்த நிலையில், கூட்டு முயற்சியாலும், குறிப்பாகப் பொதுமக்களின் கட்டுப்பாட்டு உணர்வாலுமே சாத்தியமாகும் என்பதையும் கண்டறிய முடிகிறது. மாற்றம் ஒன்றே மாறாதது. காத்திருப்போம். தொடர்ந்து விழிப்புப் பணிகளைச் செய்வோம். சமூக நலம் பெறுவோம்.

## குறிப்புதவி நூல்கள்:


1. சங்கராச்சாரியார் சந்திரசேகர சரஸ்வதியின் "தெய்வத்தின் குரல்" - முதல் தொகுதி - வானதி பதிப்பகம் பக்கம் 270
2. ரிக் வேதம்- தமிழ் மொழிபெயர்ப்பு - எம்.ஆர்.ஜம்புநாதன் - வெளியீடு டி.என்.ஏ.அய்யர் மும்பை - 1991
3. சிலம்புச் செல்வர் ம.பொ.சி. எழுதிய "மகாத்மாவும் மதுவிலக்கும்" என்ற நூலின் பக்கம் 10
4. புறநானூறு - மூலமும் உரையும் - புலியூர் கேசிகன்
5. பட்டினப்பாலை - பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் - தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு
6. டாக்டர் அ.கிருஷ்ணசாமி எழுதிய "விஜயநகரப் பேரரசின் வரலாறு" தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியீடு
7. திருமலை நாயக்கர் வரலாறு - அ.கி.பரந்தாமனார் எம்.ஏ. - பாரி நிலைய வெளியீடு
8. 6-ல் கண்டபடி
9. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் - பேரா. கே.எம். வேங்கடராமையா, எம்.ஏ.- தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு - பக்கம் 141-142’
10. டாக்டர் மு.வரதராசனார் எழுதிய திருக்குறள் தெளிவுரை பக்-188-189
11. நாலடியார் - தெளிவுரை புலியூர் கேசிகன்
12. இன்னா நாற்பது - மூலமும் உரையும் - மகாவித்துவான் கா.இராமசாமி நாயுடு அவர்களால் இயற்றப்பட்ட விருத்தியுரை. சென்னை மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையில் 1909இல் பதிப்பிக்கப்பட்டது

13. திரிகடுகம் - உரையாசிரியர் பால சங்கரன் எம்.ஏ.,பி.எட்.

14. வித்துவான் பு.சி.புன்னைவனநாத முதலியார் எழுதிய விளக்க உரை - 1936ல் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்பக வெளியீடு

15. கவிஞர் கருணானந்தம் எழுதிய ''தந்தை பெரியார்'' நூலின் பக்கம் 467-468

16. தமிழகத்தில் மது புரண்ட வரலாறு - ஆர். முத்துக்குமார்

## ஆசிரியர் குறிப்பு:

*ஞான. வள்ளுவன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புவியமைப்பியலில் இளம் அறிவியல், சமூகவியலில் முதுகலைப் பட்டம், மற்றும் மருத்துவமனை மேலாண்மையில் முதுநிலைப் பட்டயம் ஆகியவற்றைப் பெற்றுள்ளார். அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மருத்துவத்துறையில் இளநிலை உதவியாளராக 1977ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்தவர், பதவி உயர்வுகளுக்குப் பின் நிருவாக அலுவலராக கடந்த 2012-ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.*

*தன் தந்தை வழியொற்றி, தந்தை பெரியார் கொள்கைகள் மீது பற்று கொண்டவர். 1999ஆம் ஆண்டு முதல், நண்பர்களோடு இணைந்து 'தந்தை பெரியார் கல்வி அறக்கட்டளை' என்ற அமைப்பின் மூலம் ஏழை எளிய மாணவர்களின் கல்விக்கான உதவிகளைச் செய்து வருகிறார்.*

எழுதுவதில் விருப்பம் கொண்டு இதுநாள் வரை 'பெரியார்-95', 'திராவிட இயக்கமும் எங்கள் ஊரும்', 'தமிழர் வாழ்வில் சாதியும் மதமும் - அன்றும் இன்றும்', 'இசை வேளாளர்', 'வரலாற்றில் வென்ற அவர் தாம் பெரியார்', 'செப்பேடுகளும் சதுர்வேதி மங்கலங்களும்', 'தளிச்சேரிப் பெண்டுகள்', 'ஸநாதனம்', 'ராஜநாயகம்', 'ஆச்சாரம்', 'பாதை தவறாத பாதங்கள்', 'சில பக்கங்கள் சில தாக்கங்கள்' என இதுவரை 12 நூல்களை எழுதியுள்ளார். இவரது நூல்கள் நூலக ஆணைக்குழுவால் தேர்வு செய்யப்பட்டு, சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் உள்ளிட்ட தமிழகத்தின் பல நூலகங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

**Who are the Dravidians?**

It is a fact that the term Dravidians and Nagas are merely two different names for the same people. The Nagas were a very ancient people. It must also be remembered that the Nagas were in no way an aboriginal or uncivilized people. Not only did the Naga people occupy a high cultural level but history shows that they ruled a good part of India.

**The word Dravida is the name of language of the people and does not denote the race of the people. Nagas was a racial or cultural name and Dravida was their linguistic name.**

Thus, the Dasas are the same as the Nagas and the Nagas are the same as the Dravidians. In other words what we can say about the races of India is that there have been at the most only two races in the field, the Aryans and the Nagas.

*(Dr. Babasaheb Ambedkar Writings and Speeches: Vol.7 - The Untouchables? Part III, Chapter VII)*

Prof. Dr. **B.R. AMBEDKAR,** M.A., M.Sc., Ph.D., D.Sc.

Hon'ble Minister (1st Minister) of Law and Justice,
Union Of India (1947-51).
Minister of Labour in Viceroy's Executive Council (1942-46).
Chairman of the Constitution Drafting Committee - Constituent Assembly of India (1946-50).
Member of Parliament - Rajya Sabha for Bombay State (1952-56).

# தொன்மங்களைக் கட்டுடைத்துத் திராவிடச் சித்தாந்தம் காத்த கலைஞர்

பேராசிரியர் முனைவர். **இ.கி.இராமசாமி**

(மேனாள் தலைவர், தமிழ் உயராய்வு மையம், யாதவர் கல்லூரி, மதுரை)



**கட்டுரைச் சுருக்கம்:**

*தொன்மம் என்றாலும் புராணம் என்றாலும் ஒன்று தான். கட்டுடைப்பு, மறுவாசிப்பு, மீட்டுருவாக்கம் என்பன ஒருபொருட் பன்மொழிகள். கட்டுக்கதைகளும், இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும், கற்பிதங்களும் நிரம்பிய தொன்மக் கதைகளைக் கட்டுடைத்துக் காட்டி அவற்றைத் திராவிடக் கருத்தியலுக்கு உகந்தாற் போலக் கையாண்டுள்ளார் கலைஞர் கருணாநிதி. இன்னும் சொல்லப்போனால், கட்டுடைப்பினை இலக்கிய உத்தியாக மாற்றியுள்ளார்.*

*வருண தர்ம சாத்திரம், மக்களை மேல்-கீழ் எனப் பிரித்து, ஆளும் வர்க்கத்திற்குத் துணையாக நிற்கின்றது. நளாயினி கதை பெண்ணடிமைத்தனத்தின் உச்சம். மறுபிறவி, நரகம், சொர்க்கம், ஏழ்பிறப்பு என்பதெல்லாம் கற்பிதங்கள். கருத்துப் புலப்பாட்டிற்காக அவற்றை வள்ளுவர் மேற்கோள்களாய்க் காட்டினார். புனிதம், நம்பிக்கை ஆகியவற்றைச் சொல்லிச் சேதுசமுத்திரத் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். ஆதனால் நாட்டுவளம் பாதிக்கப்பட்டது.*

*கலைஞர் நூற்றாண்டுக் கருத்தரங்குகளில் தொன்மங்களைத் தொட்டவர்கள் சிலர்; விட்டவர்கள் பலர். அதற்கான காரணம் புரிகின்றது. ஆனால் கலைஞர், தொன்மங்களைக் கட்டுடைத்துத் திராவிடச் சித்தாந்தம் காப்பதில் கடைசிவரை முனைப்புக் காட்டி வந்தார் என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.*

## அறிமுகம்:

சங்க இலக்கியங்களைப் பழந்தமிழ் இலக்கியங்கள் (Ancient Tamil Literature) என்றும் செம்மொழித் தமிழ் இலக்கியங்கள் (Classical Tamil literature) என்றும் அழைக்கின்றோம். அவற்றின் உள்ளீடு காரண காரியத்தோடு தர்க்கமுறைக்கு உட்பட்டதாகப் பெரிதும் அமைந்துள்ளது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில புராணக் கதைக் குறிப்புகளும், கட்டுக்கதைகளும், இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும், மூடநம்பிக்கைகளும் இடம்பெற்றுள்ளன. இடைக்காலத்தில் செய்யப்பட்ட புராணங்கள் யாவும் தொன்மங்களே, காப்பியங்களில் வரும் கிளைக்கதைகள் வெறும் கட்டுக்கதைகளாக உள்ளன. அவற்றில் நம்பகத் தன்மையுடைய செய்திகளைக் காண்பது அரிது.

## கருத்துப் போர்:

பெருந்தெய்வ வழிபாடுகளில் வர்ணபேதமும் சிறுதெய்வ வழிபாடுகளில் சாதியபேதமும் அழுத்தமாக இடம்பெற்றுள்ளன. ஆகமமுறையில் கட்டப்பட்ட கோயில் விழாக்களாயினும் நாட்டுப்புறத் தெய்வ விழாக்களாயினும் அவற்றில் தொன்மக்கதை நிகழ்ச்சிகளை நாடகமாகவும் ஆடல்பாடலாகவும் நிகழ்த்திக் காட்டுதல் வழக்கம். அவற்றில் கூடுதலாக மூடநம்பிக்கைகள் செருகப்படுகின்றன. அவற்றை எளிதாக மாற்றவோ தடுக்கவோ முடியாது. மாற்றம்

ஒன்று தான் மாறாதது என்ற விதி அங்கு செல்லுபடியாகவில்லை. அவற்றைப் பார்த்துப் பகுத்தறிவுச் சிந்தனையாளர்களும் அறிவியல் பார்வை உடையவர்களும் மனிதநேயர்களும் சுதந்திரச் சிந்தனையாளர்களும் சும்மா இருந்துவிடாமல் தொடர்ந்து கருத்துப்போர் நடத்தி வருகின்றனர்.

### வாக்கு அரசியல்:

தி.மு.க வின் தலைவராக இருந்துகொண்டு, முதலமைச்சராக இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தமது இலக்கியப் படைப்புகளிலும் மேடைப்பேச்சுக்களிலும் தொன்மங்களைக் கட்டுடைத்துக் காட்டத் தவறியதில்லை; தேர்தலில் வாக்குகள் குறைந்துவிடும் என்று அஞ்சியதில்லை. கலைஞரைப் போன்ற ஒரு கருத்துப் போராளியை உலகம் கண்டதில்லை. நாத்திகரான இராபர்ட் இங்கர்சால் தேர்தலில் நின்று வென்றவர் தான் என்றாலும் அவர் தனிக்கட்சி நடத்தவில்லை. உலகில் நாத்திகர் பலர் தங்கட்கு அரசியல் சரிப்பட்டு வராது என்று முடிவு செய்துவிட்டுப் பிரச்சாரப் பணியினைச் செய்தார்கள். ஆனால் கலைஞர் கட்சியை வளர்த்தல், அரசியலை நடத்துதல், ஆட்சி நடத்துதல் ஆகிய மூன்று நிலைகளிலும் அறிவியற் பார்வையோடு விளங்கினார். செயற்பட்டார். அதனால் அவரை வரலாறு மிகப்பெரிய ஆளுமையாகப் போற்றுகின்றது. வாக்கு, தேர்தல் ஆகியவை பற்றிக் கவலைப்படாமல் பகுத்தறிவைப் பரப்பினார்.

### சாதனை:

வருணபேதத்தை ஒழிக்க அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டமும், சாதியத்தைச் சாகடிக்கச் சமத்துவபுரத் திட்டமும், பெண்களுக்குச் சம சொத்துரிமை வழங்கும் சட்டமும் சாதாரணமானவை அல்ல. கலைஞர் கொண்டுவந்த இச்சட்டங்கள், சனாதனத்தின் இறுக்கமான பிடியுள் சிக்கிக் கிடக்கும் இந்தச் சமூகத்தை மீட்டெடுக்க அவர் செய்த சரித்திரச் சாதனைகள் ஆகும். எளிய மனிதர்களின் மண்டைக்குள் திணிக்கப்பட்ட புராணக் கதைகளைக் கட்டுடைத்துக் காட்டி அவர்களைத் திருத்த முனையும் போது அவர்கள் சினங்கொள்ளுகின்றனர். எரிச்சலடைகின்றனர். மதத்தைக் கையில் எடுத்துக்கொண்ட அரசியல்கட்சி அந்த உளவியலைப் பயன்படுத்தி ஆதாயம் அடைக்கின்றனர். ஆயினும் அதுகண்டு கலைஞர் தயங்கினார் இல்லை.

### சித்தாந்தம் காத்தல்:

இப்படிப்பட்ட சமுதாய அரசியல் சூழ்நிலையில் கலைஞர், கடவுட் கதைகளைப் பேசும் புராணங்களைக் கட்டுடைத்துக் காட்டி, மக்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் ஒருசேர அறிவூட்டித் திராவிடச் சித்தாந்தத்தைக் காத்துள்ளார்; வளர்த்துள்ளார். ஒரு கட்சி நடத்தப் பணம் வேண்டும்; பத்திரிகையும் தொலைக்காட்சியும் வேண்டும்; பொருளாதாரக் கொள்கை வேண்டும்; தியாகம் செய்யத் தொண்டர்கள் வேண்டும்; சாதியும் வேண்டும், மதமும் வேண்டும்; இன்னும் பல ஏந்தல்கள் வேண்டும். எல்லாவற்றையும் விடக் கொள்கை - சித்தாந்தம் (Ideology) மிகவும் முதன்மையானது. மக்களுக்குப் பிடித்த தத்துவங்களைச் சொல்லிக் கொண்டு மேல்சாதி மக்களின் நன்மைக்காகவே இதுவரை தேசியக் கட்சிகள் செயல்பட்டு வருகின்றன. இடதுசாரிச் சிந்தனையாளர்கள் மக்களுக்குக் கசப்பான மருந்தைக் கொடுத்து வருவதால் ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைக்க முடியவில்லை. இதில் கலைஞர் முற்றிலும் வேறுபட்டவர்; மாறுபட்டவர்.

### இலக்கிய உத்தி:

கலைஞரின் படைப்புலகத்தைச் சான்றாதாரமாகக் கொண்டு அவருடைய இலக்கிய ஆளுமையை மதிப்பிட முடியும். அதுவும் அவர் தொன்மங்களைக் கட்டுடைத்துக் காட்டி இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தித் திராவிடக் கருத்தியலை மிக நேர்த்தியாக அழகுற விளக்கியுள்ளார்; பேச நாவு கூசும் படியான, எழுதப் பேனா நடுங்கும் படியான, தொன்மக் கதைகளை நயத்தக்க நாகரிகத்தோடு சுட்டிக்காட்டிக் கட்டுடைத்து இலக்கிய உத்தியாக மாற்றியுள்ளார் கலைஞர்.

### சூத்திரனுக்குச் சோதனை:

அன்புடைமையின் வழிப்பட்ட அறநெறிகளான கொல்லாமை, புலால் உண்ணாமை ஆகியவற்றை அய்யன் திருவள்ளுவரை மையமிட்டு விளக்குகின்றார் கலைஞர். சீராளனைக் கறி சமைத்துச் சிவனுக்கு விருந்து வைத்த பிறகு தான் சிறுத்தொண்டனுக்குப் பக்தன் என்ற பதக்கம் மாட்டப்பட்டது. காரணம் இவர்களெல்லாம் தாழ்ந்த சாதிக்காரர்கள்.

**"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது**
**இன்னுயிர் நீக்கும் வினை" (குறள். 327)**

### கண்ணொளி வழங்கிய திட்டம்:

இலவசமாகக் கண்ணொளி வழங்கும் திட்டத்தை செயற்படுத்திய போது அவர் சுட்டியது வியாச பாரதத்தில் வரும் திருதராட்டினைத் தான். அறிவியல் வளர்ந்து கண்மருத்துவமனைகள் இருந்திருக்குமானால் திருதராட்டினுக்குக் கண்ணொளி வழங்கியிருக்க முடியும் என்பது கலைஞரின் நல்ல உள்ளம். அவனுக்காக இரக்கப்படுகின்றார்.

**"கண்ணொளி கெட்ட திருதராட்டிரன்**
**கடைசிவரையில் குருடனாகவே இருந்தான்."**

### ஆதிமூலமே!

குறளோவியத்தில் கலைஞர் தொன்மங்களை மிக நுட்பமாகக் கட்டுடைத்துக் காட்டுவார். போர் மறவனைக் கொம்பினால் குத்தித் தூக்கிய ஆண் யானை சேற்றில் சிக்கிவிடுமானால் அதனை நரியும் அடித்துக் கொன்றுவிடும் எனவரும் இடன் அறிதல் என்னும் அதிகாரத்தில் இடம்பெறும் அந்தக் குறள் வருமாறு:

**"காலாழ் களரின் நரிஅடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு" (குறள். 500)**

இந்தக் குறளைக் கொண்டு புராணிக யானையினையும் பகுத்தறிவு யானையினையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். தண்ணீர் குடிக்க ஆற்றில் இறங்கிய யானையை முதலை கவ்விக் கொண்டது. தப்பிக்க முடியாத யானை ஆதிமூலமே என்று சொல்லி நாராயணனை அழைத்தது. மகாவிஷ்ணுவான நாராயணன் வந்து யானையைக் காப்பாற்றினார் என்பர். இதனைக் கஜேந்திர மோட்சம் என்று சிலாகிப்பர். ஓர் அரசு மிகுந்த பலமுடையதாக இருந்தாலும் ஒரு சிறு பலவீனத்தால் பலமற்ற பகைவர்களால் வீழ்த்தப்பட்டுவிடும். இதன் மூலம் பகுத்தறிவாளர்கள் இடனறிந்து செயற்படவேண்டும் என்று கலைஞர் எச்சரிக்கின்றார்.

### ஏழுபிறப்பா?

ஏழுபிறப்பு மறுபிறப்பு என்பவைகளைக் கலைஞர் ஏற்கவில்லை. அவை குறித்த மக்கள் நம்பிக்கையினை அடிப்படையாக வைத்துத் திருவள்ளுவர் கருத்து உரைத்துள்ளார் என்பது கலைஞரின் ஆய்வுரை ஆகும்.

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள் 398)**

ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி அப்பிறவிக்கு மட்டுமல்லாமல் ஏழு பிறப்பிலும் உதவும்; பாதுகாப்பாக இருக்கும் என்பது பொதுவாகச் சொல்லும் பொருள். ஆனால், இந்தக் குறள் மீது கலைஞர் சுட்டியெழுப்பும் சிந்தனை புதியது: கல்வியைக் கற்பதனால் அனைத்துச் செல்வங்களும் கிடைக்கும் என்ற நோக்கில் எப்படியாவது கல்வியை மக்களிடம் புகுத்திவிட வேண்டும் என்ற ஆசையில் மிகைப்படுத்திக் கூறப்படுவதே 'ஏழ்பிறப்பு' என்ற சொல்லாடல் ஆகும். மனிதனைத் தீவினைகளில் ஈடுபடாமல் தடுத்திடவே மறுபிறவி என்ற பயம் காட்டப்பட்டது. இந்த நிலை வள்ளுவர் காலத்திலும் நிலவியது. அதனால் தான் கல்வியின் சிறப்பினைக் கூறவந்தவர் அதன் தேவையை எல்லை கடந்து புகழ்ந்திருக்கின்றார். (குறளோவியம், ப.24).

இதில் அழுத்தம் கல்விக்குத் தரப்படுகிறதே தவிர ஏழு பிறவிகளுக்கு அல்ல. இது கல்வியின் பெருமையினை மிகைப்படுத்தலேயன்றி ஏழுபிறப்பை ஒத்துக் கொண்டதாகாது. உலகில் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் பள்ளிக்குச் சென்று படிக்கின்றன. அவர்கள் முற்பிறவியில் கல்வியே கற்காத குழந்தைகளா? முற்பிறப்பு என ஒன்றிருந்து அப்போதே கல்வி கற்றிருந்தால் இப்போது கற்கத் தேவையில்லையே!

(குறளோவியம், ப.26) மரணத்தைக் கண்டு அஞ்சும் மனிதருக்கு மறுபிறப்பு குறித்த நம்பிக்கை ஒர் ஆறுதல். ஆனால் மறுபிறவி என்பது இல்லை என்று மண்டையில் அடித்தாற்போல கருத்துரைத்துள்ளார் கலைஞர். நம்முடைய புராணங்களில் மறுபிறவிக் கோட்பாடு மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றது. புராணிகருக்குப் பதிலடி கொடுப்பதோடு வள்ளுவரையும் கேள்விக்குள்ளாகிப் பார்த்துள்ளார், கலைஞர்.

சொர்க்கமா? நரகமா?

புண்ணியம் செய்தால் சுவர்க்கம் கிடைக்கும்; பாவம் செய்தால் நரகம் கிடைக்குமென்று காலங்காலமாய்க் கதைபேசும் கயவர்களை நம்பவேண்டாம் என்று விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றார். அதே சமயம்

**"பொருளுடையார்க்கு இவ்வுலகம்**
**அருளுடையார்க்கு அவ்வுலகம் என்று**
**இருளுடையார் நெஞ்சத்தில் விளக்கேற்றி வைத்தார்"**

என்று வள்ளுவரின் மெய்யுணர்வை எதிரொலிக்கின்றார்.

பொருள் இல்லையென்றால் இவ்வுலகில் வாழமுடியாது; மனிதநேயம் அல்லது கருணை இல்லையென்றால் மேலுலகமும் கிடைக்காது என்ற பொருளில்

**"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள். 247)**

என்ற குறட் சிந்தனை அமைந்துள்ளது.

அவ்வுலகம் என்பது மேலுலகம்/சொர்க்கம் என்பதைக் குறிக்கும். கலைஞர் சொர்க்கம் பற்றிய கருத்தியலைப் புறக்கணிப்பவர் என்றாலும் வள்ளுவரை விட்டுகொடுக்காமல் கவிதை பாடியுள்ளார்.

### மழைக்கு ஒப்பானவள்:

வள்ளுவர், தெய்வத்தைக் கூடத் தொழாமல் கணவனையே தெய்வமாக வணங்குகிறவள், மழை பெய் என்று சொன்னால் மழை பொழியும் என்ற பொருளில்,

**"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை" (குறள். 55)**

என்ற குறளை இயற்றவில்லை. 'பெய் என்று சொல்கிற நேரத்தில் பெய்கின்ற மழைக்கு ஒப்பானவள்' என்ற பொருளில் தான் இயற்றியுள்ளார் என்பதைக் கலைஞரின் உரை விளக்கும். அப்படிப் பெய்யவேண்டும் என்கிற நேரத்தில் பெய்கிற மழையாக அன்னை மணியம்மையார் இருந்து பெரியாருக்கு உதவினார் என்று எடுத்துக்காட்டு தருகின்றார் (அன்னை மணியம்மையார் இரங்கல் கூட்டத்தில் கலைஞர் உரை, விடுதலை, 31-03-1978). திராவிடச் சித்தாந்தத்திற்குக் குறளே உரம் என்பதற்கான பொருத்தமான சான்று இது.

### கதைப் படைப்புகளில் புராணக் கட்டுடைப்பு:

புராண இதிகாசங்களில் சொல்லப்படும் ஆபாசங்களும் இழிவுகளும் ஆள்வோரின் 'உள்நோக்கக் கற்பிதங்கள்' என்பது கலைஞரின் முடிந்த முடிபு. அறிவுக்குப் பொருந்தாத பொய்ம்மைகள்; பெண்ணடிமை சார்ந்த பிற்போக்குச் சிந்தனைகள்; காமவிளையாட்டின் குவியல்கள் என்பதை ஆராய்ந்து சொல்லுகின்றார். அவற்றுக்கான கதைக்களங்களைக் கலைநயத்துடன் அமைத்து விமர்சனம் செய்து விழுமியங்களை உணர்த்துகின்றார். 'கங்கையின் காதல்', 'ஒரிஜனிலில் உள்ளபடி', 'நளாயினி வாழமுடியாதவள்' போன்ற கதைகள் புராணக் கட்டுடைப்புக்குச் சரியான எடுத்துக்காட்டுக்கள் ஆகும்.

முதியவர்கள் இளம் பெண்களைத் திருமணம் செய்துகொள்ளக் கூடாது, முதல் மனைவி இருக்கும்போது இரண்டாம் மனைவி எதற்கு? என்பது 'கங்கையின் காதல்' கதையின் அடிக்கருத்து. சிவபெருமான் கைலாயத்தில் பார்வதியுடன் தூங்கிக் கொண்டிருக்கிறார். சிவனுடைய தலையிலுள்ள கங்கையும் சந்திரனும் காதல் கொள்ளுகின்றனர். 'உனக்கு அந்தக் கிழவனோடு பேசப் பிடிக்கிறதா?' என்று சந்திரன் கேட்க, 'கிழவனைப் பிடித்திருந்தால் உன்னை நான் ஏன் தேடுகிறேன்?' என்று சொன்னாள் கங்கை. மேலும் 'சந்திரா. நீ தினந்தோறும் பூலோகத்தைப் பார்க்கிறாய்; மக்களிடத்தில் இருதார மணம் வேண்டாம்; கிழவனுக்குப் பெண் கொடுக்காதீர்கள் என்று சொல்' என்கிறாள் கங்கை.

**புராணக் குப்பை:**

‘ஒரிஜனலில் உள்ளபடி’ என்னும் கதையில், அச்சகத்தில் பணிபுரியும் ஒரு தொழிலாளி புராணக்கதைகள் மீது கொண்ட வெறுப்பினைச் சொல்லி அந்த வேலையினை விட்டுவிட முடிவு செய்கிறான்.

புராணக் குப்பையை அச்சுக் கோப்பதை விடத் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துகொள்வது எவ்வளவோ மேல் என்று புலம்புகிறான். மகாபாரதக் கதையில் ஐவருக்குத் தேவியாகவும், ஆறாவது கணவனாகக் கர்ணன் மேல் ஆசை கொண்டவளாகவும் பாஞ்சாலி படைக்கப்பட்டுள்ளாள். இப்படியான கதைகளைச் அள்ளிவிடும் பக்திச் சொற்பொழிவாளர்கள் பகல்வேடதாரிகள். ஒரு சாமியாரைப் பற்றிய உண்மையை அப்படியே அச்சேற்றியதாக அத் தொழிலாளி கூறுகிறான்.

**நளாயினி:**

நளாயினி என்னும் கதையும் புராணக் கட்டுடைப்பாக வெளிப்படுகின்றது; குஷ்டரோகியாகிய (தொழுநோய்) கணவனைக் கூடையில் சுமந்து சென்று தாசி வீட்டில் இறக்கிவிடும் நளாயினியைப் ’பதி சொல் தவறாத பத்தினி’ என்று புராணங்கள் கதைக்கின்றன. ஆனால் நளாயினியோ தன் மன உணர்வை இதயா என்ற பெண்ணிடம் பேசுவதைப் பாருங்கள்:

நளாயினி: "குஷ்டரோகம் பிடித்த கணவனோடு கூடிக்கிடக்க எனக்கு விருப்பமில்லை. அவனோ என்னை ஆசையோடு அணைக்க அழைக்கிறான். அவனை அணைக்க என் கை நடுங்குகிறது. ஆகவே தான் அவனைத் தாசிவீட்டுக்குக் கூடையில் வைத்துத் தூக்கிப் போனேன். என் அழகிற்குப் பங்கம் வராமல் அவனுடைய ஆவலைத் தீர்க்க உதவினேன்''. நாளாயினியின் பேச்சைக் கேட்டு அவள் தான் பத்தினி என்று பாராட்டினாள் அவள் தோழி இதயா. மீண்டும் நளாயினி தனக்குப் ''பத்தினிப் பட்டம் போதாது; பருவக்களை சொட்டும் தன் சுகவாழ்வுக்கு வழி சொல்" என்கிறாள்.

இதயா: "வழி சொல்லுகிறேன். நான் ஒரு புதுவரம் தருகிறேன். அடுத்த ஜென்மத்தில் திரௌபதியாகப் பிறக்கப் போகிறாய். ஐந்து கணவன்மார்களோடு ஆனந்தமாக வாழப் போகிறாய்''. இதயா சொல்லியதைக் கேட்டு நளாயினி ஆனந்தக் கண்ணீர் விட்டு அவளைக் கட்டித்தழுவிக் கொண்டாள். புராணக் கதைப்படி நளாயினி தான் திரௌபதியாகப் பிறந்தாளாம். பொருந்தா மணத்தின் பெண்ணியக் குரலாகக் கலைஞர் இத்தொன்மத்தைக் கட்டுடைத்துக் காட்டுகின்றார். கற்பின் குறியீடாகச் சொல்லப்பட்ட நளாயினியின் கதை பெண்ணடிமைத்தனத்தைக் காட்டுகிறது என்பது கலைஞர் கண்ட முடிபாகும். கற்புடைய பெண் கட்டளையிட்டால் சூரியனும் உதிக்காது; மனைவி கணவன் பெயரைச் சொல்லுவது தவறு என்பதையெல்லாம் மூடநம்பிக்கைகள் என்கின்றார்.

**வாழ முடியாதவர்கள்:**

சின்னசாமி என்ற நாற்பது வயதுடைய காவலர் மறுமணம் செய்துகொள்ள பலவகையில் முயன்றும் பெண் கிடைக்கவில்லை. திலோத்தமை என்ற படத்தைப் பார்த்துவிட்டு வந்து, அந்தக் கதையில் உள்ளது போலத் தான் பெற்ற மகளுடன் உறவு கொள்ளுகிறான். பிரம்மா பேரழகி திலோத்தமையைப் படைத்தார். படைத்தவரே அவளை அடைய ஆசை கொண்டார் என்பது புராணம். அந்தப் புராணப் படத்தைப் பார்த்துவிட்டு வந்த ஒரு தந்தை செய்த காரியம் மகா பாவம் என்று பழிக்கின்றார். முறையற்ற உறவுகளுக்கு மூல காரணமான புராணங்கள் வேண்டாம் என்ற கருத்தை உணர்த்துவதாகக் கதையினை முடித்துள்ளார் கலைஞர்.

மனுதர்மம் - கட்டுடைப்பு:

வருணபேதம் பேசும் மனுதர்மத்தைத் தனது கவிதை மழையில் கட்டுடைத்துக் காட்டுவதில் கலைஞருடைய தனித்திறனைப் பார்க்க முடியும்.

**“தலையில் பாயும் இரத்தந் தான்**
**காலுக்கும் பாய்கிறது; ஆனாலும் பிரமனின்**
**தலையில் பிறந்தோர் உயர்ந்த குலத்தோர் என்றும்**

**தொடையிற் பிறந்தோர் வைசிய வருண மென்றும்**
**காலில் தோன்றிய நாம் கடைநிலைச் சாதி என்றும்**
**வகுத்தனர் வருணாசிரம தருமம் என்றால்**
**பிரமனின் இரத்த ஓட்டத்தில் மட்டும்**
**ஏன் இத்தனை கோளாறு?"**

கடவுளின் பெயரால் நம்ப வைக்கப்பட்டு அறிவுக்கும் இயற்கைக்கும் பொருத்தமில்லாத சாதி பற்றிய சிந்தனையைப் பகுத்தறிவால் கேள்விக்கு உட்படுத்துகின்றார். பிரமனின் இரத்த ஓட்டத்தில் கோளாறு இருப்பதாகச் சொன்னது புராணப் புரட்டினைப் புரட்டிப்போட்ட விடயமாகும். அத்தோடு விட்டுவிடாமல் பிரமன் ஆணா? பெண்ணா? என்ற ஆராய்ச்சிக்கும் போய்விட்டார்.

**"பிரம்மன் என்ன ஆணா? பெண்ணா?**
**பெண் என்றே வைத்துக் கொண்டாலும்**
**உடல் முழுவதும் கருப்பையைத்**
**தைத்துக் கொண்டா பிள்ளை பெற்றார்?**
**புளுகித் தொலைப்பதற்கும் ஓர் அளவுவேண்டும்**
**பொல்லாத புராணங்கள் அபத்தமென அறிதல் வேண்டும்'**

(கலைஞர் கவிதைமழை, சிறை பதிப்பகம், 2004, ப. 527)

### மோசடிகள்:

புராணக் கதைகளின் சாரத்தை எடுத்துக்காட்டி அவற்றை நேரடியாக மறுதலிக்கும் துணிச்சலும் கலைஞருக்கு உண்டு. நரகம், சொர்க்கம், நான்முகன் படைப்பான், நாராயணன் காப்பான், சிவன் அழிப்பான் என்பவையெல்லாம் நம்பமுடியாத பொய்கள் என்பார். இவற்றை நம்பும்படியாகச் சொல்லி மக்களை ஏமாற்றுவதை மூடநம்பிக்கை மோசடிகள் என்று குறிப்பிடுகின்றார்.

**"மூடநம்பிக்கை மோசடிகள் ஒழிய வேண்டும்**
**நரகம் சொர்க்கம் என்பதெல்லாம் நமது கற்பனையாம்**
**நால்வருணம் என்பதெல்லாம் பொருந்தாக்கூற்று**
**கோயில் பூசைக்குக் குருக்களாய்ப் போனால் சூத்திரனைக் கோபிக்குமோ சாமியாடா? கோயிலை விட்டுத்தான் போகுமாடா?"**

(மேலது, ப. 957)

### எழுத்தாளன் ஏகலைவன்:

கலைஞருக்குக் கதை எழுதுவதில் தனித்திறன் உண்டு. நளாயினி கதையை விட 'ஏகலைவன்' என்ற பெயரில் அவர் எழுதிய கதை மிகுந்த வரவேற்பினைப் பெற்றது. கலைஞரின் ஏகலைவன் புராணக் கதையில் வருபவன் அல்லன்; துரோணாச்சாரியாரிடம் விரலை ஏமாந்தவனும் அல்லன். அவனைக் குறிப்பிடும் ஒவ்வோர் இடத்திலும் கலைஞர் தான் விரும்பியபடி அவனைச் சித்தரித்துள்ளார். புராண ஏகலைவனுக்கு மாற்றானவன் எழுத்தாள ஏகலைவன் என்று பெருமிதந் தோன்ற எழுத்தாளனைப் போற்றுகின்றார். கண்ணகி சிலையைப் பார்த்தவுடன் எழுத்தாளன் ஏகலைவன் மனத்தில் ஒரு சிறுகதைக்கான கரு தோன்றிவிடுகிறது. "தமிழ்நாட்டில் எத்தனை கண்ணகிகள் காவல் நிலையத்தில் சே! இதையெல்லாம் பத்திரிகைகளும் உண்மைக் கதையாகவே எழுதித் தீர்த்து விட்டனவே". எனவே தன் சிறுகதையில் மீண்டும் சொல்ல விரும்பாமல் விட்டுவிடுவதாகக் குறிப்பிடுகின்றார்.

ஏகலைவனுடைய அம்பினை விடச் சமூக அக்கறை கொண்ட எழுத்தாளனின் பேனா வலிமையானது என்கின்றார். ஏகலைவனைப் போல எழுத்தாளன் ஏமாந்தவன் அல்ல என்ற துணிச்சலை வெளிப்படுத்துகின்றார். அந்த எழுத்தாளன் வேறு யாருமில்லை, கலைஞர் தான்!

### புரோகித மறுப்புத் திருமணங்கள்:

"சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும்" என்று அறிஞர் அண்ணா சட்டம் இயற்றிய போது மலரும் நினைவுகளில் ஆழந்து போனார் கலைஞர். புரோகித மறுப்புத் திருமணம் செய்துகொண்ட இருபது தம்பதிகளின் படத்தை ஒரு காலண்டரில் பார்த்தார். அப்போது ஏற்பட்ட தாக்குரவைப் (influence) பின்வருமாறு பதிவு செய்தார்:

"ஆண்டவனுக்குக் கோபம் வரும்; அருந்ததி இல்லாமல், அக்கினி இல்லாமல், அட்டதிக்குப் பாலகர்கள் இல்லாமல், அய்யர் வராமல் திருமணமா?" என்ற பழமைவாதிகள் பேசியவை அவர் நினைவலைகளில் வந்து மறைந்தன. (கி.வீரமணி,

(தொகு.ஆ), தாய்வீட்டில் கலைஞர், 2023, திராவிடர் கழக வெளியீடு, ப.78)

### நந்தனார் தவிப்பு:

தில்லைக் கோயிலுக்குள் செல்லமுடியாமல் தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த நந்தன் தவித்தான். 'உள்ளே வா' என்று சொல்லுகிற துணிச்சல் தில்லையில் இருக்கிற ஆண்டவனுக்கே ஏற்படவில்லையென்றால் அவர் யாருக்காகப் பயந்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். "நான் படைத்த மனித குலத்தில் உயர்ந்தவன் என்ன தாழ்ந்தவன் என்ன? - எதுவுமே கிடையாது. நந்தா! நீ வா உள்ளே என்றல்லவா அழைத்திருக்க வேண்டும்" என்பது கலைஞரின் கேள்வி (மேலது, ப.85). பெரியபுராணம் சொல்லிய தொன்மத்தை இப்படிக் கட்டுடைத்துக் காட்டுகின்றார் கலைஞர்;

### பிள்ளையார்?

05.10.1980இல் புதுவையில் பெரியார் சிலையைத் திறந்து வைத்து ஆற்றிய உரையில் வடநாட்டுப் பிள்ளையாரையும் தென்னாட்டுப் பிள்ளையாரையும் ஒப்பிட்டுக் காட்டினார் கலைஞர்:

"இந்தியாவில் பிள்ளையாருக்கு ஒரே இலக்கணம் உண்டா? தென்னகத்தில் இருக்கிற பிள்ளையாருக்கு - தமிழ்நாட்டில் இருக்கிற பிள்ளையாருக்கு மனைவி கிடையாது; அது பிரம்மச்சாரிப் பிள்ளையார். இதே பிள்ளையாரை வடநாட்டில் போய்ப் பார்த்தால் இரண்டு மனைவிகளோடு உட்கார்ந்து இருக்கிறார். ஏக இந்தியா என்கிறோம், ஏக இந்தியாவில் இரண்டு பிள்ளையாரா? வடக்கே சுப்பிரமணியர் பிரம்மச்சாரி; இங்கே சுப்பிரமணியருக்கு இரண்டு பெண்டாட்டி!

இப்படி கடவுள்களுக்குள்ளேயே ஒருமைப்பாட்டை உண்டாக்க நம்மால் முடியவில்லை. மக்களுக்குள் நாம் எப்படி ஒருமைப்பாட்டை உண்டாக்கப் போகிறோம்? எண்ணிப் பார்க்க வேண்டாமா?" (மேலது. ப. 103) இந்தக் கேள்வி 'ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே Ration' என்றெல்லாம் கூவும் இன்றும் பொருத்தமானது.

பாரதியின் பாஞ்சாலி சபதத்திலிருந்து ஒரு சூழலை எடுத்துக் கலைஞர் விளக்கம் (Interpretation) தந்ததைப் போல வேறு யாராலும் எண்ணிப் பார்க்க முடியாது. தருமன் பாஞ்சாலியை வைத்துச் சூதாடியது தவறு. தருமன் பாஞ்சாலியை எந்தக் கையால் வைத்துச் சூதாடினானோ அந்தக் கையை எரிப்போம்; நெருப்பு கொண்டு வா தம்பி என்று பீமன் அர்ச்சுனனிடம் சொன்னான். சொன்னானே தவிர, அர்ச்சுனன் நெருப்பைக் கொண்டு வந்தால் தருமனின் கையை எரித்து விடுவானா? எரிக்க மாட்டான். ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் போது இருவேறு அணுகுமுறையினைக் கொண்ட நண்பர்களுக்குக் கலைஞர் சொன்ன அறிவுரை இது; (மேலது, ப.431).

### இராமனுக்கு எதிரி:

1974இல் அலகாபாத்தில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டிற்குக் கலைஞர் சென்றிருந்தார். அங்கு அந்த மாநாட்டு எதிர்ப்பாளர்கள் கலைஞர் வருவதை அறிந்து கொண்டு அவருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஊரெல்லாம் சுவாரொட்டி ஒட்டியிருந்தார்கள்.

"கருணாநிதி ராமனுக்கு எதிரி" என்பது தான் அச் சுவரொட்டி வாசகம் என்று சொன்னார்கள். மாநாட்டில் பேசும்போது தன் கருத்தைச் சொன்னார் கலைஞர்;

"அலகாபாத் நகரத்தில் எனக்குத் தெரியாத பாஷையில் இப்படிச் சுவாரொட்டி அச்சடித்து ஒட்டப்பட்டுள்ளது. கருணாநிதி ராமனுக்கு எதிரி என்று ஒட்டி இருக்கிறார்களாம். அவர்கள் புராணம் கூடத் தெரியாதவர்கள். ராமனுக்கு எதிரி ராவணனே தவிர நானல்லவே" (விடுதலை 13.06.1982).

1971 பொதுத் தேர்தலின் போது இராமன் படத்தைச் செருப்பால் அடித்ததைப் பத்திரிகைகள் பெரிய செய்தியாகப் போட்டுப் பரபரப்பை எற்படுத்தின. ஆனால் தி.மு.க 181 இடங்களைப் பிடித்து இமாலய வெற்றி பெற்றது. தி.க-வுக்கும் தி.மு.க-வுக்கும் இராமனை எதிரியாக எத்தனை காலம் வைத்திருப்பார்களோ!

### தொன்ம ஆதிக்கம்:

புராண இதிகாசக் கதைகளைக் கட்டுடைத்து மூடநம்பிக்கைகளை விட்டொழிக்கத் தனது பேச்சையும் எழுத்தையும் பயன்படுத்தி வந்த கலைஞர், சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்தியபோது கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்ள நேர்ந்தது. சேதுபந்தனம் இராமன் கட்டிய பாலமாகும். அதனால் அங்கே எந்தத் திட்டத்தையும் செயற்படுத்தக் கூடாது என்று அடிப்படைவாதிகள் எச்சரித்தனர். வேதாந்தி என்ற வடநாட்டுச் சாமியார் கலைஞரின் தலையைச் சீவிக்கொண்டு வருவோருக்கு ஒருகோடி உரூபா சன்மானம் தருவதாக அறிவித்தார். அந்த அச்சுறுத்தலைக் கலைஞர் நகைச்சுவையாக எடுத்துக்கொண்டார். சேதுபந்தனம் கட்டிய இராமன் எந்தப் பொறியியற் கல்லூரியில் படித்தான்? என்று கேட்டார். மேலும் தன்னுடைய தலையைச் சீவுவதற்கு ஐந்து உரூபா சீப்பே போதுமே. அதையும் மீறிச் சீவினால் என் தலையிலுள்ள மயிர் கூடத் தேராது என்று எள்ளி நகையாடினார். சிங்கள அரசை விட, இந்தியாவிலுள்ள மத அடிப்படைவாதிகள் போட்ட முட்டுக்கட்டையால் தான், சேதுசமுத்திரத் திட்டம் மூலம் தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய பொருள்வளம், வேலைவாய்ப்பு யாவும் போயின. அத்திட்டத்திற்கு இராமர் பாலம் என்றே பெயர்சூட்டி நிறைவேற்றும்படி கலைஞர் வேண்டினார்; பயனில்லை. நூற்றாண்டுக் கனவுத் திட்டம் தடைபட்டுப் போனது. தொன்மங்களைக் கட்டுடைத்து அறிவியற் பார்வையினை ஊட்டினாலும் எடுபடவில்லை. மக்களும் ஒன்றிய அரசும் ஒத்துழைப்பு தரவில்லை. அதனால் தமிழ்நாட்டுக்கும், ஏன் இந்தியாவுக்கும் இழப்பு தான். தொன்மங்களை நம்பும் வரை தொல்லை தான்; நம்பாத வரை நன்மை தான்.

**“நன்று புராணங்கள் செய்தார் – அதில்**
**நல்ல கவிதை பலப்பல தந்தார்**
**கவிதை மிகநல்ல தேனும் – அக்**
**கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்”**

**(பாரதியார் கவிதைகள், சக்திவெளியீடு 1957, ப. 576)**

**“சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்**
**சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்”**

என்றெல்லாம் நாம் கொண்டாடுகிற பாரதியார் பாடினார். தொன்மங்கள் குறித்து இப்படிப் பாடிய பாரதியின் கனவாவது மெய்ப்படட்டும். கலைஞர் கூறுவது போல் மக்கள் தொன்மங்களிலிருந்து விடுபட்டாலொழிய நாட்டுக்கு விடியல் இல்லை.

### குறிப்புதவி நூல்கள்:


1. கலைஞர், குறளோவியம், பாரதி பதிப்பகம், சென்னை, 2008 (7ஆம் பதிப்பு)
2. கலைஞர், கவிதைமழை, சிறை பதிப்பகம், சென்னை, 2016.
3. கலைஞர், சங்கத்தமிழ், திருமகள் நிலையம், சென்னை, 1987.
4. கலைஞர், கலைஞர்; கருணாநிதியின் சிறுகதைகள், பாரிநிலையம், சென்னை, 1971.
5. கலைஞர், திருக்குறள் உரை, திருமகள்நிலையம், சென்னை, 2010.
6. கலைஞர், கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, 1977
7. வீரமணி, கி., (தொகு.ஆ.), தாய்வீட்டில் கலைஞர், திராவிடர் கழக வெளியீடு, சென்னை, 2023.


### ஆசிரியர் குறிப்பு:


*பேரா. இ.கி.இராமசாமி அவர்கள், கோவை வெள்ளலூரில் பிறந்தவர். 1969-இல் தொடங்கி 2002 வரை, 33 வருடங்கள் கல்லூரிப் பேராசிரியராக, துறைத்தலைவராக, மதுரை யாதவர் கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவருடைய மேற்பார்வையில் 41 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும், 9 பேர் முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர். பகுத்தறிவுச் சான்றிதழ் மற்றும் பட்டய வகுப்புகளைக் கடந்த 25 ஆண்டுகளாக நடத்தி மாணவர்களின் பகுத்தறிவுச் சிந்தனைகள் வளர உதவி வருகிறவர். இவர் தம் துணைவியார் மு. கசுத்தூரிபாய் அவர்களும் கல்லூரிப்*

பேராசிரியர். மதுரை யாதவர் கல்லூரியில் பயிரியல் துறைத்தலைவராக இருந்து ஓய்வு பெற்றவர்.

'தமிழில் பாயிரங்கள்', 'திராவிட இயக்கச் சிந்தனைகள்', 'தமிழின் சிரிப்பு', 'திருக்குறள் நெறியும் பகவத் கீதையும்', 'காந்தியடிகளும் பாரதிதாசனும்', 'காந்தியடிகளும் கோராவும்', 'சமூகப் புரட்சியாளர்கள்' போன்ற நூல்களின் ஆசிரியர். 'பாரதிதாசன் பன்மணித்திரள்', 'முப்பாலின் ஒப்புரவு' என்னும் நூல்களின் பதிப்பாசிரியர். 'குறள் கூறும் ஊழும் கூழும்', 'திருக்குறளில் தவமும் துறவும்', 'திருக்குறளில் காமம்' என்னும் நூல்களின் தொகுப்பாசிரியர்.

2002-இல் பணி ஓய்வு பெற்ற பின்பும் தொடர்ந்து பல்வேறு இயக்கப் பணிகளை, தமிழ்ப் பணியைத் தொடர்ந்து செய்துவரும் இவர், அரிய கருத்துகளைச் சுவைபட மெய்ப்பாடுகளுடன் எளிய மொழிநடையில் எடுத்துரைக்கும் நாவன்மை உடையவர். மதுரை, திருச்சி வானொலிகளில் பல்வேறு உரையரங்குகளில் பங்கேற்றுப் பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

சங்க இலக்கியம், காப்பியம், மரபிலக்கணம், இக்கால இலக்கியம், ஆகிய இலக்கிய வகைமைகளில் ஆய்வும் தோய்வும் உடையவர். தந்தை பெரியாரின் கொள்கை வழி நின்றும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் தமிழ் உணர்வோடு ஒன்றியும் விளங்கும் பெருமைக்குரியவர். சாதி சமய மறுப்புத் திருமணங்களும், விதவைத் திருமணங்களும் நிகழ்த்தி வைத்த சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனையாளர். தமிழியல் உணர்வுடைய மாணவப் பரம்பரையை உண்டாக்கிய பெருந்தகையர்.

## *I belong to the Dravidian stock*

"I claim Sir, to come from a country, a part in India now, but which I think, is of a different stock, not necessarily antagonistic. **I belong to the Dravidian stock.**

**I am proud to call myself a Dravidian.** That does not mean that I am against a Bengali or a Maharashtrian or a Gujarati. As Robert Burns has stated, "A man is a man for all that".

I say that I belong to the Dravidian stock and that is only because I consider that the **Dravidians have got something concrete, something distinct, something different to offer** to the nation at large".

*(maiden speech in the Indian Parliament – Council of States (Rajya Sabha) – Apr 1962)*

**Dr. C.N. ANNADURAI**

Hon'ble Chief Minister of Madras State & Tamil Nadu (subsequently renamed), Union of India (1967-69).